Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00


දිනමුරසු වාරමලර්

நவ. 09 - 15, 2006

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 686





## ஏ-9 வீதியும் சமாதானத்தின் தலைவிதியும்!



## ஏமாற்றுப் பேர்வழிகளிடம் ஏமாறாதீர்கள்!

## கிழக்கில் காத்திருக்கும் அதிர்வுகள்!





## அற்புதனின் நினைவுகளில்....!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு



## வாலறிவன் வடிவம் யாது?

மாறுபட்ட சமய வழிபாடுகள் தோன்றி மறைந்து போன வரலாறுகள் அனேகம் உண்டு அவைகளில் மாறுபட்ட அனுஷ்டானங்கள், அதனூடாக வேறுபட்ட சிந்தனை, செயற்பாடுகள் எல்லாம் இன்றும் காணக் கூடியதாக இருக்கின்றன. இவைகளில் அதாவது, வேறுபட்ட அனுஷ்டானக் கொள்கையில் ஓர் உண்மைத் தன்மை இருக்குமே அதுதான் என்ன? என்ற கேள்வி எழுமாயின் அதற்கு விடை காண்பது மிகக் கடினம். ஆயினும், மனித இயல்பு பகுத்தறிவுக் கொள்கையோடு சிந்திக்க வேண்டியதொன்று என்பதை மறந்ததன் காரணமாக சில வேண்டாத செயற்பாடுகள் தோன்றக் காரணமாயின என்பதும் வெளிப்படை.

உதாரணத்துக்கு, "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றன் தொழா அர் எனின் என்பதன் பொருளை உற்று நோக்குவோமாயின் வாலறிவன் எனக் குறிப்பிட்டிருப்பது யாரை? என்ற கேள்வி தோன்றும். இதை இன்னும் கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்தால் உண்மை எது, பொய் எது என்னும் கேள்வி மேலெழும். மொத்தத்தில் அறத்தை வலியுறுத்துவதற்கான நோக்கமே தெய்வ வழிபாடு என்னும் தெளிவு பிறக்கும். அறமே இறைவன் என்பதற்கு இன்னும் பல சான்றுகள் கூறலாம்.

**என். எஸ். ராஜா, தம்பலகமம்.**

## நேர்வழி நடப்போம்!

மரணம் என்பது பாவத்தின் சம்பளம் என்று கூறப்படுகிறது. இறவா வரம் பெற்றவர் எவரும் இவ்வுலகில் இல்லை. ஆக்கம் என்று ஒன்று இருந்தால் அழிவும் இருக்கத்தான் செய்யும். அதுபோல் பிறப்புக்கும், இறப்பு என்று ஒன்று உண்டு. இந்தப் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்டதுதான் வாழ்க்கை.

அந்த வாழ்க்கையில்தான் எத்தனை பிரச்சினைகள், பிணக்குகள், தொல்லைகள், துன்பங்கள். கால் போன போக்கில் நடந்து, மனம் போன போக்கில் வாழ்ந்தால் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது.

இறையச்சம், தேவன் மீது விசுவாசம், தூய மனம், தெளிந்த சிந்தனையுடன் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நேர்வழி நடந்து, மனத்தாலும் தீது எண்ணாமல் உயிர்களிடத்தில் அன்பு வைத்து நேரிய வாழ்வுடன் சீரிய முறையில் வாழ்ந்தால் தேவனாகிய கர்த்தர் எமது இன்னல்களுக்குத் தீர்வு தருவார். நல்வழியில் நடந்து, தன் மீது விசுவாசம் வைத்துள்ள பிள்ளைகளையே தேவன் பெரிதும் விரும்புகிறார். அவரைத் துதிப்போம்! ஆறுதல் பெறுவோம்!

**-எம்.ஏ.எஸ்.சண்முகம், வத்தளை.**

## பாவ மன்னிப்பு (தவ்பா)த் தேடுங்கள்!

நமக்கு ஏற்படுகின்ற சிக்கல்கள், தொல்லைகள், நெருக்கடிகள் அனைத்துக்கும் அடிப்படைக் காரணங்கள், நம் கைகளால் நாம் தேடிக் கொள்ளும் பாவங்களேயாகும். நம்முடைய இன்னல்கள் அகல வேண்டுமானால் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருதல் (தவ்பா செய்தல்) அவசியம் ஆகும்.


'நான் பாவச் செயல்களை இனியும் செய்யமாட்டேன்' என்பதாக அழுது கண்ணீர் வடித்து, அல்லாஹ்விடம் மன்றாடி பாவ மன்னிப்புக் கோரினால், அவன் மன்னிக்கப் போதுமானவன். இத்தாழ்ச்சியான, பணிவான வேண்டுதலால் இறைவனின் சினம் நீங்குகிறது. அவனின் அன்பு நம்மீது பொழிகின்றது.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான். "நிச்சயமாக, உங்களில் எவராயினும் அறியாமையின் விளைவாக தீமை செய்துவிட்டு, பின்னர் அதற்காக பச்சாதாபப்பட்டு (அதிலிருந்து விலகி தன் நடத்தையைச்) சீர்திருத்திக் கொண்டால் (அக் குற்றத்தை இறைவன் மன்னித்துவிடுவான்) நிச்சயமாக, அவன் மன்னிப்போனும், கிருபையுடையோனுமாய் இருக்கிறான்."
-6:54

**-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07**

---

## கவிதைப் போட்டி இல.683




**பரிசுக்குரிய கவிதை**

### உளச்சுத்தம்

சுத்தம் செய்யப்பட
வேண்டியது - வீதியல்ல...
நாட்டுத் தலைவர்களின்
உள்ளம்!
அன்றுதான், யுத்தமில்லா
சுத்த பூமியும்...
குற்றமில்லா
புத்த பூமியும் மலரும்!

*- பை. யூசுப்,*
*கிராண்ட்பாஸ்*

## கவிதைப் போட்டி இல.686



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 14.11.2006.

கவிதைப் போட்டி இல.686
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### கிழிந்ததில் தேடி!

சமாதான ஒப்பந்தங்களை
எழுதி எழுதி
கிழித்துப் போட...
அதைப் பொறுக்கி எடுத்தே
சமாதானத்தை
தேடுகின்றேன்!

*-இரா.தாரணி,*
*நுவரெலியா.*

### நேரம்

துப்பாக்கி ஏந்தியிருந்தால்
இந்நேரம்
துவம்சமாகியிருப்பேன்...!
துப்புரவு செய்வதனால்
என்னவோ துடுக்குத்தனமாக
இருக்கன்...!

*-அ.ரவி,*
*மட்டக்களப்பு.*

### முதலில்...

இத்தேயம்
உருப்பட
முதலில்
பெருக்கித் தள்ளு
புழுத்துப் போன
இனவாத அழுக்கை.

*-அ.சந்தியாகோ,*
*கண்டி.*

### சட்டப்படி குற்றம்!

சிறுவர்களை
வேலைக்கமர்த்துவது
சட்டப்படி
குற்றமென்று
ஊருக்குச் சொல்வார்!
போய்ப் பார்த்தால்
அவர் வீட்டிலுள்ள
அழுக்குகளை
இப்படியொரு
பையன்
தேய்த்துக்
கொண்டிருப்பான்!

*-பொன்.நவநீதன்,*
*பாண்டியூர்.*

### எங்கும் குப்பை!

மன்றத்திலும் மேடையிலும்
நம் தலைவர் கொட்டிய குப்பைகளை
நாம் வலிந்து கூட்டுகின்றோம்
நகரமெல்லாம் குப்பை
நம்மவர் மனமெல்லாம் குப்பை
கூட்டிக் கழித்தால்
இவ்வுலகமே குப்பை!

*-சீ.தங்கவடிவேல்,*
*மட்டக்களப்பு.*

### துப்புரவு செய்பவர் யார்?

பாதையைத்தான் என்னால்
துப்புரவு செய்ய முடியும்.
தினம், தினம்
அப்பாவிகளைக்
கொன்றொழிக்கும்
பாவிகளின் மனத்தை
துப்புரவு செய்பவர் யார்?

*-ஏ.ஜே.பாத்திமா பஸ்னா,*
*கொட்டிகாவத்த.*

### தயாராகிவிட்டேன்!

நம்மவர்களின்
இணக்கப்பாட்டிற்கு
முன்பே
தயாராகிவிட்டேன்!
அடுத்த சுற்று
ஜெனீவா பேச்சு
வார்த்தைகளின்...,
குப்பைகளை
கூட்டித்தள்ளுவதற்கு!!

*-மீராமுகைதீன் ஹாலித்,*
*ஏறாவூர் - 03 ஏ.*




# உங்கள் பக்கம்

## பட்டிருப்பு தேசிய பாடசாலையை மேம்படுத்த உதவுங்கள்!

பட்டிருப்பு கல்வி வலயத்தில் தேசிய பாடசாலையாக விளங்கும் இப்பாடசாலை கல்வி அமைச்சினால் தேசிய பாடசாலையாக தர உயர்வு பெற்றதாகும். இது பட்டிருப்பு தமிழ்ப் பிரதேசத்தில் ஒரே ஒரு தேசிய பாடசாலையாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

இத் தேசிய பாடசாலையை மற்றைய தேசிய பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது பல தேவைகள் நிறைந்ததாகவும் வளர்ச்சி குன்றியதாகவுமே காணப்படுகிறது.

தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டாலும் இதுவரை காலமும் ஆசிரியர் தரப்படுத்தப்படவில்லை.

தொண்டராசிரியர்களும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களுமே இப்பாடசாலையில் கூடுதலாகக் கல்வி கற்பிக்கின்றனர்.

க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கு விஞ்ஞானம், வர்த்தகம், அழகியல் பாடங்கள் போதிக்கப்பட்டாலும், பொருத்தமான தகைமை வாய்ந்த ஆசிரியர்கள் இல்லாமையால் மாணவர் வேறு இடம் சென்று ஆசிரியர்களைத் தேடி ரியூஷன் பெற வேண்டியுள்ளது.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களுக்குக் கல்வி புகட்ட பொருத்தமான ஆசிரியர் இல்லாமையால் கடந்த காலங்களில் நல்ல பெறுபேறுகளை மாணவர்கள் பெறவில்லை.

இலவச பாட நூல், சீருடை பெற்றுக் கொடுப்பதிலும் தாமதமும் ஒழுங்கற்ற நிலையுமே காணப்படுகிறது.

தகைமை வாய்ந்த அதிபர் இப்பாடசாலைக்கு இன்னும் நியமனம் பெறவில்லை. மாகாணக் கல்வி அமைச்சோ, பாராளுமன்றப் பிரதிநிதிகளோ இது விடயம் தொடர்பாக எதுவித அக்கறையும் கொண்டதாகத் தெரியவில்லை.

தயவு செய்து உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இப்பாடசாலையை மேம்படுத்துமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

*-ரி.சுப்பிரமணியம், எஸ்.எஸ்.மனோகரன்,*
*களுவாஞ்சிகுடி.*

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

அன்பின் முரசுக்கு;

சிரிக்கும் மானிடா நெஞ்சில் சிந்தனை எழுப்பி, ஞானமூட்டும் அன்பின் சின்னம், அலையாத வடிவம் (அன்பின் தினமுரசு) வானவில் தாங்கும் பல வண்ணங்கள் போல கோடித் தகவல்களை தாங்கி, ரசிகர் நெஞ்சில் சூடு, சுவை, சுவாரஸ்யம் சுமந்து விளங்கும் முரசுக்கு கோடான கோடி நன்றிகள்.

*க. ரவி,*
*துபாய்.*

## எட்டுத்திசையும் ஒலிக்கட்டும்!

அன்பு நெஞ்சங்களைப் பிடித்த அன்பான முரசே; உன் பணிகள், சேவைகள் அனைத்தையும் இடைவிடாமல் தொடர எட்டுத் திசைகளிலும் சென்று உன் பெயர் முரசு ஒலிக்கட்டும் என்று கூறி நானும் எனது குடும்பத்தாரும் வாழ்த்துகின்றோம்.

*துசி,*
*சொய்சாபுர*

பயங்கரவாதச் சக்திகளால் கட்டவிழ்த்து விடப்படும் பல்வேறு வன்முறைகளுக்கு மத்தியிலும் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டு அரசியல் மற்றும் கள நிலைவரங்களோடு சினிமாவுட்பட பல்வேறுபட்ட வயதினருக்குமுடைய தகவல்களைத் தாங்கிக் கொண்டு எமது கரம் வந்து சேரும் முரசே, உனக்கு நான் தலை வணங்குகிறேன். அத்தோடு உனது பணிகள் இனியும் இடையறாது தொடர ஆண்டவரைப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

*-றொ.புருஷோத்தமன்,*
*வவுனியா.*

## உனது சேவை வாழ்க!

உன் சேவைகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. எமது அறிவை வளப்படுத்தும் உனது ஒவ்வொரு ஆக்கமும் சிறந்தவை. மேலும் அறிவுபூர்வமான ஆக்கங்களை வழங்குவதிலும், தேடல்கள் நிறைந்த பொக்கிஷங்களை தருவதிலும் உனக்கு நிகர் நீயே! காலத்தால் அழியாத உனது சேவை தொடர வாழ்த்துக்கள்.

*ஜெயா,*
*மன்னார்*

## இவ்வுலகில் நீ வாழ்க!

அன்புள்ள ஆசிரியருக்கு வணக்கம்! என்றும் எமது வளர்ச்சியிலே அக்கறை காட்டி வரும் முரசே, இவ்வுலகில் நீ வாழ்க. நாம் ஆசிரியர் குழாமின் அன்புக்கும் ஆதரவிற்கும் நன்றிக் கடன் பட்டுள்ளோம். என்றும் தினமுரசு வானுயரப் புகழடைய வாழ்த்துகிறோம்.

*சுமதி*
*புத்தளம்.*

# போர்ச் சூழலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைச்சர் தேவானந்தா உதவி

கொழும்பு, இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறும் 'சங்கத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி' மாநாட்டில் கலந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து இலக்கிய ஆர்வலர்கள் குழுவொன்று விமானம் மூலம் கொழும்பு வந்து சேர்ந்தது. கடந்த மூன்று மாதங்களாக ஏ-9 பாதை மூடப்பட்டிருப்பதால் இலங்கையின் பெரு நிலப் பரப்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு இவ்விடயம் கொண்டு வரப்பட்டதையடுத்து, அவர் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு, விமானப் பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். இதேவேளை, யாழ்ப்பாண மரக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றி வந்த ஆறு ஊழியர்களின் இடமாற்றங்களையும், கொழும்பு, திருகோணமலைத் துறைமுகங்களுக்கு இடமாற்றப்பட்ட ஒலுவில் துறைமுக ஊழியர்கள் பதினொரு பேரின் இடமாற்றங்களையும் ரத்துச் செய்யுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு விடுத்த கோரிக்கையையடுத்து அவை ரத்துச் செய்யப்பட்டன.

நாட்டில் நிலவும் போர்க் காலச் சூழல் காரணமாக வடக்கு - கிழக்குக்கு வெளியே பணியாற்ற முடியாத சூழலைச் சம்பந்தப்பட்டவர்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்தே இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

இதேவேளை, மட்டக்களப்பு வைத்திய சாலையில் பரிசாரகர்களாகப் பணியாற்றி வரும் இருபத்தி நான்கு ஊழியர்களுக்கு அங்கேயே பயிற்சி பெறுவதற்கான வசதிகளை அமைச்சர் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மின்சார சபையில் தற்காலிக அல்லது சமயாசமய ஊழியர்களாகக் கடமையாற்றி வருபவர்களை நிரந்தர சேவையில் இணைத்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


# சிறுவர்களை விடுவிக்குமாறு ஐ.நா.பிரதிநிதி கோரிக்கை

இலங்கையில், ஆயுதப் பிணக்குகளில் சிக்கியுள்ள சிறுவர்களின் நிலைமை பற்றி ஆராய்வதற்காக இலங்கை வந்துள்ள ஐ.நா. தூதுவர் அலன் ரொக், எதிர்வரும் 17ஆம் திகதி வாக்கில் தனது அறிக்கையை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு சமர்ப்பிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் வயது குறைந்த பிள்ளைகளை புலிகள் இயக்கம் வலுக்கட்டாயமாகப் பிடித்துச் சென்று ஆயுதப் பயிற்சி அளித்து, யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றதென்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

"ஆயுதப் பிணக்குகளில் சிக்கியுள்ள சிறுவர்கள் தொடர்பான ஐ.நா.வின் விசேட பிரதிநிதி செல்வி ராதிகா குமாரசாமியின் பணிப்பின் பேரிலேயே அலன் ரொக் இலங்கை வந்துள்ளார். கொழும்பில் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள அலன் ரொக், புலிகள் தரப்பினருடனும், கருணா தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் 1300க்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமிகளை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு அவர் கோரிக்கை விடுக்கவுள்ளார்.

# யாழ்.மக்களின் உணவுத் தேவைகள் இரு வாரங்களுக்குள் கிடைக்கும் சாத்தியம்

'அல்பா - 9' என்றழைக்கப்படும் ஏ-9 பாதை விரைவில் திறக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாத நிலையில், யாழ். மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைப் போதியளவில் அனுப்பி வைப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. மாற்றுத் தரை வழிப் பாதையொன்றினை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்த மாற்றுத் தரை வழிப் பாதை இன்றோ, நாளையோ அல்லது அடுத்த மாதமோ திறக்கப்படுவதற்கான வசதிகளும் வாய்ப்புகளும் கிடையாது. எனவே அதுவரைக்கும் போதியளவு உணவுப் பொருட்கள் யாழ்ப்பாண மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கப்படுவதாக அரசாங்க அறிக்கைகள் கூறினாலும் போதியளவுக்கு உணவுப் பொருட்கள் கிட்டவில்லையென்று அங்குள்ள பொறுப்பு வாய்ந்த அரசாங்க அதிகாரிகள் கூறுகின்றனர். ஏ-9 பாதையைத் திறக்குமாறு புலிகள் கூறிவருகின்றனர். முகமாலை காவலரண்கள் மீது புலிகள் ஆகஸ்ட் 11ஆம் திகதி மோசமான எறிகணைத் தாக்குதல்கள் நடத்தியதையடுத்து இந்தப் பாதை மூடப்பட்டது. தமது தாக்குதலின் மூலம் இந்தப் பாதையை மூடவைத்த புலிகள், யாழ்.மக்களுக்காகக் கண்ணீர் வடிப்பது அர்த்தமற்றது. தமது சொந்தத் தேவைகளுக்காக ஏ-9 பாதையைத் திறக்குமாறு புலிகள் கோருகின்றனர். புலிகள் வன்செயலை நிறுத்தினால் ஏ-9 பாதையைத் திறப்போமென்று அரசாங்கம் கூறிவருகிறது.




யாழ்ப்பாணத்தில் யானை விலை குதிரை விலையாக விலைவாசிகள் ஏறி வருகின்றன. நிலைமைகளைப் பயன்படுத்தி பதுக்கல் வியாபாரிகளும் கூட்டுறவுத்துறை அதிகாரிகளும் கொள்ளை இலாபமடிக்கிறார்கள். உண்மையிலேயே யாழ்.மக்களின் அவலங்களுக்காகப் புலிகள் இயக்கம் மனம் வருந்துகிறதென்றால், தாக்குதல்களையும், வன்செயல்களையும் நிறுத்தி, பாதைத் திறப்புக்கு வழி வகுக்க வேண்டும். இந்தியாவிலிருந்து - யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில், கொழும்பிலிருந்து கடல் மார்க்கமாகப் பொருட்கள் அனுப்பி வைப்பது குறித்து ஆராய்வதற்காக ஐ.நா.அதிகாரிகள் இருவர் இலங்கை வருகின்றனரென்ற நற்செய்தியும் வந்திருக்கிறது. இதற்கிடையில் அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புகளும் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தினை அளித்தால் பொருட்களை எடுத்துச் செல்லத் தாம் தயாராக இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியும், ஐ.நா. நிவாரண அமைப்புகளும் உறுதியளித்திருக்கின்றன. இதற்கிடையில் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் வாகரை, பாலைச்சேனை கடற்புலித் தளம் தாக்கி நிர்மூலமாக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பமைச்சு தெரிவிக்கிறது. பாலைச்சேனையிலிருந்துதான் புலிகள் கடல் மார்க்கமாகச் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதலைத் தொடுக்கின்றனரென்றும் அரசாங்கம் கூறியிருக்கிறது.

எனவே கடல் மார்க்கமாகப் போதியளவு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேவேளை வாகரை, கதிரவெளி உட்பட அரச கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளிலிருந்து காடு கரம்பகளைத் தாண்டி அகதிகளாக இடம் பெயரும் அப்பாவி மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு முன் வர வேண்டும். அதற்குப் புலிகள் இடையூறு செய்யக்கூடாது. இன்னும் இரண்டு வாரங்களுக்குள் யாழ்ப்பாண மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று உணவுத் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் கூறினார்.

## கண்காணிப்புக் குழு அனுதாபம்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு கடந்த ஏழாம் திகதி விஜயம் செய்த இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான இரு பெண்கள் யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக தமது அனுதாபத்தைத் தெரிவித்ததோடு, நடந்த சம்பவங்களையும் கேட்டறிந்து கொண்டனர். செல்வி ஜனிக் டெபின் தலைமையிலான குழுவினரே அங்கு விஜயம் செய்தனர். புத்தூரில் ராகினிதேவி என்ற 31 வயதுப் பெண்ணும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை வேட்பாளரான தவசி இராஜேந்தினி என்ற 28 வயது யுவதியுமே புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

## யாழ்ப்பாணத்தில் மூன்று பெண்கள் சுட்டுக்கொலை

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரான அப்துல் சலீம் ராகினி தேவி, வயது 31, ஏழு பிள்ளைகளின் தாயாரான வடமராட்சி, அல்வாயைச் சேர்ந்த கதிர்காமநாதன் லலிதா என்ற குடும்பப் பெண், வலிகாமம் கிழக்கு சிறுப்பிட்டியைச் சேர்ந்த தவசி ராஜேந்தினி என்ற 28 வயது யுவதி ஆகிய மூவரும் கடந்த ஆறாம் திகதி புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். கதிர்காமநாதன் லலிதா அன்றைய தினம் காலை 10.00 மணியளவிலும், ராகினி தேவி அன்றிரவும், ராஜேந்தினி அன்றிரவு ஏழு மணியளவிலும் அவர்களின் வீடுகளில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் புலி இயக்க எதிர்ப்பாளர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே புலிகளின் பிஸ்டல் குழுக்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

## இலங்கைப் பிரச்சினை தொடர்பாக ஜெர்மனியில் நடைபெற்ற மாநாடு: சமஷ்டித் தீர்வை வலியுறுத்தியது

இலங்கையில் சமாதானமும் சமத்துவமும் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் காத்திரமான சமஷ்டித் தீர்வின் மூலம் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு யுத்தத்தை இல்லாமல் செய்ய வேண்டுமென்றும் ஜெர்மனியின் பாட் பொல் நகரில் கூடிய இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்தோர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. அக்டோபர் 27ஆம் திகதியிலிருந்து 29ஆம் திகதிவரை நடைபெற்ற இந்த மூன்று நாள் மாநாட்டில் இலங்கை, ஒஸ்ரியா, டென்மார்க், இங்கிலாந்து, இத்தாலி, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 'சரோஜா' என்ற சிங்களத் திரைப்படத்தின் இயக்குநரான பிரசன்ன வித்தானகே, மட்டக்களப்பு சூரிய இயக்கத்தைச் சேர்ந்த விஜயலக்ஷ்மி செகருபன், எதிர்கால சமாதான இளைஞர் அமைப்பைச் சேர்ந்த செல்வி பத்மினி லியனகே, எஸ்.சிவகுருநாதன் ஆகியோர் இலங்கையிலிருந்து இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். 'இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்தவர்களின் சர்வதேச வலைப்பின்னல்' என்ற அமைப்பு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது. இன ரீதியான பிணக்குகள், ஆட் கடத்தல்கள், கொலைகள், வன்செயல்கள் ஆகியவற்றை நிறுத்துமாறு இலங்கை அரசு, புலிகள் அமைப்பு, கருணா தரப்பு ஆகியவற்றைக் கோரும் முக்கிய தீர்மானமொன்று இம் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டது. இனப் பிரச்சினைக்கு காத்திரமான சமஷ்டித் தீர்வின் மூலம் மனிதப் பெறுமானங்களை மதித்து நடக்க சகல சமய, சமூக, அரசியல் மற்றும் வெகுஜன ஸ்தாபனங்கள் பிரசார நடவடிக்கைகளை முன் கொண்டு செல்ல வேண்டுமென்று மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எதிர்கால சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் பிரதிநிதிகளுக்கும் இடமளிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

## ஜனநாயகம் பற்றிப் பேச புஷ்ஷுக்கு என்ன அருகதை?

**– இஸ்லாமிய முன்னணி கேள்வி**

'ஈராக்கில் 1982ஆம் ஆண்டு அல்டுஜாய்ல் என்ற கிராமத்தில் 182 அப்பாவிப் பொதுமக்களைக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் சதாம் ஹுசெய்னுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டமை, ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றியென்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பாராட்டி வரவேற்றிருக்கிறார். ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கா, சதாம் ஹுசெய்னைப் பதவியிலிருந்து அகற்றியதோடு, அமெரிக்காவின் பொம்மை அரசொன்றினையும் நிறுவிய அமெரிக்கா தன்னை ஜனநாயக நாடென்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறதா?' என்று கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் முற்போக்கு இஸ்லாமிய முன்னணி கேள்வியெழுப்பியுள்ளது.

'இலட்சக்கணக்கான குர்திஸ் மக்களை நச்சுவாயுவின் மூலம் கொன்ற சதாம் ஹுசெய்ன் ஒரு கொலை வெறியர் என்பதிலும், சர்வாதிகாரி என்பதிலும் இரண்டு கருத்துக்கு இடமிருக்க முடியாது. ஆனால், சதாம் ஹுசெய்னுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஜனநாயகத்தின் வெற்றியென்று பாராட்ட ஜோர்ஜ் புஷ்ஷுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது. வியட்நாம், கம்பூசியா, லாவோஸ் போன்ற இந்தோசீன நாடுகளில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றதோடு, பல நாடுகளின் ஜனநாயக அரசுகளை சதி முயற்சி மூலம் கவிழ்த்து பொம்மை அரசுகளை ஏற்படுத்திய அமெரிக்காவுக்கு, ஜனநாயகம் பற்றிப் பேச உரிமை கிடையாது. வியட்நாமில் மைலாய் என்ற குக்கிராமத்தில் குண்டுகளை வீசி முந்நூறுக்கு மேற்பட்ட அப்பாவிப் பொது மக்களைக் கொன்ற வரலாறு அமெரிக்காவினுடையது என்பது எமக்குத் தெரியாததல்ல' என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாரிஸ் 'சின்ன யாழ்ப்பாணத்தில்' புலிகளின் வர்த்தக முயற்சிகள் முடக்கம்

பிரான்ஸில் புலிகள் இயக்கத்துடன் தொடர்புபட்ட முகவரமைப்புகளின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கும், வர்த்தக நிலையங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். பாரிஸிலுள்ள அம்மன் கோவிலின் தர்மகர்த்தாவான தொங்கல் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தியென்ற முக்கிய புலி உறுப்பினர் - பிரான்ஸ், சுவிற்சர்லாந்து எல்லையில் வைத்துக் கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சுவிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். காரொன்றில் சென்று கொண்டிருந்த இவரிடம் இரண்டு கோடி யூரோக்கள் இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய உறுப்பு நாடான பிரான்ஸில் புலி இயக்க நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்காத சுவிற்சர்லாந்தின் வங்கிகளில் சட்டரீதியாகவும் சட்டவிரோதமாகவும் வைப்பிலிடுவதற்குப் புலிகளின் முகவரமைப்புகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. சுவிஸ் பொலிஸார், பிரான்ஸ் பொலிஸாருக்குப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து தகவல்கள் வழங்கியதையடுத்து பிரான்ஸ் அதிகாரிகள் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். "லுனே இன்டர் நேஷனல்" என்ற பெயரிலியங்கும் வீடியோ கடை புலிகளின் முக்கியமான முகவர் நிறுவனம் என்று பாரிஸ் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். தென்னிந்தியாவிலிருந்து திரைப்படப் பிரதிகளை இறக்குமதி செய்து விற்பனை செய்துவரும் இந்த நிறுவனம், மாதாந்தம் ஒரு இலட்சம் யூரோக்களை லாபமாகப் பெறுகிறது என்று கூறப்படுகிறது. "சின்ன யாழ்ப்பாணம்" என்று கூறப்படும் பாரிஸிலுள்ள 'லா சப்பல்' என்ற இடத்தில் செயற்பட்டு வந்த புலிகளின் வர்த்தக நிலையங்கள் பல மூடப்பட்டு வருவதாக கொழும்புக்குக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. லா சப்பல் பகுதியிலேயே புலிகள் தமிழ் அச்சகம் என்ற பெயரில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றனர். இங்கிருந்துதான் "ஈழமுரசு" என்ற பெயரில் தமிழ் வாராந்த பத்திரிகை வெளியிடப்பட்டு வருகிறது.

## மனித உரிமைச் செயலமர்வு

(மஸ்கெலியா நிருபர்)

"நாட்டிலே 'மனித உரிமைகள்' என்றால் என்ன என்பதைப் பற்றிய தெளிவில்லாதவர்கள் பலர் உள்ளனர். 'மனித உரிமைகள் மீறல்' பற்றிய அறிவில்லாதவர்களும் உண்டு. அவர்கள் மத்தியில் மனித உரிமைகள் பற்றிய தெளிவான சிந்தனையை நாம் ஏற்படுத்தவுள்ளோம். அதற்கு ஊடகவியலாளர்கள் பெரிதும் உதவ வேண்டும்" என்று மனித உரிமை அபிவிருத்தி ஸ்தாபனத்தின் இணைப் பதிகாரி டயஸ் சுமண சேகர அட்டன் பெல்வுட் விடுதியில் 04.11.2006 அன்று நடைபெற்ற "மலையக ஊடகவியலாளர்களும் மனித உரிமையும்" என்ற தலைப்பிலான ஒரு நாள் செயலமர்வில் உரையாற்றியபோது கூறினார்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## மாறிவரும் மக்களின் தீர்மானங்கள்!

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

ஜெனிவாவுக்குச் சென்று திரும்பிய புலிகளின் குழுவை, இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் கொழும்பில் சந்தித்துப் பேசிய பின்னர், அரசாங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன் பின்னணியில் இம்மாதம் பிரசல்ஸில் ஒரு கூட்டத்தையும் நடத்தப்போவதாகத் தெரிவித்தள்ளனர்.

இணைத்தலைமை நாடுகளின் இந்த அதிரடி நடவடிக்கையானது உக்கிரமான போர் நிலை ஒன்றைத் தணித்துள்ளது எனலாம். ஆனால் நோர்வே நம்பிக்கை தெரிவிப்பது போல் அரசும் - புலிகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிப்பார்கள் என்பது நடைமுறைக்கு ஒவ்வாததாகும் என்பதை தற்போது நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. இறந்து, புதைக்கப்பட்டு விட்ட ஒப்பந்தத்தை மீண்டும் தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை செய்வதனூடாக நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மைகள் எதுவும் நடக்கப்போவதில்லை. எந்த ஒப்பந்தத்தை மதிக்காமல் எப்போது ஒரு கொலை விழுந்ததோ - ஒரு மனிதனின் குருதி இந்த பூமியில் சிந்தப்பட்டதோ - அப்போதே ஒப்பந்தம் இறந்து விட்டது. அந்த நிகழ்வுகளை இதே நோர்வே, ஏனைய சண்டை நடக்கும் நாடுகளில் நடக்கும் வன்முறைகளோடு ஒப்பிடும் போது இலங்கையில் நடப்பவை மிகச் சொற்பம் தான் என்று கூறியது. அவ்வாறு அன்று நடந்த ஒப்பந்த மீறல்களைத் தட்டிக் கொடுத்த நோர்வே, இன்று எந்த முகத்தோடு நம்பிக் கொண்டிருக்கிறதோ தெரியாது.

நாடு போகிற போக்கை அவதானிக்கின்றபோது நோர்வே மட்டுமல்ல, யார் நம்பிக்கை கொண்டிருந்தாலும், அரசுக்கும் - புலிகளுக்கும் நம்பிக்கை இல்லாத சூழல் தொடரும் வரை கொலைகளும், தாக்குதல்களும் தொடரும். அதை யாராலும் தடுக்க முடியாது. நம்பிக்கையீனங்களின் அடையாளங்களாக இரு தரப்பும் ஒன்றை ஒன்று பார்க்கின்ற போது வெளியில் இருந்து கொண்டு நம்பிக்கை தெரிவிப்பதில் அர்த்தமில்லை.

அரசாங்கம் நடத்துகின்றது என்பதற்காக, ஆகக் குறைந்தது 5ஆம் அண்டு புலமைப் பரிசில் பரீட்சையைக் கூட வாகரையிலும், கதிரவெளியிலும் நடத்த விடாமல் தாக்குதல் நடத்தியவர்களா அரசாங்கத்திடமிருந்து ஒரு கௌரவமான அரசியல் தீர்வை தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தரப்போகிறார்கள் என்ற கேள்விக்கு என்ன பதில் இருக்க முடியும். பேச்சுக்களால் பலனில்லை என்றால் போர் தான் ஒரே முடிவு என்று புலிகளின் தலைவர் தனது கார்த்திகை உரையில் இரண்டு கருத்துக்கு இடமில்லாமல் கூற வேண்டும். கூறுவாரா? என்ற கேள்விகளை இன்று மக்கள் துணிச்சலோடு கேட்கிறார்கள். புலிகள் கடல் வழிக்கும், விமானப் போக்குவரத்துக்கும் உத்தரவாதமில்லை என்று மிரட்டிய போதும் மக்கள், அரசின் பயண ஏற்பாடுகளுக்கு இணங்கி உயிரைத் துச்சமென்று நினைத்து பயணிக்கிறார்கள் என்றால் புலிகளின் போக்கு மக்களைக் கட்டுப்படுத்தவோ, கவரவோ இல்லை அல்லது புலிகளின் நிலைப்பாட்டை மக்கள் புறக்கணிக்கிறார்கள் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இன்று தமிழ் மக்களுக்காக உணவு அனுப்பவும், அவர்களின் பயணங்களுக்காகவும் புலிகளிடம் போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவே மக்கள் கருதுகிறார்கள்.

உறவுகளைப் பிரிந்து, உணவு இல்லாமல், விலைவாசி உயர்வுகளுக்கு முகம் கொடுத்தபடி, கற்ற கல்வியோடும், மானத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலையும், உணர்ச்சியூட்டும் பேச்சும் இரண்டாம் பட்சமானவையாகவே உள்ளன. எப்போதும் கூறிவருவது போல் மக்களை நேசிக்காத மக்களின் பாதுகாப்பு, மக்களின் விருப்பு வெறுப்பு என்பவற்றை உள்வாங்காத எந்தவொரு போராட்டமும் ஈற்றில் வெற்றியைத் தராது என்ற உண்மையைத்தான் காலம் மீண்டும் மீண்டும் நமது முகத்தில் அறைந்து உணர்த்திக் கொண்டிருக்கிறது. எனவே, மக்கள் எதிர்கொள்ளும், எதிர்கொள்ளப்போகும் அவல நிலையை முதலில் தடுக்க என்ன செய்ய வேண்டும் அதற்காக என்ன வகையில் முயற்சிக்க வேண்டும்? என்று சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

அரசு மக்களுக்கான உணவு மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகளை கையாளுகின்ற போதும், அதன் வேகமும், மக்களைச் சென்றடையும் நன்மைகளும் இன்னும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். அரசின் இந்தப் பணிகளைத் துரிதப்படுத்துவதில் ஜனாதிபதி ராஜபக்ஷ கொண்டிருக்கும் விருப்பத்தை அடுத்தமட்ட அதிகாரிகள் செம்மையாகச் செயல்படுத்தத் தவறியிருக்கிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது. ஆகவே, அவலத்துக்குள்ளாகியிருக்கும் மக்களின் பிரச்சினைகளை இனச் சாயத்தோடோ பாரபட்சத்தோடோ பார்க்காமல் உரிய அதிகாரிகள் அர்ப்பணிப்போடு செயலாற்ற வேண்டும். அதுவே வரவேற்புக்குரியதாகும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சோகத்தில் சௌந்தர்யம் தேடும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்

**எனது** மாமாவின் பெயர் இளையதம்பி. யாழ்ப்பாணம், புத்தூர் அவரது பிறப்பிடம். இப்போது அவருக்கு 76 வயதாகிறது. ஐந்து பிள்ளைகள். மூத்ததுகள் இரண்டு பெடியன்கள். மூத்தவனும் கடைக்குட்டியும் லண்டனில் வாழ்கிறார்கள். எல்லாருமே உயர் பதவி வகிக்கிறார்கள். சொந்த வீடுகள், சொகுசுக் கார்கள் என்ற வசதி வாய்ப்புகள் பற்றிச் சொல்லி வேலையில்லை. மாமா, இலங்கை மத்திய வங்கியில் உயரதிகாரியாகப் பதவி வகித்தவர். இப்போதும் கூட அவருக்கு ஓய்வூதியமாக ஒரு இருபத்தைந்துக்கு மேல் தேறும். கிட்டத்தட்ட முப்பதாயிரம் ரூபா கிடைக்குமென்று நம்புகிறேன். ஆனால் மனிதர் கொழும்பிலுள்ள வயோதிப இல்லமொன்றில் தான் வாழ்கிறார். ஒரு சமய நிறுவனம் நடத்தி வரும் இந்த வயோதிப இல்லத்தில் அவருக்கு ஓரளவு வசதிகள் கிடைக்கின்றன. இந்தத் தன்னார்வத் தொண்டர் நிறுவனத்திற்கு பிரிட்டனிலிருந்து பெருந்தொகைப் பணம் கிடைப்பதால் அங்கு பணம் செலுத்த வேண்டிய தேவையில்லை. லண்டனிலிருக்கும் இரண்டு பிள்ளைகளும் எப்போதாவது இலங்கைக்கு வந்தால், ஒருக்கால் அவரைப் போய்ப் பார்த்து விட்டுப் போவார்கள். ஆனால் அவரது இரண்டாவது மகன் இருக்கிறானே, மாதத்திற்கு ஒரு தடவையாவது அவரைப் போய் பார்த்து வருவான். அவ்வளவுக்குப் பாசமா? என்று கேட்டு விடாதீர்கள். அவன் செல்வதெல்லாம் விஷயத்தோடுதான். அதாவது, அவருக்கு ஓய்வூதியம் கிடைக்கும் நாட்களில் மட்டும் தனது சொகுசுக் காரில் சென்று அவரை ஏற்றிக் கொண்டுபோய் அவரது ஓய்வூதியப் பணத்தை எடுத்துக்கொள்வான். "அப்பா காசை அங்க வைத்திருந்தா களவெடுத்துப் போடு வாங்கள். நூறு ரூபாவை வைத்துக் கொள்ளுங்கோ. உங்களுக்கு எல்லா வசதியும் அங்கு கிடைக்குது தானே. காசு தேவையெண்டால் எனக்குப் போன் பண்ணுங்கோ" என்று கூறி, அவரைக் கொண்டு வந்து வயோதிப இல்ல வாசலில் பாசம் பொங்க விட்டுவிட்டுப் போய் விடுவான்.



நிவாரணப் பணிகளில் தன்னார்வத் தொண்டர்கள்.

நான் எனது மைத்துனனை ஒரு நாள் கேட்டேன். "என்னடாப்பா, கொப்பர் உங்கள படிக்க வைத்து, நல்ல பதவிகளைப் பெற்றுத் தந்து, வீடு வாசல்களும் வாங்கித் தந்தவர். அந்த மனிதரை வயோதிப இல்லத்தில் விடுவதற்கு உனக்கு மனம் வந்ததா?" அவன் சொன்னான்: "மச்சான் உனக்கு விளங்காது. அந்தாளுக்கு அறளை பேந்து போச்சு. வீட்டில சும்மா அலட்டிக் கொண்டிருப்பார். மனுஷி அவரை நச்சரிக்கும். வயோதிப இல்லத்திலென்றால் அவருக்கு எல்லா வசதியும் உண்டு. எங்கட வீட்டில் நாங்க வேலைக்குப் போயிடுவோம். பிள்ளைகளும் பள்ளிக்கூடத்துக்குப் போயிடும். அவரோடு கதைப்பதற்குக் கூட ஆக்களில்லை. அவர்ர வசதிக்காகத்தான் அங்கேயே விட்டிருக்கிறேன்" என்றான். அவன் சொன்னது எனது சின்ன மூளைக்கு நியாயமாகப்பட்டது.

"அவரை நீ அடிக்கடி போய்ப் பார்த்து வருவதுண்டா?" என்று கேட்டேன். "இல்ல மச்சான் எனக்கு நேரமிருக்கிறதில்ல. இடைக்கிடை போய் பார்த்துட்டு வருவன். "இடைக்கிடையா" என்று கேட்டேன். ஓமென்றான். அதாவது, அவருக்கு ஓய்வூதியம் கிடைக்கும் நாட்களில் அவன் போவானே, அதைத்தான் அவன் 'இடைக்கிடை' என்று சொன்னான். இந்நாட்டில் இயங்கும் அரச சார்பற்ற சமூக சேவை நிறுவனங்கள் அல்லது தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் சேவைகள், செயற்பாடுகள் பற்றி யோசித்த போது எனக்கு அந்த வயோதிபரின் கதைதான் ஞாபகத்துக்கு வந்தது.

இலங்கையில் 95 சர்வதேச தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும், கிட்டத்தட்ட 6000 உள்ளூர் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் சமூக சேவைப் பணிகளில் ஈடுபட்டு வருவதாக சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சின் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. கிட்டத்தட்ட 30 வருட கால யுத்தத்தாலும் வளர்ச்சி குன்றிய நாடென்ற வகையிலும் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கும் இலங்கையில் இந்த நிறுவனங்கள் ஆற்றிவரும் பணிகள் அளப்பரியது என்று கூற முடியாவிட்டாலும், ஏதோ ஓர் வகையில் உதவிதான் என்று கூற முடியும். பல்வேறு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவதாகக் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தன்னார்வத் தொண்டர் நிறுவனக் 'காக்கைகள்' பணத்தைக் கொள்ளையடிப்பதாகவும், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவுவதாகவும் கூடக் குற்றங்கள் சுமத்தப்படுகின்றன.

அண்மையில் வடக்கில் இயங்கிவந்த நான்கு சர்வதேச தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் விஸாக்கள் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. எம்.எஸ்.எஸ். பிரான்ஸ், எம்.எஸ். எஸ்.ஸ்பெயின், எம்.டி. எம்.பிரான்ஸ், அமெரிக்காவைச் சேர்ந்த 'டொக்டர்ஸ் ஒப் த வேர்ல்ட்' என்ற நான்கு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் விஸாக்கள் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே இவர்களின் விஸாக்கள் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. சர்வதேச தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் ஆகியவற்றின் சேவைகள், செயற்பாடுகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியின் சிபாரிசின் பேரிலேயே இந்த நான்கு தொண்டர் நிறுவனங்களின் விஸாக்கள் இரத்துக் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் பற்றிய பொலிஸ் விசாரணைகள் முடிவடையும் வரை அவர்கள் இந்த நாட்டில் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், சுனாமியினால் பாதிக்கப்பட்டு துயரங்களைச் சுமந்து கொண்டிருக்கும் கரையோரப் பகுதி மக்களுக்கும் இந்நிறுவனங்கள் சேவையாற்றி வருகின்றன என்பதை மறுக்க முடியாது. ஆனால் மறுபக்கத்தில் அநேகமான தொண்டு நிறுவனங்கள் 'ஊழல் குகைகள்' ஆகவே செயற்பட்டு வருகின்றன என்பதையும் மறுக்க முடியாது. இலங்கையில் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி தாக்கிய சுனாமியினால் 13 கரையோரப் பகுதி மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்களை சுனாமி காவு கொண்டது. இரண்டரை இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீடு, வாசல்களை இழந்து அகதிகளாக இடம் பெயர்ந்தார்கள்.

இந்தக் கடல் பேரழிவுக்கு தனது வீடு வாசல்களையோ அல்லது தனது குடும்பத்தில் எவரையுமோ இழக்காத ஒருவர், பதினைந்து இலட்ச ரூபா பெறுமதியான மீன்பிடி வள்ளமொன்றினை இலவசமாகப் பெற்றிருக்கிறார். பலரை வைத்துத் தொழில் செய்து வந்த இந்த மேட்டுக்குடி மகன் கடற்கரையிலிருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் வாழ்வதால் அவர் எந்தப் பாதிப்பையும் சந்திக்கவில்லை. ஆனால் கரையோரத்தை அண்டி வாழ்ந்து வந்த பாதிக்கப்பட்ட, சாதாரண கடற்தொழிலாளர்களுக்கு பிளாஸ்டிக் வாளிகளும் சமையல் உகபரணங்களும் மட்டுமே கிடைத்திருக்கின்றன. அந்த மேட்டுக் குடிமகன் உரிய அதிகாரிகளுக்கு ஐந்து இலட்சம் ரூபா 'கையூட்டு' கொடுத்தே பதினைந்து இலட்ச ரூபா பெறுமதியான இயந்திரப் படகைப் பெற்றுக் கொண்டார் என்பதை எமது பத்திரிகையாளர் குழு நடத்திய ஆய்வு, வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

தனது மனைவியையும், பிள்ளைகளையும் தனது கண் முன்னாலேயே கடலலை அடித்துச் செல்வதைப் பார்த்த அதே பகுதியைச் சேர்ந்த ஒருவர் இன்னமும் நடைப்பிணமாக வாழ்ந்து வருகிறார். கடலலைகளுக்கு தனது குடும்பத்தையும் உடைமைகளையும் இழந்துவிட்ட அந்த ஏழைத் தொழிலாளியிடம் கையூட்டுக் கொடுப்பதற்குக் காசில்லை. இயற்கையின் வஞ்சகத்துக்கு மேலதிகமாக செயற்கை இன்னலும் அவரை வஞ்சித்துக் கொண்டிருக்கிறது. இதைப் போன்ற சுனாமிச் சோகங்கள் ஏராளம் தாராளம். 25 வருட கால யுத்தத்திற்கு தமது இன்னுயிர்களையும் உடைமைகளையும் காவு கொடுத்த பல்லாயிரக்கணக்கான மக்கள் சுமந்து கொண்டிருக்கும் சோகங்கள் சொல்லி மாளாது. யுத்தத்தின் விளைவாக யாழ்ப்பாணத்தில் மட்டும் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் விதவைகளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊனமானவர்கள், உயிர்ப்பிச்சைத் தேடி அலைபவர்களின் தொகை இதனை விட அதிகம்.

யுத்தச் சூழலில் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் சேவை புரிவது என்பது ஒன்றும் இலகுவானதல்ல என்பதை ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும். மனிதர்களின் வாழ்வுரிமையையும், மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களுக்கு உண்டு. சுகாதாரம், கல்வி, சூழல் பாதுகாப்பு, மனிதாபிமான நிவாரண உதவிகள், அரசியல் உரிமைகள் உட்பட அடிப்படைச் சிவில் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் இவற்றுக்குண்டு. ஆனால் பெரும்பாலான தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் சமூக சேவைப் பணிகளுக்கு அப்பால், இதனையொரு தொழில் துறையாகவே நடத்தி வருகின்றன. இந்த உதவி வழங்கும் தொழிற்துறையைப் பயன்படுத்தி 'ஊழல் பெருச்சாளிகளும்' முதலைகளும் கோடானுகோடியாகக் கொள்ளையடித்திருக்கிறார்கள்.

இந்தத் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களுக்குள் பயங்கரவாத சக்திகள் புகுந்து கொண்டு அதனையொரு போர்வையாகப் பயன்படுத்தி, ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் இப்போதும் ஈடுபட்டு வருகின்றன. வக்கற்றுப் போன பாலஸ்தீன - இஸ்ரேலிய சமாதான ஒப்பந்தத்தின் சூத்திரதாரியாக விளங்கிய நோர்வே உயரதிகாரியொருவர் வன்னியில் ஆற்றிய, சமூக சேவைப் பணிகள் ஏற்கனவே அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் தர்மகர்த்தா சபையினால், பயங்கரவாத அமைப்புக்கு (புலிகளுக்கு) உதவிய குற்றச்சாட்டின் பேரில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தடை செய்யப்பட்டிருக்கிறது. புலிகளுக்கு ஆயுதம் கொள்வனவு செய்ய நிதியுதவி வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாலேயே பிரிட்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. அவுஸ்திரேலியாவிலும் கனடாவிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகங்கள் முற்றுகையிடப்பட்டு, தேடுதல் நடத்தப்பட்டு, ஆவணங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. கனடாவில் நடத்தப்பட்ட தேடுதலின் போது ஆயுதங்கள் மற்றும் ஆயுதக் கொள்வனவுடன் தொடர்பான விபரங்களும் சிக்கியிருக்கின்றன. இதன் தொடர்ச்சியாகவே இலங்கையில் செயற்படும் சகல தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. புலிகள் தாமாகவே ஏற்படுத்திக் கொண்ட தன்னார்வத் தொண்டர் அமைப்புத்தான் இந்தத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம். ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் தான் இதனைத் தன்னார்வத் தொண்டர் நிறுவனமாகப் பதிவு செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கியது. சில தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் ஆயுதக் கொள்வனவு, ஆட்கடத்தல்கள், போதைவஸ்துக் கடத்தல் போன்றவற்றுக்கு உதவி வருகின்றன. இன்னும் சில அமைப்புகளுக்குள் பயங்கரவாத நபர்கள் புகுந்து கொண்டு தமது சமூக விரோத நடவடிக்கைகளை கச்சிதமாக மேற்கொண்டு வருகிறார்கள்.

கடந்த பத்து வருடங்களில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட வயது குறைந்த சிறுவர், சிறுமியர்களைப் புலிகள் இயக்கம் வலுக்கட்டாயமாகப் பிடித்துச் சென்று தமது படையணிகளில் சேர்த்துக் கொண்டதாக ஐ.நா. உப அமைப்பான 'யுனிசெப்' குற்றம் சாட்டுகிறது. ஆனால் யுத்தத்தால் பெற்றோர்களை இழந்த அநாதைச் சிறுவர், சிறுமியர்கள் மேம்பாட்டுக்காக 'செஞ்சோலை' போன்ற சமூக சேவை நிறுவனங்களை நடத்துவதாகப் புலிகள் இயக்கம் கூறிக் கொள்கிறது. அண்மையில் வன்னியில் பல்வேறு பாடசாலைகளிலிருந்து அழைத்து வரப்பட்டு, புதுக்குடியிருப்பில் ஆயுதப் பயிற்சி வழங்கும்போது விமானப் படையினரின் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி மரணித்த அறுபதுக்கு மேற்பட்ட அப்பாவிச் சிறுமிகள் இதற்கு இரத்தச் சாட்சிகளாவர்.

சகல சமூக சேவை நிறுவனங்களுமே உதவித் தொழிற்துறையை நடத்திக் கொள்ளையடிப்பதாகக் குற்றம் சாட்ட முடியாது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேர்மையாக உதவிகளையும் நிவாரணங்களையும் வழங்கும் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் சேவைகள் வரவேற்கப்பட வேண்டியவை. இதேவேளை மக்களின் நலன்களுக்கும் தேசத்தின் நலன்களுக்கும் எதிராகச் செயற்படும் சமூக சேவை நிறுவனங்கள் கண்டறியப்பட்டு களையப்பட வேண்டுமென்பது நியாயமான நடவடிக்கையே.

## ஊரிலிருந்து....



பிள்ளையார் பிடிக்க குரங்காகிப் போன நிலையில், வன்னியில தலைமைப்பீடத்தார் இருக்கினமாம். தமிழீழம் கேட்டு, சுயாட்சிக்குப் போய், இடைக்கால நிர்வாகத்தை எட்டிப்பார்த்து, பிறகு சுனாமிக் கட்டமைப்பை ட்ரை பண்ணி கடைசியில இப்ப ஏ–9 றோட்டைக் கேட்கிற நிலைக்கு அவை வந்திருக்கிறது உலகத்திற்கே தெரியும்.

ஜெனீவா – 2 பேச்சுக்கு அவை போனதே ஏ–9 றோட்டைத்திறக்கத்தான் எண்டு சொல்லிக் கொண்டு அதுக்கு அழுத்தம் கொடுக்க தொப்புள் கொடி உறவைக்காட்டி அயலகத்தாரிண்ட உதவியையும் கேளுங்கோ எண்டு, தங்களிண்ட தலையாட்டிகளிட்டயும் உத்தரவு போட்டாச்சு. ஆனால் நடந்தது என்ன தெரியுமோ? குடாநாட்டுக்குத் தேவையான சாமான்களை கப்பலிலை விரைவில அனுப்ப அயலகமும் இப்ப ரெடியாம். அப்பிடி எண்டால் அயலகத்தாரும்..... ?

# கிழக்கில் காத்திருக்கும் அதிர்வுகள்!

அலசுவது
**- மதியூகி -**

**ஜெனிவா** இரண்டாம் கட்டப் பேச்சுக்குப் போகும் முன்னரே, கிழக்கு மாகாணத்தில் இரு தரப்பும் படை நகர்வுகள் குறித்த திட்டங்களைக் கொண்டிருந்தன. புலிகளைப் பொறுத்தவரை கருணாவின் பிளவுக்குப்பின்னர் ஏற்பட்ட இடைவெளியை ஈடுகட்டக்கூடிய தலைமையின்மையும், நியமிக்கப்பட்ட தலைமைகளின் இரட்டை நிலையும் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் நடவடிக்கைகளைப் பெரிதும் கேள்விக்குட்படுத்தியிருந்தது. இந்த நிலையைச் சரி செய்து கொள்வதில் புலிகளின் தலைமை கூடுதல் அக்கறை செலுத்த வேண்டியிருந்ததே தவிர, பாரிய தாக்குதல் எதையும் நடத்தும் திட்டம் இருக்கவில்லை என்பதை கடந்த காலத்தில் எழுதியுள்ளேன்.

இதில் மாவிலாறு, சம்பூர் தாக்குதல்கள் புலிகளின் பலவீனமான நிலையைத் தெளிவாக உணர்த்தியது எனலாம். எனினும், திருமலையில் புலிகளின் ஆளணிப் பலமும், புலிகளின் முற்றுகைக்குள்ளான பகுதிகளும் என்பது மிகச் சொற்பமானதாகவே இருப்பதால் புலிகள் மீண்டும் சம்பூரைக் கைப்பற்ற உடனடியாக முயற்சிப்பார்கள் என்று கருத முடியாது. ஏனெனில் சுமார் ஆயிரம் பேர் வரையானவர்களே தற்போது புலிகளின் திருமலை நிர்வாகத்துக்குள் இருக்கின்றனர். அவர்கள் கூட தங்கள் இருப்புக்களை விட்டுப் பின்வாங்கி, தங்கள் நிலைகளை சுருக்கிக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

தற்போதைக்கு இறால்குழி, புலிக்குத்தி, நீலப்பணிக்கன், மரம் வெட்டிச் சோலை, கல்லிரவு, கட்டுக்குளம், மணிவெட்டுவான் போன்ற பகுதிகளிலும், இறால்குழி பெரும்பகுதியில் குமரன் தீவு, பண் வெட்டுவான் வெளி, பரவிப்பாஞ்சான், கண்டக்காட்டுத்துறை மற்றும் குரங்குபாஞ்சான் வரையும் புலிகளின் முன்னணி முகாம்கள் இருக்கின்றன. இந்தப் பகுதியிலிருந்தும் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்த முயற்சிக்கின்றனர். இந்தத் தாக்குதல்கள் குறிப்பாக இறால்குழி, குரங்குபாஞ்சான் பகுதிகளிலும், திரியாய் பகுதியைப் பொறுத்தவரை கல்லிரவு கடற்படை முகாம் அடுத்து கொக்கிளாய் என்று கடற்கரையை ஒட்டியதாகவும், மறுபக்கமாக பேராறு, குச்சவெளி, இறக்கக்கண்டி ஆகிய பகுதிகளிலும் புலிகளின் தாக்குதல்கள் நடத்தப்படக்கூடிய நிலை உள்ளது. புலிகளின் ஆளணி மற்றும் கனரக ஆயுதங்களை முன் நகர்த்துதல் என்பன போன்ற படை நகர்வுக்கான முக்கிய விடயங்களைக் கையாள்வதில் பிரச்சினைகள் இருக்கின்றன. இனி மழைக்காலம் என்பதாலும், இருட்டுக் காலம் என்பதாலும் பாரிய படை நகர்வு ஒன்றை உடனடியாக நடத்த முடியாவிட்டாலும், சிறிய தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கான திட்டத்தைப் புலிகள் வகுத்து வருகின்றனர்.

மேலே குறிப்பிட்ட எல்லைப்புறங்களில் தாக்குதல்களை நடத்துவதால், சண்டை ஒன்றை நடத்த முடியுமே தவிர, சம்பூரின் இழப்பைப் புலிகளால் ஈடுசெய்ய முடியாமல் இருக்கும். இதற்காக மீண்டும் சம்பூரைப் புலிகள் கைப்பற்றுவதற்காகப் போரிடுவர்



என்ற ஆரூடங்கள் கூறப்பட்டாலும் புலிகளின் தற்போதைய பின்னடைவு, அந்த முயற்சியை உடனடி சாத்தியமாக்காது எனலாம். ஏனெனின் சம்பூரின் முழுப் பகுதியையும் இன்றைய நிலையில் படைத் தரப்பு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

ஆகவே, புலிகள் சம்பூருக்குள் நுழைவதற்கு முன்னர் நவரத்தினபுரம், கோவில் வெளி, கூனித்தீவு, சூடைக்குடா, பொக்கை ஆறுச்சேனை, வெளிச்சவீடு, கொக்கட்டி, இலக்கந்தை ஆகிய இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இது அவ்வளவு எளிதான காரியமில்லை. தவிரவும், ஆயிரம் பேர் வரையான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் புலிகளுக்கு இந்தக் களத்தில் பரந்தளவிலான மரபு வழிப் போர் ஒன்றை நடத்த முடியாது. ஆகவே இதற்கு முதலில் திருமலை நகர்ப்புறத்தை ஒரு பதற்றமான சூழலுக்குள் கொண்டு வரவேண்டிய தேவை உள்ளது. மக்களின் பதற்றமும் அதைச் சுற்றிய படையினரின் பார்வையும் ஏற்பட வேண்டும். இதைச் செய்ய வேண்டுமாக இருந்தால் மக்களின் இறப்பு, அங்கமிழப்பு, இயல்பு வாழ்க்கை என்பவற்றை கவனத்தில் எடுக்காமல், குண்டு வெடிப்புகளையும், கிளைமோர் தாக்குதல்களையும், படுகொலைகளையும் நடத்த வேண்டிய கட்டாயம் புலிகளின் அடுத்த போர் வியூகமாகத் தற்போது வகுக்கப்பட்டுள்ளது. ஆகவே,

முதலில் திருமலை நகர்ப்புறத்தை ஒரு பதற்றமான சூழலுக்குள் கொண்டு வரவேண்டிய தேவை உள்ளது. மக்களின் பதற்றமும் அதைச் சுற்றிய படையினரின் பார்வையும் ஏற்பட வேண்டும். இதைச் செய்ய வேண்டுமாக இருந்தால் மக்களின் இறப்பு, அங்கமிழப்பு, இயல்பு வாழ்க்கை என்பவற்றை கவனத்தில் எடுக்காமல், குண்டு வெடிப்புகளையும், கிளைமோர் தாக்குதல்களையும், படுகொலைகளையும் நடத்த வேண்டிய கட்டாயம் புலிகளின் அடுத்த போர் வியூகமாகத் தற்போது வகுக்கப்பட்டுள்ளது.

திருமலையில் தனிநபர் கொலைகளும், தாக்குதல்களும் அன்றாடச் செய்தியாகும். இதே நிலை தற்போது வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பெரும் மாவட்டங்களில் தொடர்கின்றது. புலிகளைப் பொறுத்தவரை ஒரே வகையான திட்டமே வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு கோணங்களில், வெவ்வேறு வசதிகளைப் பயன்படுத்திச் செய்யப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் அடுத்த பார்வையாக விளங்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் திருமலையை விடவும் புலிகளின் செயற்பாடு தடுக்கப்பட்டுள்ள மாவட்டமாகும். ஆனால் திருமலையை விடவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் ஆளணிப் பலம் குறிப்பிடும்படியாக உள்ளது எனலாம். அங்கு சுமார் 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் வரையான உறுப்பினர்கள் இருப்பதாக உள்ளிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் அண்மையில் அதாவது, கடந்த மூன்று மாத காலப்பகுதிக்குள் மட்டும் விலகி ஓடுதல், படையினரிடம் சரணடைதல் என்ற காரணங்களால் சுமார் 1500 பேர் வரை புலிகள் இயக்கத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை வாகரை, கொக்கட்டிச் சோலை ஆகிய பிரதான முகாம்கள் தவிர, காக்காச்சிவெட்டை, பலாச்சோலை, பாலயடிவெட்டை, ஊத்துச்சேனை, வடமுனை ஆகிய பகுதிகளிலிருந்து தற்போது புலிகள் பின்வாங்கியுள்ளனர். இந்த இடங்களிலிருந்து தமது முகாம்களை அப்புறப்படுத்திய புலிகள் வாகனேரி, வாகரை, கதிரவெளி, பனிச்சங்கேணி, நாவலடி ஊத்து, கரடியனாறு, பஞ்சுமரத்தடி, திகிலிவெட்டை, டோராபோரா தரவை, இலுப்படிச்சேனை, வெள்ளாமைச்சேனை ஆகிய பகுதிகளில் தற்போது தமது முன்னரங்குகளை அமைத்துள்ளனர். இந்த முகாம்களிலிருந்து புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்துவதாக இருந்தால், அதற்கு முதலில் இலக்காகும் இராணுவத் தளங்களாக இருப்பவையாவன, குறிப்பாக கரடியனாறு - இலுப்படிச்சேனை பகுதியிலிருந்து செங்கலடி நோக்கியும், வாகரையிலிருந்து - கஜூ வத்தை, மாங்கேணியை நோக்கியும், நாவலடி ஊத்து, வெள்ளாமைச்சேனை, கூளாவடி ஆகிய பகுதிகளிலிருந்து - வாழைச்சேனையை நோக்கியும் புலிகளின் தாக்குதல்கள் தொடுக்கப்படலாம். அதற்கான திட்டங்களைப் புலிகள் வகுத்திருப்பதாக அறியமுடிகிறது.

மேற்படி தாக்குதல்கள் திட்டமிடப்பட்டிருந்தாலும், புலிகளுக்குள் கிழக்கில் ஏற்பட்டிருக்கும் உள் முரண்பாடுகளும், நம்பிக்கையீனங்களும் அதிரடி நடவடிக்கை ஒன்றுக்கு வாய்ப்பாக இல்லை என்றே கருதலாம். புலிகளின் தற்போதைய கிழக்குத் தளபதிகளால் கீழ் மட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஒரே அறிவுறுத்தலானது, 'போர் போர் - மரணம் மரணம்' என்பதாகவே இருக்கின்றது. இந்த விளக்கமில்லாத போரும், மரணமுமான கட்டளைகள் உறுப்பினர்கள் மட்டத்தில் பாரிய குழப்பங்களைத் தோற்றுவித்துள்ளதை புலிகளிலிருந்து தப்பித்து வந்துள்ள உறுப்பினர்களும், பொறுப்பாளர்களும் மிகுந்த அதிருப்தியோடு விவரிக்கின்றனர்.

ஆகவே, மக்களைப் பாதிக்கக்கூடிய தாக்குதல்கள், படையினரை இலக்காகக் கொண்டு நடத்தப்படவே அதிக வாய்ப்புகள் உண்டு எனலாம்.

## அதிரடி அய்யாத்துரை



**யாழ்ப்பாணத்துக்குப்** போக்குவரத்தும், பார்சல் அனுப்பும் முறையையும் எப்புடிச் செய்யிறியள், அது பாதுகாப்பானதோ எண்டு கேப்பமெண்டு டிபென்ஸ் மினிஸ்ரிக்குப் போனனுங்கோ. அங்க நல்லாப் பரிச்சயமான குரல் கேட்டுது...பிறகு அது எங்கட ரவியான ராயரின்ரது எண்டதை கிரகிச்சுக் கொண்டன். எடேய் உந்த மனிசன் மக்களின்ர பிரச்சினையைக் கதைக்க உப்பிடி டிபென்ஸ் மினிஸ்ரிக்கெல்லாம் வந்து அலையுதே, அப்புடி என்னதான் அக்கறையோடு கதைக்கிறார் எண்டு கேட்ட எனக்கு, அதிர்ச்சியுங்கோ. அவர் சனத்தின்ர பிரச்சினையை கதைக்க வரயில்லையுங்கோ. தன்ர பிரச்சினையைத்தான் கதைக்க வந்திருக்காருங்கோ. யாழ்ப்பாணத்துக்குச் சாமான் அனுப்ப வேணுமாம். அதுவும் ஆமியின்ர பிளைட்டில - அதுவும் 200 கிலோவாம். அதுக்கு அனுமதி வேணும் எண்டு காலில விழாத குறையாகக் கெஞ்சிக்கூத்தாடிக் கொண்டிருக்கிறார். அவை, அதுக்கு என்னென்னவோ ஒப்ஜெக்ஷன் சொல்லியும் எங்கட ரவியான ராயர், ம்ஹூம்... விடமாட்டன். எனக்கு உதுக்கு அனுமதி தாங்கோ. நான் ஒரு எம்.பி. எண்டெல்லாம் மண்டாடிக் கொண்டு இருந்தாருங்கோ. எனக்கு உதுக்கு மேல அவரின்ர கெஞ்சலைக் கேட்டுக் கொண்டிருக்க மனசு இல்லாமல் வெளியாலை வந்திட்டேனுங்கோ. மக்களாவது, மண்ணாங்கட்டியாவது, தன்ர பிரச்சினையை முடிச்சால் போதும் எண்ட தங்கட கொள்கைகளை எப்புடி சரி பண்ணப் பார்க்கினம் பாத்தியளோ. உதுதானுங்கோ தமிழர் விசுவாசம் - வாழ்க விசுவாசம். இண்டைக்குத் தேதியில எம்.பிப்பதவி சாமான் அனுப்ப உதவினாலே பெரிய விஷயம் எண்டா கிட்டுதுங்கோ...

**யாழ்ப்பாணத்துக்குச்** சாமான் அனுப்பலாம் எண்ட செய்தி வெளியானதில இருந்து போஸ்ட் ஒப்பிசுகளில ஒரே வரிசையாகக் கிடக்குதுங்கோ. உறவுக்காரர்களுக்கு சாமான்கள் அனுப்பிறவையும், நண்பர்கள், தெரிஞ்சவைக்குச் சாமான் அனுப்புறவையுமாக வரிசை நீளுதுங்கோ. எங்கட சனம், என்ன செஞ்சால் உயிர் வாழலாம் எண்டதைப் பற்றி எப்புடி எப்புடி யோசிக்க வேணுமோ, அதையெல்லாம் செய்யினம். சனங்களை பட்டினியில் போட்டுக் கொண்டு உரிமை பற்றிப் பேசிறது கருங்கல்லில விதை தூவிற மாதிரித்தான் எண்டினம். உண்மையிலேயே ரெண்டெழுத்தார் சனத்தின்ர மேல அக்கறை இருந்தால், ரெண்டு மாதத்துக்குத் தன்னும் சாப்பாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க கப்பல் பயணத்தை அரசாங்கம் நடத்தட்டும். மக்களின்ர பிரச்சினை ஓரளவுக்குத் தீர்க்கப்பட்ட பிறகு, மீண்டும் பாதையைத் திறக்கிற முயற்சியையும் அது குறித்தான பேச்சுவார்த்தையையும் நடத்தலாம் எண்டு அரச தரப்பை வலியுறுத்தியிருக்கலாம். அதைச் செய்யாமல், பாதை திறங்கோ எண்டு அதிகாரத் தரப்பை சர்வதேசத்துக்கு முன்னால அம்பலப்படுத்தினாங்கள், சாதாரண மனிதாபிமான பிரச்சினை இது எண்டினம். அந்த சாதாரண மனிதாபிமானப் பிரச்சினையை புத்திசாலித்தனமாகத் தீர்க்க இவை கொஞ்சம் மனிதாபிமானத்தைக் காட்டயில்லையே. அதுதான் சனத்துக்கு கடுப்பாக இருக்குங்கோ.


**அண்டை** நாட்டில பரவின 'சிக்கன் குனியா' எண்ட காச்சல் இப்ப எங்கட நாட்டிலையும் வேகமெடுத்துப் பரவிக் கொண்டிருக்குது. 'சிக்கன் குனியா' எண்டவுடன எங்கட சனம் "கோழிக் காச்சல், கோழிக் காச்சல்" எண்டு சொல்லிக் கொண்டு திரியினம். உண்மையில உந்த 'சிக்கன் குனியா'வுக்கும் "சிக்கன்" அதாவது கோழிக்கும் ஒரு தொடர்பும் இல்லையுங்கோ. அதுவும் நுளம்பாலதான் பரவுது. "டெங்குக் காச்சல்" போல அறிகுறிகளைக் கொண்டிருந்தாலும் "டெங்கு" போல ஆபத்தானதில்லை எண்டு டொக்டர்மார் சொல்லினம். மன்னார், கொழும்பு எண்டு உந்தக் காச்சல் பரவலாகப் பரவுதுங்கோ. மூட்டுவலி, கொப்புளம், தஞ்சக்கேடு எண்டெல்லாம் காட்டுமாம். அதாலை காச்சல் எண்டதும் வழமையான காச்சல்தானே எண்டு இருந்து போடாமல் ஒருக்காச் 'செக்' பண்ணிக் கொள்ளுங்கோ. நாம வாழிற கலிகால வாழ்க்கையில எத்தனை வகையான வியாதிகள் வருகுது பாத்தியளோ. உதுக்குள்ள ஒரு சந்தோசமான விஷயம், 'எயிட்ஸ்' நோயைத் தடுக்கும் தூண்டு பொருள் (என்ஸைம்) ஒண்டை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிச்சிருக்கினமாம். இனி 'நோய் எதிர்ப்பு' சக்தியை அதிகரிக்கச் செய்யவும், குறித்த கிருமிகளை சிதைக்கவும் முடியுமாம். உலகத்தில 4 கோடிப் பேர் "எயிட்ஸ்" தொற்றியிருக்கினம் எண்டும் இரண்டரைக் கோடிப் பேர் மாண்டு போயிட்டினம் எண்டும் புள்ளி விபரங்கள் சொல்லுதுங்கோ.

**இருபதாயிரம்** மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இறக்கப் போகினமாம் எண்டொரு செய்தி பரவலாக அடிபடுகுது. அது நடந்தால் நல்லதுதான். உந்த நல்லதையே கெட்டதாப் பாக்கிற ஒரு பேராசிரியர் என்ன நினைக்கிறார் தெரியுமோ யாழ்ப்பாணத்தில இருக்கிற நிலைமையைக் காரணம் காட்டி அந்நிய சக்திகள் தங்கட மூக்கை நுழைக்கப் பாக்கினமாம். உதே கதையை ரெண்டெழுத்தாரின்ர 'ஜிங் ஜக்' குரூப் எப்படிப் பார்க்கினம் தெரியுமோ இலங்கை அதிகார வர்க்கம் தமிழ் சனத்தை பட்டினியிலை போடுதாம். அதைக் கண்டு பொறுக்க ஏலாமல்தான் அண்டை நாடு உணவுப் பொருள் அனுப்புதாம். அப்புடி அண்டை நாடு செய்யிறது இங்கத்தைய அரசுக்கு ஒரு அழுத்தமாக இருக்குமாம். அப்ப இவை பாதையைத் திறந்துவிட யோசிப்பினமாம். உதே கதையை ஆளுந்தரப்பும், மற்றவையும் எப்புடிச் சொல்லினம் தெரியுமோ, பாதையை மூடியிருக்கிறது, ரெண்டெழுத்தாரின்ர வருவாயைக் கட்டுப்படுத்தவும், அவையை முடக்கவும். யாழில இருக்கிற உணவுத் தட்டுப்பாட்டை இல்லாமல் செய்யவேணும். அதுக்கு இந்த அரசு எடுக்கிற முயற்சிக்கு சப்போட்டாக அண்டை நாடும் அந்த நடவடிக்கையை எடுத்திருக்குதாம். அது நடந்தால் ஆறு லட்சம் மக்களின்ர அவலக் கதையை ரெண்டெழுத்தார் கைவிட்டுப்போட்டு வேறு எதை எடுக்கப் போயினமெண்டதைப் பார்ப்பம் எண்டினம். பாத்தியளோ, ஒரே விஷயத்தை எப்புடி எப்புடி புரட்டிப் புரட்டிப் பார்க்கினமெண்டு நம்மட பார்வையில உது, "இனாமாகக் கிடைக்கிற மாட்டை பல்லைப் பிடித்துப் பதம் பார்த்த கதை தானுங்கோ!" என்ன நான் சொல்லிறது சரியோ, பிழையோ...

# கடல்

நம்மைச் சுற்றி நாலு பக்கமும் கடல். கடலை நம்பிய வாழ்க்கை. உலகில் எழுபத்தொரு சதவீதம் கடல் தான். கடலை கரையில் இருந்து பார்க்கும் போது கடலின் அழகும் விசாலமும் வியப்பூட்டும். கடலின் அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக பிரண்டு பிரண்டு வந்து கரையில் எழுந்து, மீண்டும் விழுந்து கடலுக்கே செல்வது என்பது ரசிக்க ரசிக்க அலுத்துப்போகாத காட்சி. கடலைப் பற்றிய ஞாபகமே ஒரு பயங்கரமானதாக இன்று நமக்கு ஏற்பட்டுவிட்டது. அதற்குக் காரணம், சுனாமி வந்து அழித்து விட்டுப் போனதுதான். ஒரு சுனாமி வந்ததுக்காக இன்று கடலைக்கண்டு பயப்படுகிறோம் என்றால், கடல் இன்னும் கோடிச் சுனாமிகளை தனக்குள் அடக்கிக் கொண்டுதான் மௌனமாகக் கிடக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. கரையில் இருந்து கொண்டு கடலைப் பற்றி சிந்திக்க முடியாது என்று கடலுக்குப் போனேன். நான், யாழ்ப்பாணம் நெடுந்தீவுக்குப் போகும் போது ஊர்காவற்றுறையில் இருந்து ஒரு படகு பிடித்துச் சென்றேன். புங்குடுதீவு குறிகட்டுவானுக்கும் - நயினாதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் பயணிக்கும்போது ஏழு கடல் சங்கமிக்கும் ஆபத்தான இடம் ஒன்றுள்ளது. அந்த இடத்தில் அலைகள் நான்கு பக்கமும் இருந்து வந்து அந்த இடத்தில் சந்தித்துக் கொள்கின்றன. அதற்குள் படகைச் செலுத்துவது ஆபத்தான விடயம் என்றார்கள். எனக்கென்னவோ அந்த இடத்தைப் பார்க்க வேண்டும் போல் இருந்தபடியால் படகை செலுத்தச் சொல்லி அருகில் சென்றேன். அப்போது படகைப் பிடித்துத் தள்ளுவது போல அலைகள் வந்து மோதின. அந்த இடத்தில் கடல் ஏதோ கோபத்தோடு இருப்பதுபோல் முட்டி மோதிக் கொண்டிருந்தது.



தருவது
-தேசன்

நான் பயணித்த படகு கவிழ்ந்துவிடும் போல் இருந்தது. சிலர் படகு பிளந்து விடும் என்று கூறினார்கள். அதற்கு மேலும் பிடிவாதம் பண்ணாமல் கொஞ்சம் எட்டிப் போய் விட்டேன்.

இந்த சமுத்திரக்கடல் கண்ணுக்கு எட்டிய வரை விரிந்து கிடந்தது. கடலைப் பார்க்கின்ற போது உலகக் கிண்ணத்தில் ஊற்றி வைத்தது போல் இருக்கிறது. கடல் நீர் வற்றி விட்டால், வெறும் தரையாகக் கிடக்குமோ என்று சில சமயம் எண்ணத் தோன்றும். ஆனால் கடல் வெறும் தரையாக இல்லை. கடலின் அடியில் எவரெஸ்ட் மலையை விடவும் உயரமான மலைகளும், ஆழிகளும், பள்ளத்தாக்குகளும் இருக்கின்றன. பாலைவனம் போல் மணல் மேடுகளும் இருக்கின்றன. மரங்கள், கொடிகள் என்பவற்றுக்கு அப்பால் கப்பல்கள், கட்டிடங்கள் என்று இன்னொரு பிரமாண்டமான உலகம் கடலுக்குக் கீழ் இருக்கிறது என்பதை நினைக்கும் போது ஆச்சரியம் வருகிறது.

தனக்குள் எல்லாவற்றையும் மூடிக் கொண்டு கடல் விழித்துக் கிடக்கிறது. கடல் நினைத்தால் ஒரு மணி நேரத்துக்கு ஒரு சுனாமியை பூமி மீது, ஏவி விட்டுக் கொண்டு இருக்க முடியும், கடல் வன்முறையை விரும்பவில்லை என்பதைத்தான் அதன் பொறுமை காட்டுகிறது. பூமி வெப்பமடைந்து வருவதாகவும் அதனால் கடல் மட்டம் இன்னும் உயரும் என்றும் விஞ்ஞானிகள் அஞ்சுகின்றனர். கடல் சிரித்துக் கொண்டேதான் இருக்கிறது. மனிதன் பெருகிக் கொண்டிருக்கிறான் என்றோ, வளர்ச்சியை நோக்கி முன்னேறுகிறான் என்றோ கடல், வீணாக கவலை கொள்வதில்லை. ஏனெனில் கடல் மனிதன் மீது எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் மனிதன் கடலிடம் இருந்து பல எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறான். கடல் நீரை குடி நீராக்கி மனிதன் குடிக்கின்ற காலம். இப்போது இந்தியாவுக்கும் - பங்களாதேஷுக்கும் இடையில் உள்ள புலிகள் வாழும் காட்டுப் பகுதியில் கடல் அலைகளைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க முயற்சி செய்யப்படுகிறது. இப்படி ஆக்கத்துக்காக கடல் பாவிக்கப்படுகின்றது. ஒரு பக்கம் - சர்வதேசக் கழிவுகள், ஊத்தைகள் அத்தனையும் கடலை நோக்கித்தான் திருப்பி விடப்படுகிறது. கடலின் பரப்பளவோடு பார்க்கின்றபோது, மனிதன் அசுத்தப்படுத்துவது மிகச் சொற்பம் தான். ஆனாலும் கடல் பற்றிய கவலை. துளியளவும் இல்லாமல் அசுத்தப்படுவதுதான் கவலைக்குரியது. கடலுக்கு அடியில் பூமித் தட்டுக்கள் அவ்வப்போது விலகுவதும், பூகம்பங்கள் இடம் பெறுவதுமாக இருந்தபோதும் கடல் அத்தனையையும் அடக்கிக் கொண்டு மனிதனை

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)


## சிங்கப்பூரில் தங்குமிட வசதி

சிங்கப்பூரில் விடுமுறையைக் களிக்கவும், திருமணத்துக்கு வருபவர்களுக்கும் எல்லா வசதியுடன் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். திருமணத்துக்கு வருபவர்களுக்கு திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த கட்டணத்தில் இலங்கை முறைப்படி செய்து தருவோம். மற்றும் தேவைப்படும் உதவிகளையும் செய்து தருவோம்.

மேலும் விபரத்துக்கு:-

எந்த நேரமும் தொடர்பு கொள்ள வசதியாக கைத் தொலைபேசி எண்:
00,65,97514941 என்ற எண்ணில் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.

LINGAM WEDDING SERVICES
153, Jalan Jarak, , Singapore 809281

## விளம்பரப் பகுதி

ABI Beauty Parlour

உங்கள் அழகினை மேம்படுத்திக்கொள்ள சிறந்த இடம்

Abi Beauty Parlour

Bridal Dressing, Latest Facials
Hair Rebonding, Hair Treatments
Watts Removing.....


பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன முற்பதிவுகளுக்கு தொடர்புகொள்ளவும்.

No. 60 6/4, Mayfield Road,
Kotahena, Colombo - 13.
Tel : 2387737, Hotline : 077-9539263
after 6'Clock - 2431137
(Ladies Only)









## மலையாள மாந்திரீகம்

உங்கள் காரியங்கள் நினைத்தது நினைத்தப்படி நிறைவேற வேண்டுமானால் என்னை சந்தியுங்கள். எத்தனை பேர்களிடம் சென்று மாந்திரீக பரிகாரம் செய்து தோல்வி கண்டவர்கள் என்னை தேடி வர காரணம் என் கை ராசியே. வாழ்க்கை பிரச்சினையாக இருந்தாலும் சரி, தீராத நோயாக இருந்தாலும் சரி என்னை கண்டு மாந்திரீக பரிகாரம் செய்தால் முன் வினை பாவகரும தோஷங்கள் நீங்கி விடும்.

வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி உரையாடல் வசதி உண்டு

## எனது தனித்தன்மை என்ன

உண்மைச் சேவையை உறுதி படுத்தும் முகமாக கடந்த 39 வருடங்களாக எனது புகைப்படத்தை மக்களுக்கு அறிமுகம் செய்கின்றேன். இது மட்டுமா? வாங்கும் பணத்திற்கும். (GURANTY CARD) வழங்குவதும் இது எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு எந்த மாதம் என்றெல்லாம் ஆணிவேறு அக்குவேராக அன்பர்களின் முகத்தை பார்த்த மாத்திரம் கூறிவிடுவேன்.

## இனி உங்கள் பிரச்சினை என்ன?

வாருங்கள் உங்கள் குறைகளை கூறுங்கள். இவையுடன் வெளிநாட்டவர்களுக்கென அதி விஷேட சாமகால பூசை நடைபெறுவது என்றால் அது அன்னை ஸ்ரீ துர்க்கையின் கருணையே
என்னால் நன்மை பெற்றவர்கள் என்ன கூறுகிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக 39 வருடகாலமாக தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக

**சுவிஸ் அன்பரின் கணவன்,மனைவி பிணக்கு தீரல் மடல்**
மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசிர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 7000 மு.ஆ க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின்ச க்தியால் பேசும் மழலை**
மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானகோடி நன்றிகள்.

**ஜெர்மன் அன்பரின் மடல் மகளின் திக்குவாய் குணமாகியது**
அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**
பெறுமதிப்புக்குறிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் அருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்**
பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம்16 நாளில் வெற்றி**
தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா எனது சகோதரிக்கு திருமணம் தடைபட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பிரான்ஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயனம் வெற்றி**
அன்புக்கும் மதிப்பிற்குறிய ஐயா. வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஸ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி**
வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான் என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்**
அன்புக்குறிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள் நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் குறியது பலிதம்**
மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறிந்திருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன் என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை**
மதிப்பு மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்த்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும். அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**கொழும்பு அன்பரின் மடல் அச்சொட்டான கைரேகை பலன்**
அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வாழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**கண்டி அன்பரின் மடல்**
பல சிரமங்கள் மத்தியில் இருந்தேன். தினமுரசில் உங்களுடைய அற்புத சேவையைப் பார்த்து உடன் தொடர்பு கொண்டேன். உடன் எனது ஜாதகத்தைக் கணித்து என் வாழ்வில் நடப்பது நடக்க இருப்பது பற்றி மிகத் தெளிவாக கூறியிருக்கிறீர்கள். என் உள்ளம் நிறைந்த நன்றிகள். தங்களின் பரிகாரமான செயலால் என் மனம் அமைதியடைந்து சந்தோஷத்துடன் இருக்கிறேன். வாழ்க ஐயாவின் சேவை

**இனி உங்கள் மகிழ்ச்சிக்கு**
அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கபோவது இவையனைத்தும் ஜாதகம் மூலமாகவோ? கைரேகை மூலமாகவோ? தெட்டத் தெளிவாக உங்கள் பலாபலன்களை அறிந்து சிறப்பான மகிழ்ச்சியான, குபேரவாழ்வு பெற என்னை நேரில் சந்தியுங்கள். உண்மையென்பது உண்மையே.

உலக மளையாள மாந்திரீக சக்ரவர்த்தி பேராசிரியர்
டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N. ) JP PROF. DR. P.K. SAMY (J.D.G.A.N. ) JP

ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. No- 162 KOT AHENA STREET COLOMBO 13
Tel-011-2470615, 011-2342463, 011-2342464,011-2431137

FAX-0094-11 2344831 Email- drpksamy@sltnet.lk Web:- www. drpksamy .com

எமது கிளை நிறுவனம் நுவரெலியாவில் மட்டுமே.
No-33,Daily Fair Complex, Kandy Road Nuwara-Eliya.
Tel: 052-2222508




# ஏ-9 வீதியும் சமாதானத்தின் தலைவிதியும்!

"**நாங்கள்** ஏ-9 பாதையைத் திறக்கத் தயாரில்லை. எனது இந்தத் தீர்மானம் மாறாமல் இன்னமும் இருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்" - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்க சமாதானக் குழுவின் தலைவரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு விடுத்த திட்டவட்டமான அறிவுறுத்தல் இதுவாகும். ஜனாதிபதியின் உத்தரவிற்கு இணங்க அரசாங்கத்தின் இந்தத் திட்டவட்டமான நிலைப்பாட்டை புலிகளுக்கு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஜெனீவாவில் தெரிவித்தார்.


"ஏ-9 பாதை மூடப்பட்டதால், யாழ்.குடாநாட்டில் ஆறு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அறுபதாயிரம் இராணுவத்தினரின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு திறந்த வெளிச் சிறைக்குள் வாழ வேண்டி ஏற்பட்டுள்ளது. ஏ-9 பாதை மூடப்பட்டதால் புதியதொரு பெர்லின் சுவர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது" என்று யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் மனிதாபிமான நெருக்கடியைச் சுட்டிக்காட்டிப் புலிகளின் சமாதான தூது கோஷ்டித் தலைவர் தமிழ்ச்செல்வன் ஜெனீவா பேச்சுவார்த்தையின் அங்குரார்ப்பண உரையின்போது குறிப்பிட்டார்.

ஏ-9 பாதை மூடப்பட்டமை, யுத்த நிறுத்த மீறல் என்று கூறிய தமிழ்ச் செல்வன், மக்களின் சுதந்திர நடமாட்டத்தைத் தடுப்பதன் மூலம், அரசாங்கம் குடும்ப அங்கத்தவர்களைப் பிரித்து வைத்திருப்பதோடு, வார்த்தைகளால் சொல்ல முடியாத அவலத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது என்று குறிப்பிட்டார். ஏ-9 பாதையைத் திறக்குமாறு புலிகள் இயக்கம் வற்புறுத்திய அதேவேளை, புலிகள் வன்செயலை நிறுத்தி பாதுகாப்புப் படைகள் மீதான தாக்குதலைக் கைவிட்டதும் பாதை திறக்கப்படும் என்று அரசு கூறியது. புலிகள் இயக்கம் நேர்மையாகவே யாழ்ப்பாண மக்களுக்கு உதவ விரும்பினால், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கமிட்டியோ அல்லது வேறு ஏதாவது அமைப்புகளோ கடல் மார்க்கமாக அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்லப் அனுமதிக்க வேண்டுமென்று அரசாங்கம் தெரிவித்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி தனது கொடி பறக்க விடப்படவேண்டுமென்று கோரியது.

இதேவேளை பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட பிரதான விடயங்கள் தொடர்பான ஏழு அம்ச யோசனைகளை அரசாங்கம் முன்வைத்தது. ஜனநாயகம், பல கட்சி அமைப்பு முறை, பன்முகத்தன்மை, மனித உரிமைகள், பிள்ளைகளைப் படையணிகளில் சேர்த்தல், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி, அதிகாரப் பகிர்வு ஆகிய யோசனைகளை அரசாங்கம் முன்வைத்தது. எனினும் இந்த விடயங்களில் எதைப் பற்றியாவது பேசுவதற்கு அக்கறை காட்டிடாத புலிகள் இயக்கம், எவ்வித பேச்சுவார்த்தைகளுக்கும் முன்னதாக மனிதாபிமான அடிப்படையில் ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டுமென வற்புறுத்தியது.

முகமாலையில் ஏ-9 பாதை திறக்கப்பட்டால், யாழ்.பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்களை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிளுக்குள் கொண்டு சென்று பயிற்சியளிப்பார்கள். பின்னர் அவர்களை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்வதற்கு அது புலிகளுக்கு உதவியாக அமையுமென்று அரசாங்கம் சுட்டி காட்டியது. அத்துடன் ஏ-9 பாதை திறக்கப்பட்டால் மக்கள் மீது பாரிய வரிகளை மீண்டும் புலிகள் அறவிடுவதற்கு வழிவகுக்குமென்றும் அரசாங்கத்தின் முன்னணி பாதுகாப்பு நிலைகள் மீது தாக்குதல்கள் நடத்த புலிகளுக்கு அது வசதியாக அமையுமென்றும் அரசாங்கம் சுட்டிக்காட்டியது.

ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி வரை ஏ-9 பாதை வழியாக புலிகள் இயக்கம் சேகரித்த வரி, அதற்கு வருமானம் அளித்த முக்கியமான ஒரு வழிமுறையாகும். மாதாந்தம் இருபது கோடி ரூபாவிலிருந்து முப்பது கோடி ரூபாவரை வரி விதிப்பின் மூலம் புலிகள் இயக்கம் சம்பாதித்தது. 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, பின்னர் பாதை திறக்கப்பட்டதுமே இந்தப் பாதையைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரிடமும் வரி பெறும் முறையைப் புலிகள் இயக்கம் அறிமுகப்படுத்தியது. இப்பாதையூடாகக் கொண்டு செல்லப்படும் சகல பொருட்களுக்கும் புலிகள் இயக்கம் வரிவிதித்தது.




### ஏ-9 பாதையின் வரலாறு

ஏ-9 பாதை கண்டியிலிருந்து ஆரம்பமாகிறது. ஆரம்பத்தில் இதனை கண்டி - யாழ்ப்பாணம் வீதி என்று குறிப்பிட்டனர். பிரதான நிலப்பரப்பிலிருந்து யாழ்.குடாநாட்டுக்குச் செல்லும் பிரதான தரை வழிப்பாதை இதுவாகும். கிளிநொச்சி, பூநகரியூடாக யாழ்ப்பாணத்துக்குச் செல்ல மாற்றுப்பாதையொன்று இருந்தாலும், ஏ-9 பொதுவாக பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்படுவதில்லை.
கண்டியிலிருந்து வவுனியா வரையான ஏ-9 பாதை இலங்கை இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டிலுள்ளது.
வவுனியாவிலிருந்து முகமாலை வரையிலான பாதை பெருமளவுக்குப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. கொக்காவில், கிளிநொச்சி, ஆனையிறவு ஆகியவை இவற்றுள் அடங்கும்.
முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் வரையான கடைசிப் பகுதி அரசாங்கப் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

1983ஆம் ஆண்டு வரை முழு ஏ-9 வீதியும் இலங்கைப் படையினரின் பூரண கட்டுப்பாட்டிலேயே இருந்தது.
ஆனையிறவு, கிளிநொச்சி, கொக்காவில், மாங்குளம், வவுனியா ஆகிய இடங்களில் இராணுவ முகாம்களும் இருந்தன. சண்டை ஆரம்பித்த பின்னர் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்யும் பந்தோபஸ்து படையினர் மீது பாரிய தாக்குதல்களை நடத்த புலிகள் இயக்கம் தொடங்கியது.

யுத்தம் ஆரம்பித்தால் ஏ-9 பாதையால் செல்லும் பாதுகாப்புப் படையினர், புலிகள் மறைந்திருந்து நடத்தும் தாக்குதல்களை எதிர்கொள்வதற்காக ஆகக் குறைந்தது இரண்டு வாகனங்களையாவது பாதுகாப்புக் கவசங்களாகப் பயன்படுத்துவர். வன்செயல்கள் அதிகரித்ததால் 1984ஆம் ஆண்டிலிருந்து இப்பாதையால் செல்லும் படையினர் பூரண இராணுவப் பாதுகாப்போடு செல்ல வேண்டிய நிலையேற்பட்டது. இதனால் பல பாதுகாப்பு வாகனங்கள் தேவைப்பட்டன.

1986ஆம் ஆண்டு முதல் பிரத்தியேகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், இராணுவத்தினர் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை செல்வதற்கு நான்கு, ஐந்து நாட்கள் வரை பிடித்தது. இவ்வாறான பயணங்களின் போது பெருந்தொகையான படையினர் கொல்லப்பட்டனர். பெரும் சேதங்கள் ஏற்பட்டன. 1990களின் ஆரம்பத்தில் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையிலான ஏ-9 பாதையில் அமைந்திருந்த பல இராணுவ முகாம்களைப் புலிகள் இயக்கத்தினர் கைப்பற்ற முடிந்தது.

> ***'ஏ-9 வீதியைத் திறப்பதற்கு எல்.ரீ.ரீ.ஈ.அழுத்தம் கொடுப்பது ஏன்?' என்ற தலைப்பில் சுனில் ஜயசிரி என்ற பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான ஆய்வாளர் எழுதிய கட்டுரை கடந்த 8ஆம் திகதிய 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. இப்பாதையில் பயணிக்கும் மக்கள் மற்றும் எடுத்துச் செல்லப்படும் பொருட்களுக்காக மாதாந்தம் இருபது கோடி ரூபாயிலிருந்து முப்பது கோடி ரூபாவரை வரி விதிப்பின் மூலம் புலிகள் இயக்கம் சம்பாதிப்பதாக இவர் குறிப்பிடுகின்றார்.***

1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் திகதி கொக்காவில் இராணுவ முகாம் புலிகள் இயக்கத்தினரின் தாக்குதலுக்கு இலக்கானபோது, லெப்டினன்ட் அலதெனிய முகாமின் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றினார். இத் தாக்குதலின் போது வேறு இடங்களிலிருந்து இராணுவ அணிகளை கொக்காவிலுக்கு அனுப்பி வைக்க முடியவில்லை. துருப்புக்களிடமிருந்த ஆயுதங்களும் குறைந்து போயின. வேறு இடங்களிலிருந்தே கொக்காவில் இாணுவ முகாமிற்கு தண்ணீர் கொண்டு வரப்படுவதால் தண்ணீர் பற்றாக்குறையும் ஏற்பட்டது. முகாமைக் கைவிட்டு பின்வாங்குமாறு லெப்டினனட் அலதெனியாவுக்கு மேலிடத்திலிருந்து உத்தரவுகள் அனுப்பிவைக்கப்பட்டன. அவரது துருப்புகளில் பெரும்பாலானோர் காயங்களுக்குள்ளானதால் அவ்வாறு செய்ய முடியவில்லை. வாபஸ் வாங்கிச் செல்ல முடிந்தவர்களைப் பின்வாங்குமாறு அவர் உத்தரவிட்டார். முகாமைப் புலிகள் கைப்பற்றும் வரை அவர் அங்கேயே இருந்தார். இத் தாக்குதலின் பின்னர் யுத்தத்தில் அவர் காணாமற் போய் விட்டார் என்று அறிவிக்கப்பட்டது. அவர் இறந்த பின்னர் மிகக் கூடிய வீரதீரச் செயல்களுக்கான 'பரமவீர விபூஷண' விருது அவருக்கு வழங்கப்பட்டது. இந்த மோதலின் போது 19 துருப்புகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 37 பேர் காயமடைந்ததாகவும் 77 பேர் சண்டையில் காணாமற் போனதாகவும் அறிவிக்கப்பட்டது. இந்த கொக்காவில் யுத்தத்தின் போது 53 புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது. இக் காலகட்டத்தில் ஏ-9 பாதையில் கிளிநொச்சி வரையிலான பகுதியை இராணுவம் விரைவாக இழந்தது. இராணுவம் கிளிநொச்சியிலிருந்து ஆனையிறவுக்குப் பின்வாங்கியது.

1990களில் வவுனியாவிலிருந்து ஆனையிறவு வரையிலான ஏ-9 பாதையை மீளக் கைப்பற்றுவதற்கு ஜயசிக்குறு, பலவேகய உட்படப் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொண்டனர். சில முக்கிய இடங்களைப் படையினர் மீளக் கைப்பற்றியபோதிலும், தந்திரோபாய காரணங்களுக்காகப் பல இடங்களை இராணுவம் விட்டுப் பின்வாங்க வேண்டிய நிலையேற்பட்டது.

1994ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரை ஓமந்தையிலிருந்து முகமாலை வரையிலான 115 கிலோ மீற்றர் பாதை மூடப்பட்டிருந்தது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் மக்களின் நடமாட்டத்துக்காக ஏ-9 பாதை திறந்து விடப்பட்டது. 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் பதினொராம் திகதி யுத்தம் தொடங்கும் வரை இப்பாதை திறக்கப்பட்டிருந்தது.

*-நன்றி :- டெய்லி மீரர்*

## ஏ-9 பாதையில் புலிகளின் கப்பம் அறவீடு :

யாழ்ப்பாணத்துக்கான பிரதான விநியோக மார்க்கம் ஏ-9 பாதையாகும். இப்பாதை கண்டியிலிருந்து ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் முடிவடைகிறது. மாத்தளை, தம்புள்ளை, கெக்கிராவ, வவுனியா ஊடாக இப்பாதை நீண்டு செல்கிறது. வன்னிப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளது. புலிகளின் தலைமையகம் அமைந்திருக்கும் கிளிநொச்சியை ஊடறுத்து இப்பாதை செல்கிறது. ஏ-9 பாதையின் நீளம் 320 கிலோ மீற்றர்களாகும்.

இப்பாதையின் தென்முனையிலுள்ள ஓமந்தையில் இலங்கை இராணுவத்தினரும் உட்பிரவேசிக்கும் வெளியேறும் சோதனைச் சாவடிகள் அமைந்துள்ளனர். இங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. வடமுனையில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முகமாலையில் உட்பிரவேசிக்கும் வெளியேறும் சோதனைச் சாவடிகள் அமைந்துள்ளன. ஓமந்தையிலும் முகமாலையிலும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள உட்பிரவேசிக்கும் வெளியேறும் இரு சோதனைச் சாவடிகள் அமைந்துள்ளன.

1990ஆம் ஆண்டுக்கும் 2002ஆம் ஆண்டுக்கும் இடையில் வன்னியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அரச படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பயங்கர மோதல்களின் போது இப்பாதை மூடப்பட்டிருந்தது. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து அதே வருடம் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி பாதை மீண்டும் திறக்கப்பட்டது.

ஏ-9 பாதையிலுள்ள முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியை, கடந்த ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி புலிகள் தாக்கியதை அடுத்து பாதுகாப்புக் காரணங்களுக்காக இப்பாதையை அரசாங்கம் மூடிவிட்டது.

தற்போது ஓமந்தையிலும் முகமாலையிலும் ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளது. மூடப்பட்ட பாதையின் நீளம் 65 மைல்களாகும். இது புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளது.

புலிகளின் சுங்க அலுவலகங்கள் முகமாலையிலும் ஓமந்தையிலுமுள்ள புலிகளின் சோதனைச் சாவடிகளில் உள்ளன. புலிகள் இயக்கம் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கூடாகச் செல்லும் மக்களிடம் வரிகளையும் அறவிட்டு வந்தது.

இருபது கோடி ரூபாவிலிருந்து முப்பது கோடி ரூபா வரையிலான பணத்தை மாதாந்தம் வரியாகவும் சுங்கத் தீர்வையாகவும் புலிகள் அறவிட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்து தெற்கிற்கு எடுத்துச் செல்லப்படும் அரிசி, வாழைப்பழம், புகையிலை, தேங்காய், மரக்கறி வகைகள் ஆகியவற்றிற்கும் புலிகள் இயக்கம் வரிகள் விதித்தது.

### ஏ-9 பாதையில் புலிகளின் வரிகளும், தீர்வைகளும்

பயணி ஒருவருக்கு - 250/=
ஒவ்வொரு வாகனத்துக்கும் - 3500/=
சரக்கேற்றிச் செல்லும் லொறி / வேன் - 3000/= இருந்து 7000/=வரை
சோதனை வரி - 200/= இருந்து 5000/= வரை
அப்பிள் ஒன்றுக்கு - 1/=
லொறிச் சிட்டை ஒன்றுக்கு - 1/=


### அத்தியாவசியப் பொருட்கள்

அரிசி, சீனி, மாவு - 10%
மதுபானம், சிகரெட், மோட்டார் வாகனம் - 25%
மின் உபகரணங்கள் - (ரேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி முதலியன) 15%
விவசாய உபகரணங்கள் - 10%
மீன்பிடி உபகரணங்கள் - 10%
மரப்பொருள் - 3%

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

அடுத்த கவிதை இதோ:
"எங்கள் குடும்பம்
தமிழ்க் குடும்பம்
ஒவ்வொருவர்
ஒவ்வொரு இனம்.
மாமியார்-
கசடதபற...
மாமனார்-
ஙஞணநமன...
மணாளன்
யரலவழள...
மருமகள்
நான் மட்டும்-




அவர்களுக்கு
ஆகாத
அக்கன்னாவாக...
அடுத்த வீட்டுத் தோழியிடம்
என் அவலத்தைச் சொன்னேன்.
அவள் சொன்னாள்:
"அடியே!
அக்கன்னா தானடி
ஆயுத எழுத்து!"
அடுத்த நாளே-
நான் ஆயுத எழுத்து
என்பதை...
அவர்களுக்குப்
புரிய வைத்தேன்.
இப்போது...
மாமியார்-
மாமனார்-
மணாளன்-
மூவருமே
என்
முந்தானையில்."
கவிதையை வாசித்து
முடித்ததும், கண்ணாடிக்குப்
பின்னிருந்த அகிலன் 'கொல்'லென்று
சிரிப்பது சப்தமின்றித் தெரிந்தது.
இதோ! அந்தத் தொடரில்
அடியேன் படித்த - படைத்த
மூன்றாவது கவிதை:
"அதிகாலையில்
அஞ்சடித்ததும்...
கோல்கேட்டில் பல்
விளக்கி - ஒரு
காக்காய்க் குளியல்.
புருஷனுக்கு-
ப்ரூ;
குழந்தைகளுக்கு-
காம்ப்ளான்;
அத்தை மாமாவுக்கு-
அரிசிக் கஞ்சி-
அதே சூட்டில்...
ஆறு பேருக்கும்
சோறு வடித்து-
பத்மா சேஷாத்ரி
பஸ் வருவதற்குள்...
குழந்தைகளைக்
குளிப்பாட்டி-
சீவி
சிங்காரித்து-
சொஜ்ஜியோ பஜ்ஜியோ
டிபன் பாக்ஸில் அடைத்து
டாட்டா காண்பித்துவிட்டு....
அவரும் நானும்
பூனை வருகிறதா என்று
பார்த்துப் பார்த்து
ஆபிஸ் புறப்பட...
அவர்-
ஹாய்யாக
பஜாஜ் ஸ்கூட்டரில்;
நான்-
அடியும் இடியும்
வாங்கிக் கொண்டு
பத்தாம் நம்பர்
பல்லவனில்...
நாள் பூராவும்-
ஆபீஸ் மேனேஜர்
அசட்டுப் பிசட்டென்று
பேசுவதற் கெல்லாம்-
பெருமாள் மாடாகி...
குனியும் போதும் நிமிரும்
போதும்
இடுப்பு மடிப்புகளை
எண்ணிப் பார்க்கும்
ஹெட் க்ளார்க்கை-
மனதிற்குள்ளேயே சபித்து...
பேலன்ஷீட் டேலி ஆகாமல்
பாடாய்ப் படுத்த
பேய்முழி முழித்து...
ஒரு வழியாக
வீடு வந்து சேர்கையில்-
வாச விளக்கில்
மின்சாரம் பூக்கும்.
மறுபடியும்....
ப்ரூ;
காம்ப்ளான்;
அரிசிக் கஞ்சி;
ஆறு பேருக்கு
சோறு...
சோற்றுக் கடையை அடைத்து-
பாத்திரம் பண்டம் கழுவி
குழந்தைகளுக்கு
ஹோம்வொர்க்கில் உதவி-
அத்தை முதுகில்
அயோடெக்ஸ் தேய்த்து-
மாமாவுக்கு
மட்டையில் பொடி நிரப்பி-
புருஷனோட சாக்ஸை
கசக்கிப் பிழிந்து காயப் போட்டு-
தேசிய ஒலிபரப்பில்
கொஞ்ச நாழி

(தொடரும்.......)



# உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




**இ**தனால் கொலையாளி, செயல்படுமுன் பிடிபடுவான் அல்லது கொல்லப்படுவான். ஒரு பிரமுகருக்கு எவ்வளவு பாதுகாப்பு இருக்கிறது, எந்த முறையில் பாதுகாப்பு அமைந்திருக்கிறது என்று பிறர் அறியாமல் பாதுகாப்பளிப்பதுதான் புத்திசாலித்தனமான பாதுகாப்பு ஏற்பாடாகும்.

இந்த உண்மையைத்தான் இஸ்ரேலிய பாதுகாப்பு நிபுணர் எடுத்துக் காட்டியிருந்தார்.

தவிர, பிரதம மந்திரி போன்றவர்களின் வீட்டைச் சுற்றிலும் கம்பியூட்டர் முறைப் பாதுகாப்பு, சிறந்த முறைப் பாதுகாப்பு ஏற்பாடாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக உளவு இலாகாவினரின் கண்காணிப்புத் திறமையை ஒட்டியே ஒரு பிரமுகருக்கு அளிக்கப்படுகின்ற பாதுகாப்புச் சிறப்பும் அமைகிறது.

வளரும் நாடுகளில் இந்தியா முதன்மை ஸ்தானம் வகிப்பதால் சர்வதேச உளவாளிகளின் நடமாட்டம் இங்கு அதிகரிப்பதற்கு எல்லாச் சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. தவிர, சர்வதேச அரங்கில் எந்த வல்லரசுக் கோஷ்டியுடனும் சேராமல் இந்தியா தனக்கென்று தனியான பாதையினை வகுத்துச் செயற்படுவதால் இந்தியாவைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளில் வல்லரசுகள் ஈடுபடுவதைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. தான் மேற்கொண்டுள்ள நிலைக்கு இந்தியா ஒரு விலை கொடுக்க வேண்டியது கப்பயமிற்து

உளவாளிகள் பற்றி மக்களிடையே பரவலான அறிவு ஏற்படுவதும் தேசப் பாதுகாப்பின் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்பட வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் எவ்வளவு சக்தி வாய்ந்த உளவமைப்பு இருந்தாலும் அதை ஏமாற்றிச் செயற்படக் கூடிய வல்லவர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

சமீபத்தில் சோவியத் KGB யைச் சேர்ந்த விட்டாலி யூத் சென்கோ என்கிற உளவாளி, அமெரிக்காவில் தஞ்சமடைய அனுமதி கேட்டு CIA யிலும் பொறுப்பான பதவி கொடுக்கப்பட்டார். தங்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாக CIA யைச் சேர்ந்தவர்கள் இதை விளம்பரப்படுத்திக் கொண்டார்கள். யூத் சென்கோவிடமிருந்து கிடைத்த தகவல்களை வைத்துக் கொண்டு அமெரிக்காவில் செயல்படும் பல ரஷ்ய ஒற்றர்களையும் அம்பலப்படுத்தப் போவதாக அவர்கள் பெருமையடித்துக் கொண்டார்கள். ஆனால் சிறிது காலத்துக்குள்ளாகவே யூத்சென்கோ மறுபடியும் வாஷிங்டனிலுள்ள ரஷ்ய தூதரகத்தில் போய்ச் சேர்ந்துகொண்டார். தானாக விரும்பி அமெரிக்காவிடம் புகலிடம் கேட்கவில்லை என்றும், அமெரிக்கர்கள் போதை மருந்து கொடுத்து தன்னைக் கடத்திச்சென்று விட்டதாகவும் வாஷிங்டன் நகரிலேயே பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியும் கொடுத்தார்.

தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலமாக அமெரிக்கர்கள் வெளியிட்ட அனைத்தும் பொய்யானவை என்றும் தன்னைப் பலவந்தப்படுத்தி வாங்கப்பட்டவை அவை என்றும் சொன்னார்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# நல்ல மனம்!




அகதிகளாக, முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளுக்குள் நுழைந்திருக்கும் மக்கள் குறித்து அந்தந்த நாடுகள் பின்பற்றி வருகின்ற கொள்கையினைப் பிரபல நடிகை ஏஞ்சலினா ஜொலி கூறியுள்ளார்.

ஹொலிவுட் நடிகைக்கு ஏன் இந்த வேலை என்று கேட்கிறீர்களா?

காரணம் இருக்கிறது.

இவர் ஐ. நா. சபையில் நட்புரீதியிலான தலைவர் பதவியை வகிப்பவர். எனவேதான், இவ்வாறு அகதிகளாக நுழைபவர்களை அரசியல்வாதிகள் தங்களது அரசியல் இலாபங்களுக்காகப் பயன்படுத்துகின்றனர் என்றும் இம்மக்களது நலன் சார்ந்து எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை என்றும் இவர் கூறிவருகிறார்.

நல்ல மனம்!



# 70 வயது!

**ஒரு** காலத்தில், 'ஜேம்ஸ் பொண்ட்' படங்களின் மூலம் இரசிகர்களின் உள்ளங்களைப் பறிமுதல் செய்தவர் தான் உர்சுலா என்ட்ரஸ்.

60 களில், கவர்ச்சிப் புயலாக ஒரு கலக்குக் கலக்கியவர். இவரது 70 ஆவது பிறந்ததினம் அண்மையில் பிரித்தானியாவில் கொண்டாடப்பட்டது.

உர்சுலா 1962 ஆம் வருடம் முதன் முதலில் ஜேம்ஸ் பொண்ட் திரைப்படத்தில் நடித்தார். படத்தின் பெயர் - 'டொக்டர் நோ' என்பதாகும்.

கோல்ட் பின்கர், தண்டர் போல் போன்ற திரைப்படங்களிலும் இவரது நடிப்பு பலராலும் பேசப்பட்டது.

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த இவர், அண்மையில் தனது எழுபதாவது பிறந்த நாளைக் கொண்டாடிய போது அவருக்கு நெருக்கமான சுமார் 100 பேர் அவ்வைபவத்தில் கலந்து கொண்டு இவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

வாழ்க!

# ஆஹா!



**தனது** உடம்பிற்கு ஆடை அந்தளவுக்கு அவசியமற்றது என எண்ணும் பிரபல பொலிவூட் நடிகை மல்லிகா ஷெராவத் 'ப்யார்க்கி சைட் இபெக்ட்ஸ்' எனும் திரைப்படத்தில் ஆடை விடயத்தில் மிகவும் சிக்கனத்தைக் கடைப்பிடித்துள்ளார்.

இதனால் இவரது இரசிகப் பெருமக்கள் மிகவும் சூடாக இருக்கிறார்களாம்.

ஆடையை விட தனது இரசிகர்களை மகிழ்விப்பதே தனது முக்கிய பணியாகும் என மல்லிகா தெரிவித்துள்ளார்.

எது எப்படியோ....
தயாரிப்பாளருக்கு இதனால் மட்டில்லாத மகிழ்ச்சி...
ஆடை குறைய.. குறைய...
அவரது கல்லாப்பெட்டி அல்லோ நிறையப் போகிறது...

# தாராளம்!



தொடர்ந்தும் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திவரும் கோடீஸ்வர நடிகையான பெலிஸ் ஹில்டன், குருட்டுப் பொலிஸாரினால் தன்னை ஒரு போதும் கைதுசெய்துவிட முடியாது எனக் கூறியிருந்தார்.

ஆனால், அந்தக் குருட்டுப் பொலிஸார், அண்மையில் இவரை குடிபோதையில் வாகனத்துடன் பிடித்து விட்டனர்.

நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட பெலிஸ் ஹில்டனுக்கு ஆயிரம் அமெரிக்க டொலர்கள் தண்டனை விதிக்கப்பட்டது. இதனால் பெரிதும் கோபமடைந்த ஹில்டன், இது தனக்குச் செய்யும் பெரிய அவமரியாதையாகும் எனக் கூறியுள்ளார்.

அதாவது, ஆயிரம் டொலர்களுக்குக் கூடுதலாகத் தண்டனை விதிக்கப்பட்டிருக்க வேண்டுமாம்!

ஆஹா.... என்ன தாராளமான மனசு!

# அற்புதனின் நினைவுகளில்...!

**மரணம்** கூட சில மனிதர்களிடம் தோற்றுத்தான் போகின்றது! மரணத்தின் பின்பும் அவர்கள் வாழ்ந்துகொண்டிருப்பதால்.

தோழர் ரமேஸ் அவர்களும் அப்படித்தான் கருத்துக்களாகத் தொடக்கி வைக்கப்பட்டு இன்னும் நீண்டு செல்லும் செயல் வடிவங்களாக வளர்த்தெடுத்த தோழர்களின் குரலாக இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே உணர்கின்றோம்!.

அவரது கருத்துக்களும், சிந்தனைகளும், செயல் வடிவங்களும் இன்னமும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவரது இடத்தை



இட்டு நிரப்ப முடியாத தவிப்பில், எமக்கு நாமே கூறும் ஆறுதல் மொழி மட்டும்தான். சில மனிதர்கள் கொல்லப்படும் போது அல்லது மரணிக்கும் போது எதையும் இந்த மண்ணுக்காக விட்டுச் செல்வதில்லை! ஆனால் தோழர் ரமேஸ் அவர்கள் இந்த மண்ணுக்காகவும், தான் நேசித்த மக்களுக்காகவும், எமது கட்சிக்காகவும் விட்டுச்சென்றவைகள் ஏராளம்! அவரது இடத்தை இட்டு நிரப்புவதற்கு, அவரது துறைசார்ந்த விடயங்களில் ஈழப் போராட்டத்தில் ஈடுபட்டு இன்றிருக்கும் எந்தவொரு ஜனநாயக சக்தியும் இல்லை என்பதுதான் உண்மை! இது மிகையான கருத்து அல்ல! இள வயது மாணவப் பருவத்தில் இருந்தே ஈழப் போராட்டத்தின் மீது பற்றுதல் கொண்டு தன்னை அதற்காகவே அர்ப்பணித்திருந்தவர்.

தோழர் ரமேஸ் அவர்கள் ஈழப் போராட்டத்தின் மீது பற்றுதல் கொண்டது வெறுமனே தேசிய விடுதலைக்காக மட்டுமல்ல, ஒரு தேசத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை குறித்த எண்ணக் கருக்களே அவரிடம் இருந்தன. ஆரம்பங்களில் ஈழ மாணவர் பொது மன்றத்தின் முதன்மைச் சக்திகளில் ஒருவராக இருந்த தோழர் ரமேஸ் அவர்கள், அதன் பின் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் முழுமையான செயற்பாடுகளில் தன்னையும் இணைத்துக் கொண்டவர். அந்த அமைப்பின் யாழ். பிராந்தியக் கமிட்டியின் உறுப்பினராக இருந்த தோழர் ரமேஸ் அவர்கள் அக்கட்சியின் வளர்ச்சிக்காகவும் தன்னை வருத்தி உழைத்தவர். கட்சியின் பிரசார ஏடுகளான 'ஈழ முழக்கம்', 'செந்தணல்', 'ஈழச்செய்தி' என கட்சியின் வெளியீடுகள் அனைத்திற்கும் பொறுப்பாக இருந்து திறம்படச் செயலாற்றியிருந்தவர்.

எழுச்சியான கருத்துக்களாலும், அதிகம் அலட்டிக்கொள்ளாத அழகு தமிழாலும், தனக்கேயுரிய நடையிலான பேச்சினாலும் மக்களை மட்டுமல்ல, சக தோழர்களையும் சகோதர இயக்கத்தவர்களையும் கவர்ந்து கொண்டவர் தோழர் ரமேஸ் அவர்கள்! ஈழப் போராட்டத்தில் பெண்களை இணைப்பது குறித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு அதிக அக்கறை கொண்டு செயற்பட்டபோது, அதன் வெகுஜனப் பிரிவுகளில் ஒன்றான ஈழப் பெண்கள் முன்னணியின் பிரசார வெளியீடான 'செந்தணல்' அப்போது பல எழுச்சிமிகு கவிதைகளையும் தாங்கி வெளிவந்திருந்தது! அதில் ஒன்று :

'அடுப்போடு வாழ்ந்த நெருப்புக்கள் நாங்கள்;
எரிப்பதற்காக எழுந்து வருகின்றோம்!'

தோழர் ரமேஸ் அவர்களால் எழுதப்பட்ட இது போன்ற கவிதை வரிகள் ஈழப் பெண்கள் மத்தியில் எழுச்சியைத் தோற்றுவித்திருந்தன! ஈழப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்தி முதன் முதலில் பெண் போராளியாகக் களத்தில் மரணித்திருந்த தோழர் ஷோபா அவர்கள் இந்தக் கவிதை வரிகளையே அடிக்கடி உச்சரிப்பதுண்டு! தோழர் ஷோபா அவர்கள் அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் இராணுவப் பிரிவான 'மக்கள் விடுதலைப் படையின்' பிரதம தளபதியாக இருந்த தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் சகோதரி ஆவார். தனது எழுத்தாற்றலை பெண் தோழர்களுக்கும் கற்றுக்கொடுத்து அவர்களைப் படைப்பாளிகளாகவும், பெண் விடுதலை குறித்த சமூகப் பார்வை உள்ளவர்களாகவும் மாற்றி அமைத்ததில் தோழர் ரமேஸ் அவர்களின் பங்களிப்பும் பிரதானமாக இருந்தது. குறிப்பாக, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரசார வெளியீடுகளில் மார்க்சிஸ சித்தாந்த கருத்துக்களையும், சமூகம் குறித்த முற்போக்குச் சிந்தனைகளையும், தத்துவார்த்தக் கருத்துக்களையும், தனக்கே உரிய புதிய வடிவத்தில் வெளியிட்டிருந்தவர். தனது கருத்துக்களால் அன்று அவர் அங்கம் வகித்திருந்த அந்த அமைப்பிற்கு ஒரு புரட்சிகர முற்போக்குத் தோற்றத்தை வெளிப்படுத்துவதில் முதன்மை வகித்திருந்தவர். இவைகள் கட்சியின் பிரதான பொறுப்புக்களிலும் செயற்பாடுகளிலும் பங்கெடுக்கும் முன்னணி சக்தியாக அவரை உயர்த்தி வைத்தது! அதனால் தோழர் பத்மநாபா, தோழர் டக்ளஸ் தேவானந்தா போன்ற உயரிய இலட்சியங்களைக் கொண்ட உன்னத தலைவர்களின் இதயங்களில் தோழர் ரமேஸ் அவர்களுக்கு ஒரு சிம்மாசனம் கிடைத்திருந்தது என்று கூறிவிடலாம்.

தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்களில் தோழர்களுக்கு மாற்றுப்பெயர் சூட்டுவதில் இருந்து, தோழர்களுக்கான அரசியல் வகுப்புக்களை எடுப்பதிலும் முன்னின்று செயலாற்றியவர். அது மட்டுமல்ல, தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைப் பிரதம தளபதியாகக் கொண்டிருந்த மக்கள் விடுதலைப் படையின் அரசியல் கமிசார் ஆகவும் தோழர் ரமேஸ் அவர்களே நியமிக்கப்பட்டிருந்தார். இதை தோழர்கள் ஒவ்வொருவரும் இன்றும் நினைவில் நிறுத்தி எண்ணிப் பார்க்கின்றார்கள். இதனால் எந்தத் தோழர்களாலும் மறக்கப்பட முடியாதவர் தோழர் ரமேஸ் அவர்கள். பல உயிர் ஆபத்துக்களில் இருந்து அன்றே அவர் தப்பிப் பிழைத்தவர். யாழ். குருநகர் மீனவர்கள், கடலில் வைத்து கடற்படையினரால் அன்றைய யுத்த சூழலில்

> **ஏழாவது ஆண்டு நினைவில் ரமேஸ் தோழருக்கு மறுபடியும் மரியாதை செலுத்துகின்றோம்! கொலையுண்ட எம் தோழர்களின் குருதிச் சுவடுகளை உங்கள் பாசிஸ இராச்சியத்தின் மீது சாமரம் வீசும் அழுக்குத் துணிகளால்அழியுங்கள்! அழியுங்கள்!! அழியுங்கள்!!! அழித்தொழிக்க வந்தவர்களே அழியுங்கள்! மனிதம் வென்றதாய் இங்கொரு வரலாறு குருதியில் உயிர்க்கும்!**
>
> ***ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - ஈ.பி.டி.பி***

தாக்கப்படும் செய்தி அறிந்து, மீனவ மக்களைக் காப்பதற்காக படகேறி களம் இறங்கியிருந்தார் மக்கள் விடுதலைப் படையின் பிரதம தளபதி தோழர் டக்களஸ் தேவானந்தா அவர்கள்! கொல்லப்பட்ட குருநகர் மீனவர்களின் சடலங்களைக் கரைக்குக் கொண்டுவந்து, கதறியழுது கொண்டிருந்த அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்திருந்தார் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள். அந்தக் காட்சிகளை ஒளிப்பதிவு செய்து சர்வதேச சமூகத்திடம் காண்பிக்கும் நோக்கில் யாழ். கச்சேரி வீதி வழியாகச் சென்றிருந்த தோழர் ரமேஸ் அவர்களும், தோழர் ஈழமணி அவர்களும் பாசிஸப் புலிகளால் சுடப்பட்டு, மயிரிழையில் உயிர் தப்பினார்கள்.

கட்சிக்குள் தோழர் பத்மநாபா அவர்களுக்கும், தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் இடையில் சில தீய சக்திகள் திட்டமிட்டு முரண்பாடுகளைத் தோற்றுவித்தபோது, அதில் துணிச்சலோடு நின்று நியாயங்களை உரைத்ததற்காகக் கடத்தப்பட்டு உயிராபத்திலிருந்து தப்பிப் பிழைத்திருந்தவர் தோழர் ரமேஸ் அவர்கள்! இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முன்னதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு முரண்பட்டு இரு அணிகளாகப் பிரிந்து செயற்பட்டுக் கொண்டிருந்தது. ஒன்று நாபா அணி; இன்னொன்று தேவா அணி! தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை தலைமையாகக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியில் இணைந்து செயலாற்றிய தோழர் ரமேஸ், அதன்பின் செயலாளர் நாயகம் அவர்களோடு தானும் இணைந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியான ஈ.பி.டி.பி.யினை ஸ்தாபிப்பதில் முன்னின்று உழைத்தார்.

1987இல் உருவாக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு 1988 இன் இறுதிப் பகுதியில் கொழும்பில் கால் பதித்திருந்த எமது தோழர்கள் பல இன்னல்கள், இடுக்கண்களைச் சந்திந்திருந்தார்கள். ஏற்கனவே களம் இறங்கிய தோழர் பிரேம், தோழர் இப்ராகீம், தோழர் ஜோர்ச், தோழர் சிறீதர், தோழர் ராகவன் போன்றோர் பாசிஸப் புலிகளால் கொல்லப்பட்ட நிலையில், கொழும்பில் கால் பதித்திருந்த தோழர்கள் பல தரப்புக்களாலும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருந்தனர். அச்சுறுத்தலை எதிர் கொண்ட தோழர்களுக்கு செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களோடு இணைந்து துணிச்சலைக் கொடுத்தார். நம்பிக்கைகளை ஊட்டினார். செயலாளர் நாயகம் அவர்களின் வழி நடத்தலில் எதிர்காலம் குறித்த நம்பிக்கை தெரிவித்து, தோழர் ரமேஸ் தமிழ் நாட்டிலிருந்து பிரசுரங்களை அச்சடித்து அனுப்பிக் கொண்டிருந்தார். '**மக்களின் உதடுகள் மறுபடி திறக்க**' என அவர் எழுதிய மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் கருத்துக்களும், '**காலம் எமக்காக காத்திருக்கின்றது! நம்பிக்கையுடன் காத்திருப்போம் தோழர்களே!**' '**நாம் பலமடைவது நிஜம்!**' என தோழர்களுக்கு அவர் எழுதிய கடிதங்களும் எமக்குப் புத்துயிர் ஊட்டியிருந்தன. அவர் அன்று எழுதிய தீர்க்கதரிசனம் நிறைந்த அந்த வரிகள் இன்று நிஜமாகியிருக்கின்றன. 90 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களோடும் சக தோழர்களோடும் கொழும்பில் கால் பதித்திருந்த தோழர் ரமேஸ் அவர்கள், ஈ.பி.டி.பி. யை மாபெரும் மக்கள் கட்சியாக மக்கள் மத்தியில் வேர் விட்டு, கிளை பரப்ப தனது முதன்மையான பங்களிப்பைச் செலுத்தியிருந்தார். 'தினகரன்' பத்திரிகையில் வாரந்தோறும் '**புள்ளட் பொக்ஸ்**' என்ற பத்தி எழுத்தின் மூலம் 'சூரிய தீபன்' என்ற பெயரில் பாசிஸப் புலிகளை அம்பலப்படுத்தி வந்தார்.

இலங்கை வானொலியில் '**மக்கள் குரல்**' என்ற வானொலிச் சேவையை நடத்தி புலிகளின் மக்கள் விரோத நடவடிக்கைகளை தீர்க்கதரிசனமாக உரைத்தார். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரசார செயலாளராகவும் அதன் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்து செயலாற்றியவர்.

கட்சியின் பிரசார வெளியீடுகள், பிரசுரங்கள், தகவல்கள் அனைத்திற்கும் தோழர் ரமேஸ் அவர்களே கொல்லப்படும் வரைக்கும் பொறுப்பாக இருந்திருக்கின்றார். கட்சி சாராத நடு நிலைப் பத்திரிகை குறித்த கருத்துக்கள் வெறும் கற்பனாவாதங்களாக மட்டும் வெளிவந்து கொண்டிருந்த சூழலில், நடைமுறையில் அதை நிரூபித்தவர் தோழர் ரமேஸ் அவர்கள்!

செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் அனுசரணையோடு '**தினமுரசு**' பத்திரிகையினை வாராந்தம் வெளியிட்டு இலங்கை தமிழ் பத்திரிகைத்துறை வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியிருந்தார். இராணுவ ஆய்வாளர்கள் என்று தம்மைத் தாமே பலரும் கூறிக்கொள்ளும் ஒரு சூழலில், தலை சிறந்த அரசியல், இராணுவ ஆய்வாளராக தன்னை வெளிப்படுத்திக் கொண்டவர் தோழர் ரமேஸ் அவர்கள். அது மட்டுமல்ல, அவர் ஒரு ஜனரஞ்சக எழுத்தாளனாகவும் அனைவருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்திருந்தார்.


தினமுரசின் வளர்ச்சி கண்டு பத்திரிகை உலக ஜாம்பவான்களே மூக்கில் விரலை வைத்துத் திகைத்து நின்றனர். தோழர் ரமேஸ் அவர்களின் தெளிந்த அரசியல் பார்வையும், எழுத்தாற்றலும் கண்டு தமிழ் உலகமே வியந்து நின்ற போது அவருக்கு அரசியல் வகுப்பெடுத்ததும், அரசியல் கற்றுக்கொடுத்ததும் தாமே என்று பலரும் உரிமை கொண்டாடினார்கள்! உண்மையில் அவர் அரசியல் கற்றுக் கொண்டது யாரிடமும் இருந்து அல்ல! மக்களிடமிருந்துதான் அதிகம் எதையும் கற்றுக்கொண்டார். சோவியத் நாவல்களான 'உண்மை மனிதன் கதை', 'உலகை குலுக்கிய பத்து நாட்கள்', மாக்சிம் கார்க்கி எழுதிய 'தாய்', மற்றும் ராகுல் சாங்கிருத்தியாயன் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கை வரை', யூலிஸ் பூசிக் எழுதிய 'தூக்கு மேடைக் குறிப்பு', மாவோவின் தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவப் படைப்புக்கள் என பாகுபடின்றி அனைத்தையும் கற்றுக்கொண்டார் தோழர் ரமேஸ் அவர்கள்! எதைப் படித்தாலும் மக்களிடமிருந்து கற்பதே பிரதானம் என்பது அவரது கருத்தாக இருந்தது. கலர் பத்திரிகை என்று தூற்றினார்கள்! இறுதியில் தூற்றியவர்கள் தாமும் கலர் பத்திரிகை வெளியிட்டு தோற்றுப்போனார்கள்! அதே பாணியில் இன்றும் சிலர் தொடர்கின்றார்கள். விமர்சனங்களைக் கண்டு சகிக்க முடியாதவர்கள், 'அற்புதன்தான் ரமேஸ்! ரமேஸ்தான் அற்புதன்!!' என்று புலிகளிடம் காட்டிக் கொடுத்தார்கள்! இறுதியில் காட்டிக் கொடுத்தவர்கள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக சிதைந்துபோய் ஓடு காலிகளாகி விட்டனர். 'தினமுரசு' பத்திரிகையின் வளர்ச்சி கண்டு சகிக்க முடியாத புலிகள், சுவிஸ் நாட்டிலும் பிரான்ஸ் நாட்டிலும் அதைத் தடை செய்தார்கள்! ஆனாலும் தடைகளையும் மீறி பத்திரிகை வெள்ளம் போல் மக்கள் மத்தியில் பாய்ந்தது.

முயற்சி தோல்வியில் முடிய 'தினமுரசு' ஆசிரியர்களில் ஒருவரான மூத்த பத்திரிகையாளரான தோழர் இரா.பத்மநாதன் அவர்களை விசாரணைக்கு வருமாறு அவரது குடும்பத்தவர்களிடம் சொல்லி அனுப்பினார்கள்.

தோழர் இரா. பத்மநாதன் அவர்கள் மட்டக்களப்பில் இருந்த தனது குடும்பத்தவர்களை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றியிருந்தார். 'தினமுரசு' பத்திரிகையை வெளிவராது நிறுத்துவதற்கு புலிகள் பல வழிகளிலும் முயன்று தோற்றுப்போன நிலையில், தோழர் ரமேஸ் அவர்கள் மீது குறி வைத்து வெறி கொண்டு அலைந்தனர். இறுதியில் தோழர் ரமேஸ் அவர்களை பாசிஸப் புலிகள் சுட்டுச் சரித்தனர். புலிகள் சுட்டுச்சரித்தது ஒரு தோழரை அல்ல! மக்களுக்காக இருந்த மாபெரும் சொத்தையே அழித்து நாசமாக்கியிருந்தார்கள்.

ஆனாலும் தினமுரசை புலிகளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. விமர்சனத்தில் கொஞ்சம் காரசாரமான போக்கு! இதுவே அவர் குறித்த விமர்சனங்களாக சக கட்சிகளால் முன்வைக்கப்பட்டது! ஆனாலும் இன்று வரை துப்பாக்கிகளுக்கு துதி பாடும் ஊடகங்களுக்கு மத்தியில் உறுதியோடு உண்மைகளை உரைக்கும் ஒரு பத்திரிகையாக 'தினமுரசு' வெளிவந்து கொண்டிருப்பது அவரது ஆற்றல் மிகு கரங்களின் ஆரம்ப அடியெடுப்பு என்பதை உணர்ந்தேயாகவேண்டும்! பலமாக இருக்கும்போது அராஜகம் புரியவும், பலவீனமாக இருக்கும் போது ஜனநாயகம் பேசவும் என இரு முகம் காட்டி நிறம் மாறும் சந்தர்ப்பவாத அரசியல் குறித்து தோழர் ரமேஸ் அவர்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

எதையும் சாதிக்காமல், எடுத்த பயணத்தின் இலக்கு நோக்கி நகராமல், மக்களின்



தோழர் ரமேஸ்

அவலங்களுக்கு தீர்வு காண முயலாமல் இருப்பை மட்டும் தெரிவிப்பதற்காக அறிக்கை விட்டு காலம் தள்ளும் அரசியல் குறித்து விசனம் கொண்டு கருத்துத் தெரிவித்திருந்தார். புலிகளின் மக்கள் விரோத நடவடிக்கைகள் குறித்து பல்வேறு வடிவங்களிலும் அரசியல் சூழலுக்கு ஏற்றவாறும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் புதிய யுக்தியில் தனது பேனா முனைப் போராட்டத்தை நிகழ்த்தியிருந்தார். எழுச்சிமிகு போராளியாக, முற்போக்கு ஜனநாயக சக்தியாக, பத்திரிகை ஆசிரியராக, சிறந்த அரசியல் போதனையாளனாக, இலக்கிய நயம் மிக்க எழுத்தாளனாக, கவிஞனாக, அரசியல் இராணுவ ஆய்வாளனாக, வானொலிக் கலைஞனாக, பாராளுமன்ற உறுப்பினராக எனப் பன்மைத்துவ அடையாளங்களைக் கொண்டிருந்தவர் தோழர் ரமேஸ் அவர்கள்!

தோழர் ரமேஸ் அவர்கள் பாசிஸப் புலிகளால் அழிக்கப்பட்டு விட்டாலும், அவரது பேனா முனை இன்னமும் எம்மிடம் வீரியமாக இருக்கின்றது!


தோழர் ரமேஸ் அவர்களின் வரலாறு இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முந்திய ஈ.பி.ஆர்.எல்.எவ்.இன் வரலாறோடு பின்னிப் பிணைந்தது! ஈ.பி.டி.பி.யின் வரலாற்றோடு பின்னிப்பிணைந்தது. செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் உரத்த சிந்தனைகளுக்கு தன் பேனா முனையினால் ஆளுமை மிக்க செயற்திறனால் - உரம் சேர்த்தவர் தோழர் ரமேஸ் அவர்கள்!



> அணிகளுக்கொ ரெல்லையில்லாய், எங்கள் முத்து
> மாரியம்மா, எங்கள் முத்து மாரி !
> அடைக்கலமிங் குனைப்புகுந்தோம், - எங்கள் முத்து
> மாரியம்மா, எங்கள் முத்து மாரி !
>
> **- சுப்பிரமணிய பாரதியார்**



# ஹேய்... கொஞ்சம் நில்லு!



**அந்த** அழகிய ஏரியில் முதலை ஒன்று வெகு நாட்களாக வசித்து வந்தது. தனிமையில் வசித்து வந்த அந்த முதலைக்கு ஒரு நண்பன் வேண்டுமென ஆசைப்பட்டது. ஒரு நாள் கரையில் படுத்திருந்தது. அந்தப் பக்கமாக ஆமை ஒன்று வந்தது. முதலையைப் பார்த்த ஆமையானது அந்த இடத்தை விட்டு மெள்ள ஊர்ந்து செல்லத் தொடங்கியது.

"ஆமையே! நில்! எங்கும் செல்லாதே! நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். ஒரு நிமிடம் தைரியமாக நின்றபடி சொல்வதைக் கேள்!" என்றது.

"முதலை அன்போடு நம்மை அழைக்கிறது. இதனை நெருங்கினால் ஆபத்தில்லை" என்ற முடிவோடு முதலையின் அருகே நெருங்கி வந்தது ஆமை.

ஆமை தன்னை நெருங்கி வருவதைக் கண்டதும் முதலை மகிழ்ச்சியடைந்தது.

"முதலையாரே வணக்கம்! உமது பேச்சு என் மனதைக் கவர்ந்தது. அதோடு உமது அழைப்பும் என்னை மனம் கவர வைத்தது. அதனால்தான் தைரியமாக உங்கள் அருகில் வருகிறேன்" என்றது ஆமை.

"ஆமையே! உன்னுடைய பேச்சு மிகவும் மரியாதையாக உள்ளது. இந்த ஏரிக்கரையில் நான் மட்டுமே தனித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இதுவரையிலும் நண்பர்கள் என்று சொல்லிக் கொள்ள எனக்கு யாருமில்லை! அதனால் தான் உன்னைப் பார்த்ததும் உன்னை என் நண்பனாக ஏற்றுக் கொள்ளலாம் என்று நினைத்தேன். என்னுடைய விருப்பத்தையும் உன்னிடம் தெரிவித்து விட்டேன்" என்றது முதலை.

"முதலையாரே! உமது பெருந்தன்மையினை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. நான் உருவத்தில் மிகவும் சிறியவன். நீரோ உருவத்தில் பெரிசு. உமக்கும், எனக்கும் பொருத்தம் இல்லாதபோதும், எனது நட்பைப் பெற வேண்டுமென்று நீர் நினைக்கின்றீரே! இதுதான் எனக்கு வியப்பையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகின்றது, என்றது ஆமை.

"ஆமையே! நட்புக்கு உருவம் பெரிதல்ல. மனசுதான் வேணும். உண்மையான அன்பிருந்தால் போதும்" என்றது முதலை.

"முதலையாரே! இனி நான் சொல்ல என்ன இருக்கு? லெட் அஸ் பீ குட் ப்ரெண்ட்ஸ்" என்றது ஆமை.

(நல்ல நண்பர்களாக இருப்போம்)

அன்று முதல் ஆமையும், முதலையும் மிகவும் மகிழ்ச்சியோடு அந்த ஏரிக்கரையைச் சுற்றி வலம் வந்தன.

இப்படியே மிகவும் ஜாலியாக

**பாப்பா முரசு சிறுகதை**

இருந்தன.

ஒரு நாள் முதலையின் வருகைக்காக ஏரிக்கரையில் காத்துக் கொண்டிருந்தது ஆமை.

அந்த நேரத்தில் வேடன் ஒருவன் ஏரியில் மீன்பிடிக்க வேண்டி கையில் தூண்டிலோடு வந்தான்.

ஆமையைப் பார்த்ததும், 'இன்று நமக்கு அதிர்ஷ்டமான நாள். நாம் மீன் பிடிக்க வந்த இடத்தில் இந்த ஆமை நம் கையில் சிக்கிவிட்டது' என்று மனதுக்குள் எண்ணியவளாய், கீழே குனிந்து ஆமையை கையில் எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு நடக்கத் தொடங்கினான். அந்த நேரத்தில் முதலை ஏரியை விட்டு கரைக்கு வந்தது.

கையில் ஆமையைப் பிடித்துக் கொண்டு ஏரிக்கரை வழியாக நடந்து செல்கின்ற வேடனைப் பார்த்தது.

'ஐயோ! நம் உயிர் நண்பனுக்கு ஆபத்து. நாம் வேடனைப் பின் தொடர்ந்து சென்று ஆமையைக் காப்பாற்ற வேண்டும்?' என்று மனதுக்குள் முடிவெடுத்துக் கொண்ட முதலை அந்த ஏரிக்கரையை விட்டு வேகமாக வேடனைப் பின்தொடரத் தொடங்கியது. வேடன் வேகமாகச் சென்று கொண்டிருந்தான். "வேடன் நடந்து செல்லும் வேகத்திற்கு நம்மால் ஈடுகொடுத்துப் பின் தொடர முடியாது" என எண்ணிய முதலை, வேடனின் கவனத்தை தன் பக்கமாகத் திசை திருப்ப நினைத்தது.

உடனே அது தன் வாலைத் தூக்கியபடி தரையில் டொப்...டொப்...என்று அடித்தது. அந்த சப்தத்தைக் கேட்ட வேடனோ உடனே திரும்பிப் பார்த்தான்.

முதலை தன் வாலைத் தூக்கியபடி அடித்துக் கொண்டிருப்பது அவனுக்கு வேடிக்கையாகவிருந்தது. முதலையை உற்றுக் கவனித்த வேடன், ஆமையை தரையில் விட்டு விட்டான். ஆசையாடு வேகமாக முதலையை நோக்கி வந்தான். முதலையோ வேகமாக ஏரியை நோக்கி நகர்ந்து சென்றது. நம்மைக் காப்பாற்றத்தான் முதலையார் இப்படி நடந்து கொள்கிறார் என்பதை புரிந்து கொண்டது ஆமை. உடனே அது வேகமாக ஊர்ந்து சென்று ஏரி நீருக்குள் சென்றது.

அதனைக் கவனித்த முதலையும் மகிழ்ச்சியடைந்தது. உடனே அது வேடன் தன்னைப் பிடிப்பதற்குள் ஏரி நீரினுள் மூழ்கிக் கொண்டது.

"ஆமை, முதலை இரண்டையும் இழந்து விட்டோமே" என்று வெறுப்படைந்தான் வேடன்.

**நீதி** : உயிர் நண்பர்களுக்கு ஆபத்து வந்தால் உடனே காப்பாற்றணும்.

# ஆத்திசூடி


## செய்வன திருந்தச் செய்.

**நீ செய்யக்கூடிய நல்ல காரியங்களை எவ்விதக் குறையும் ஏற்படாத வகையில் திருத்தமாகவும் சிறப்பாகவும் செய்.**

-ஔவையார்

*எஸ். நிரஞ்சலா, கண்டி.*

# வாழை மரம்!




வாழை மரமாம் வாழை மரம்
வளமே நல்கும் வாழை
மரம்
ஏழைக்கு ஏற்ற வாழை
மரம்
இன்பம் நல்கும் வாழை
மரம்!
ஏழையின் ஆப்பிள்
என்றேதான்
ஏற்றம் பெற்ற வாழை
மரம்
தோழர் தோழி
அனைவரும்
சொகுசாய் உண்ண
உதவுமே!
வள்ளலாக அமைந்தே
தான்
வளமை தருமே வாழை மரம்

நல்லோர் தீயோர் பாகுபாடு
நாளும் இல்லா வாழை மரம்!
எல்லா உறுப்பும் பயன்படும்
ஏற்றம் தந்தே மகிழ்ந்திடும்
பொல்லாப் பில்லா
சமுதாயம்
புகழை வளர்க்கும் வாழை
மரம்!
சத்தம் இன்றி சத்தினைத்
தருமே நல்ல வாழை மரம்
புத்தம் புதிய கன்றுகளை
பூரிப்பாய் அளிக்கும்
வாழைமரம்!
வாழையின் எல்லாப் பாகமும்
வஞ்ச மின்றிப் பயன்தரும்
ஏழைகள் வீட்டில் எல்லாமே
இனிதாய்க் காணும் வாழை
மரம்!

# அதிசய உலகம்

## இலைப் பூச்சி

தமிழகத்தில் கோவை, பழனி, நீலகிரி போன்ற இடங்களில் இலைப் பூச்சி என்றொரு பூச்சிகள் இனத்தைக் காணலாம். இதன் உருவத்திற்கும், பச்சை இலைக்கும் உள்ளான வேறுபாட்டைக் காண்பது கடினம். நாம் இந்தப் பூச்சியின் அருகில் நின்று பார்த்தால் கூட எது இலை, எது இலைப் பூச்சி என்பதைக் கண்டுபிடிக்க திணறித்தான் போவோம்.




நிறம் மட்டும் இலையைப் போன்றது மட்டுமன்றி, இவற்றின் அங்க அமைப்பும் இலையின் அமைப்பை முற்றிலும் ஒத்திருக்கும். எனவேதான் இது இலையா, இலைப் பூச்சியா என்ற சந்தேகம் அனைவருக்கும் எழும்.

இப்படி இலையின் நிறமும், பூச்சியின் நிறமும் ஒரே மாதிரியாகக் காட்சியளிப்பதால் இந்த இலைப் பூச்சிகளுக்கு எதிரிகளால் எந்தவித ஆபத்தும் ஏற்படாது.

## மலர் பல்லி

ஆசியா கண்டத்தின் சில பாலைவனங்களில் மலர் நிறம் கொண்ட ஒரு வகைப் பல்லியினம் வாழ்கிறது. அதனுடைய வாயின் இரண்டு பக்கங்களிலும் சிவந்த இரண்டு ரேகைகள் உண்டு. அவைகள் தூரத்துப் பார்வைக்கு மணம் மிகுந்த மலர்களைப் போல் காட்சியளிக்கும்.



இதனால் மலர் என்று நினைத்து, அதில் உள்ள தேனைக் குடிக்க ஆர்வத்துடன் அலைந்து திரியும் பூச்சிகள், அந்தப் போலி மலர்களைக் கண்டு மயங்கி நெருங்கி வர, மிகவும் தந்திரசாலியான மலர் பல்லி பூச்சிகளைப் பிடித்து களிப்புடன் தின்றுவிடும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 14.11.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 668**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 666

**பரிசுக்குரியவர்:**
**சி. வர்மன், இல.32, நெல்சன் வீதி, கல்கிசை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| க. றினோஷா, பெரிய கடை, மன்னார். | அ. அனோஜன், பன்சல வீதி, இராகலை. |
| க. துசாணி, குருமண் காடு, வவுனியா. | பெ. ஆன்சலா, இல. 22, குறுக்கு வீதி, மட்டக்களப்பு. |
| ர. மியூஸிகா, பேராதெனிய வீதி கண்டி. | இந்துஜன், காலி வீதி, கொழும்பு - 06. |
| எஸ். அனுஷா, கோணவல ரோட், திகன, ரஜவெல்ல. | மா. கோகிலா, மல்வத்த வீதி, ஹெிவளை. |
| க. வாகிஸா, 35 ஆம் குறுக்கு வீதி, புத்தளம். | கு. வில்சன், பிரதான வீதி, மன்னார். |

# சில விடுகதைகள்


1. காற்றை உண்டவன் கண்டபடி குதிப்பான் - அவன் யார்?
2. வாலுள்ளவன் நடத்தும் வான விளையாட்டு - அவன் யார்?
3. விளக்கைச் சுமந்தபடி விடிய விடிய பயணிப்பான் - அவன் யார்?
4. கண்ணுக்கு அழகு பார்வைக்குத் தெளிவு - அவன் யார்?
5. ஆழத்தில் கிடப்பான் அழகு செய்தால் ஜொலிப்பான் - அவன் யார்?
6. வளர்வதும் தேய்வதும் இவனுக்கு வாடிக்கை - அவன் யார்?
7. தொட்டால் ஜில்லிடுவான் வெயிலில் கண்ணீர் விடுவான் - அவன் யார்?
8. சிறு தூசிக்கும் தோட்டா இல்லாமல் வெடிப்பான் - அவன் யார்?
9. மணி ஒலித்தால் நகரும் மலைப்பாம்பு - அது என்ன?
10. சொன்னதை திருப்பிச் சொல்வான் சிறு இடைவெளியில் - அது என்ன?


**விடைகள்**
1. பந்து
2. காற்றாடி
3. மின்மினிப்பூச்சி
4. கண் கண்ணாடி
5. முத்து
6. நிலா
7. பனிக்கட்டி
8. மூக்கு - தும்மல்
9. ரயில்
10. எதிரொலி.




# அதிவேக இயந்திர மனிதன்!

மணித்தியாலத்திற்கு 3.7 மைல்கள் தூரம் ஓடக்கூடிய இரு சக்கர இயந்திர மனிதனின் பெயர் 'எமியூ' [வலது புறம்] ஜப்பானைச் சேர்ந்த ஹிற்றாச்சி நிறுவனம் தயாரித்து 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் அறிமுகப்படுத்தியது. விரைவாக ஓடவும் தேவை ஏற்படும் போது நிறுத்தவும் தேவையான உணர்கருவிகள் இதற்குண்டு. மனிதர்கள், வாகனம் ஆகியவற்றின் நடமாட்டத்தை அவதானித்து ஓடக்கூடிய திறன் இதற்குண்டு. 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பானின் ஹொண்டா நிறுவனம் மிக வேகமாக ஓடக்கூடிய 'அஷிமோ' எனும் பெயர் கொண்ட இயந்திர மனிதனை உருவாக்கியது. இதுவும் அதேயளவு வேகம் கொண்டது. இதன் புவியீர்ப்பு மையத்தை மாற்றக் கூடிய வகையிலும் வட்டமாக ஓடக்கூடிய வகையிலும் இது அமைக்கப்பட்டுள்ளது.







ஜுராசிக் பார்க்கில் வரும் டைனோஸரைப் போன்று ஊர்ந்து செல்லக் கூடிய இந்த ரோபோ 2 1/4 அடி உயரமானது. தடைகளை விலத்திக் கொண்டு விரைவாக ஓடக்கூடிய உணர்கருவிகள் இதற்குண்டு. ஆபத்து ஏற்படும் போது, திருப்பித் தாக்கக் கூடிய சக்தியும் உண்டு.

# ரோபோ இராச்சியம்

மனிதர்களைப் போல் இயங்கக்கூடிய "ரோபோ" என்றழைக்கப்படும் இயந்திர மனிதர்கள் செய்யும் அற்புதங்கள் அநேகம். அவற்றில் சில பற்றிய விபரங்களை இங்கே தருகிறோம்.




சிறு பிள்ளை ஒன்றின் அறைக்குள் பிள்ளையோடு சேர்ந்து விளையாடக்கூடிய, இயந்திர மனிதப் பொம்மைகளைக் கற்பனை செய்து பாருங்கள். S.N.D என்றழைக்கப்படும் இப் பொம்மைகள் அணி அசையவும், நடக்கவும், பேசவும் கூடியவை.



"பபரோஸ்" என்றழைக்கப்படும் பிள்ளைகளைப் பராமரிக்கும் இயந்திர மனிதனை [ஆயா] நெக்ஸ் எனப்படும் ஜப்பானிய நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த இயந்திர மனிதனுக்குச் சுற்றுச்சூழலையும், மனிதர்கள் மிருகங்களையும் அவதானிக்கக்கூடிய விசேட கமரா கண்களும், 8 மைக்ரோபோன் காதுகளும் பொருத்தப்பட்டுள்ளன. செல்லிடத் தொலைபேசிகளையும் பயன்படுத்தக்கூடிய திறமை இதற்குண்டு. 9 உணர்கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இயந்திர மனிதனைத் தொடும் போது அதனை உணர்ந்து, அதற்கேற்றவாறு செயற்படக்கூடிய திறனும் 3000 வார்த்தைகளைப் பேசக்கூடிய ஆற்றலும் இதற்குண்டு.

## பிள்ளைகளைப் பராமரிக்கும் முதலாவது ஆயா!





## இசையும் ரோபோவும்!

'மவுத் ஓர்கன்' போன்ற எம்பௌச்சர் என்ற பித்தளையிலான இசைக் கருவியைச் சுருதியுடன் வாசித்துச் சாதனை படைத்தது ஓர் இயந்திர மனிதன். இந்த இயந்திர மனிதனை ஜப்பானின் டொயோட்டா நிறுவனம் வடிவமைத்தது. தாளம், சுருதி தவறாமல் நேர்த்தியாக அந்தக் கருவியை இயந்திர மனிதன் இசைத்தபோது பார்வையாளர்கள் அதிசயத்தில் ஆர்ப்பரித்தனர்.




## பாலைவன ரோபோ!

அமெரிக்காவைச் சேர்ந்த 'ஸ்ரபோர்ட்' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழு ஒன்று உருவாக்கிய வோக்ஸ் வேகன் மாதிரியில் அமைந்த, மனிதனின் உதவியின்றி ஓடக்கூடிய ரோபோ கார் 'டர்பா' சவால்கிண்ணப் போட்டியில் வெற்றி பெற்றது. பாலைவனத்தில் நடைபெற்ற இப்போட்டியில் 211.1 km தூரத்தை (131.2 மைல்கள்) 6 மணித்தியாலம் 53 நிமிடங்களில் ஓடி வெற்றி பெற்றது. இதை உற்பத்தி செய்த விஞ்ஞானிகள் குழுவுக்கு 20 இலட்சம் அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்கப்பட்டன.



யோகா - பூமிகா
மறந்தேன் மெய்மறந்தேன்

## 50 பேருடன் மோதுகிறார் விஜயகாந்த்!
## 20 இலட்சம் ரூபா செலவில் 'சபரி' பட செட்!!

ஸ்ரீசரவணா கிரியேஷன்ஸ் 'கஜினி'ப் பட வெற்றிக்குப் பிறகு தயாரிக்கும் புதிய படம் சபரி. இந்தப் படத்தில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக ஜோதிர்மயி நடிக்கிறார். இந்தப் படத்துக்காக பிரமாண்ட சண்டைக்காட்சி படமாக்கப்பட்டது.

இதற்காக நுங்கம்பாக்கத்தில் ரூ.20 இலட்சம் செலவில் கார் பார்க்கிங் செட் அமைத்திருந்தனர். கார், வேன் அம்புலன்ஸ் உட்பட 150 வாகனங்கள் அதில் நிறுத்தப்பட்டு இருந்தன. இங்கு 50 வில்லன்களுடன் விஜயகாந்த் மோதும் பிரமாண்ட சண்டைக் காட்சி 7 நாட்களாகப் படமாக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சண்டைக் காட்சிக்காக விஜயகாந்த் உணவுக் கட்டுப்பாடு கடைப்பிடித்தார். மதியம் ஜூஸ் மட்டும் சாப்பிட்டார். அத்துடன் தியான பயிற்சியும் செய்து சிந்தனையை ஒருமுகப்படுத்தினார்.

## ஆட்டோ டிரைவர்கள் 'கானா' பாடல்

எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கும் புதிய படம் 'நெஞ்சிருக்கும்வரை'. இந்தப் படத்தில் சித்திரம் பேசுதடி படத்தில் அறிமுகமான நரேன் கதாநாயகனாக நடிக்கிறார். பஞ்சாப் அழகி தீபா கதாநாயகியாக நடிக்கிறார்.

இந்தப் படத்துக்காக ஏவி.எம்.ஸ்டுடியோவில் 'கானா' பாடல் படமாக்கப்பட்டது. 'ஆட்டோ தினத்தில் ஆடிப்பாடுவது' போன்று இக்காட்சி எடுக்கப்பட்டது. இதற்காக ஏராளமான ஆட்டோக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு இருந்தன. அங்கு 100 நடனக் கலைஞர்களுடன் நரேனும், மும்பை அழகி சீமாவும் ஆடிப் பாடும் காட்சி படமாக்கப்பட்டது. 'மாம்பழம் விக்கிற கண்ணம்மா உம் மனசுக்குள்ளே என்னம்மா யாருமேல கண்ணும்மா யாரை கட்டிடுக்க சம்மதம்மா' என்ற பாடலுக்கு அவர்கள் ஆடினார்கள். கானா உலகநாதனைப் போன்று கானா பாடல்கள் பாடும் 'கானா' பழனி இந்தப் பாடலைப் பாடியுள்ளார். இப்பாடல் மூலம் பிரபலம் கிடைக்கும் என்று அவர் நம்புகிறார்.

## சங்கீதா நடிக்கும் 'தனம்'

நந்திமேடு செல்லியம்மன் மூவிஸ் என்ற புதிய பட நிறுவனத்தார் அதிக பொருட்செலவில் தயாரிக்கும் படத்திற்கு 'தனம்' என்று பெயரிட்டுள்ளனர். வித்தியாசமான கதையம்சம் கொண்ட படமாக 'தனம்' உருவாகிறது.

இந்தப் படத்தில் சங்கீதா கதாநாயகியாக நடிக்கிறார். 'உயிர்' படத்தின் மூலம் பரபரப்பாக பேசப்பட்டாலும், எதிரான விமர்சனங்களையும் சந்தித்த சங்கீதா, தனம் படத்தின் மூலம் இவர் ஏற்றிருக்கும் கதாபாத்திரம் பரபரப்பாகப் பேசப்படும் அளவுக்கு உருவாக்கப்படுகிறது.

சமுதாயத்தில் பரவிக் கிடக்கும் சீர்கேடுகளைக் களைந்து மக்களைத் திருத்த நினைக்கும் புரட்சிப் பெண் வேடத்தில் சங்கீதா நடிக்கிறார். படத்தில் நடிக்கும் மற்ற முன்னணி நட்சத்திரங்கள் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சென்ட்டிமென்ட், காமெடி கலந்த படமாக உருவாகிறது - 'தனம்'.



எஸ். ஜே. சூர்யா
வியாபாரி



## ஜேசுதாஸ் அறிவுரை

'திருட்டுப்பயலே' படம் 150 நாட்கள் ஓடி சாதனை படைத்ததற்காக அதன் இயக்குநர் சுசிகணேசனுக்கு அவுஸ்திரேலியாவில் மெல்பர்ன் நகரில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. அங்குள்ள தமிழர்கள் 1600 பேர் கலந்துகொண்ட விழாவில் பின்னணிப் பாடகர் கே.ஜே.ஜேசுதாஸ் பங்கேற்று சுசிகணேசனை பாராட்டினார். அப்போது ஒரு அறிவுரையும் சொன்னார். ஒரு படத்தில் 6 பாடல்கள் என்றால் குறைந்த பட்சம் இரண்டு பாடல்களாவது மெலோடி பாடல்களாக அமைய வேண்டும். குத்துப் பாடல்கள் இளைஞர்களுக்காக என்றாலும் காலம் கடந்து நிற்பது மெலோடி பாடல்கள்தான். அதற்கு சுசிகணேசன் போன்றோர் துணை நிற்க வேண்டும் என்றார்.

## சினி விசிட்

### நாங்க குழந்தை மாதிரி! – ரீமாசென்

தீபாவளிக்கு வந்த வல்லவனில் ரொம்பவே மகிழ்ச்சியில் இருக்கிறார் ரீமாசென். வருகிற போன் கால்கள் எல்லாம் 'கொன்னுட்டீங்க'. 'கிளப்பிட்டீங்க' என்றே வருகிறதாம். வல்லவனில் வில்லியாக ரீமா புகுந்து விளையாடியதற்குத்தான் இந்தப் புகழுரைகள். சரி, படம்தான் ரிலீஸாகிவிட்டதே, இனி தைரியமாக சிம்புவுக்கும் உங்களுக்கும் என்ன சண்டை என்று சொல்லலாமே? என்று மெதுவாகத் தூண்டிலை வீசினோம். ஆனால், ரீமாசென், தூண்டிலுக்குச் சிக்காத 'கிக்'கான மீன்.

'எனக்கும் சிம்புவுக்கும் இடையில் எந்தப் பிரச்சினையுமில்லை. குழந்தைங்க சண்டை போடுவாங்களே...அதுதான் எங்களுக்குள்ளே நடந்தது. சிம்பு இன்னமும் குழந்தைதான். இது சரிவராது என, 'தொடர்ந்து டபுள் ஹீரோயின் சப்ஜெக்டில் நடிக்கிறீர்களே?' என அடுத்த கேள்வியை வீசினோம்.

'எத்தனை ஹீரோயின்கள் நடிச்சாலும் கவலையில்லை. நான் என்னோட போர்ஷனை மட்டும்தான் பார்ப்பேன். அதனால இதுவரை ரெண்டு ஹீரோயின் சப்ஜெக்ட்ல நடிக்கிறதில் எனக்குப் பிரச்சினை வந்ததில்லை. இப்போ பாருங்க, 'ரெண்டு' படத்துலயும் ரெண்டு ஹீரோயின்கள்தான்!

'உங்க கிளாமருக்கும் பேச்சுக்கும் சம்பந்தம் இல்லையே' என மனசுக்குள் சொல்லிக் கொண்டு இடத்தைக் காலி செய்தோம்!



அர்ஜுன் - மல்லிகா கபூர்
வாத்தியார்



மாதவன்
ரெண்டு

முகப்பில் : விஷால் - மம்தா - ஆர்யா

## அபிஷேக் விரைவில் திருமணம் செய்ய வேண்டும்! - அமிதாப்பச்சன் விருப்பம்



நமீதா

அபிஷேக்பச்சனும், ஐஸ்வர்யாராயும் காதலிப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இருவரும் தற்போது மணிரத்னம் இயக்கும் 'குரு' படத்தில் இணைந்து நடிக்கிறார்கள். சென்னையில் இப்படத்தின் படப்பிடிப்பு நடந்த போது இருவரும் சேர்ந்து சுற்றினர்.

தியேட்டரில் படம் பார்க்கவும், ஷொப்பிங் செய்யவும் இணைந்தே சென்றனர். மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் இருவரும் ரகசிய திருமணம் கொண்டதாகவும் பரபரப்புத் தகவல் வெளியானது. கோவில் நிர்வாகத்தினர் அதை மறுத்தனர். இந்த நிலையில் அபிஷேக்பச்சன் விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவரது தந்தை அமிதாப்பச்சன் விருப்பம் தெரிவித்துள்ளார். இது குறித்து வாரணாசியில் அவர் அளித்த பேட்டி வருமாறு :- "அபிஷேக்பச்சன் விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஒரு குழந்தைக்குத் தந்தையாக வேண்டும். இது என் விருப்பம் ஆகும். அபிஷேக்பச்சனிடம் ஒரு குழந்தைக்குத் தந்தையாகுமாறு சொல்லவும் விரும்புகிறேன்" என்றார்.



## இறுதிக் கட்டப் படப்பிடிப்பில் - சிவாஜி! படத்தில் ரஜினி 'பஞ்ச்' வசனம்!!

ரஜினி நடிக்கும் 'சிவாஜி' படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடக்கிறது. முந்தைய படமான சந்திரமுகி வெற்றிப் படமாக அமைந்ததால் 'சிவாஜி'யை அதைவிடச் சிறந்த படமாகச் செதுக்குகிறார் இயக்குநர் ஷங்கர். ரசிகர்கள் மட்டுமன்றி, அனைத்துத் தரப்பு மக்களையும் கவரும் வகையில் சிவாஜி கதை உருவாக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வாழும் கோடீஸ்வர தமிழர் கேரக்டரில் ரஜினி நடிக்கிறார். சொந்த நாட்டு மக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் பண மூட்டையுடன் வரும் அவரை வில்லன் கோஷ்டியும், அரசியல்வாதிகளும் ஏமாற்றுகின்றனர். ரஜினியின் பணத்தைப் பிடுங்குகின்றனர். சொத்துக்களை இழந்து ஏழையாகிறார். ஒரு ரூபாய் நாணயம் மட்டும் மிச்சம் இருக்கிறது. அந்த நாணயத்தை வைத்து படிப்படியாக மீண்டும் பணக்காரன் ஆவதுதான் கதை.

ரஜினி படங்களில் அவரது ஸ்டைலுக்கு முக்கியத்துவம் இருக்கும். 'சிவாஜி' படத்திலும் புது மாதிரி 'ஸ்டைல்' சித்தரிக்கப்பட்டுள்ளது. சண்டைக் காட்சிகளில் இந்த ஸ்டைல்கள் புகுத்தப்பட்டுள்ளன.

'ஸ்டண்ட் மாஸ்டர்' பீட்டர் ஹெய்ன் சண்டைக் காட்சிகளை வடிவமைத்துள்ளார். 'பைக்' சண்டை, ரோப் கட்டி நடக்கும் சண்டை போன்றவை ஹைலைட்டாகக் குறிப்பிடப்படுகின்றன. ஒரே அடியில் இருபத்தைந்து பேரை ஆகாயத்தில் பறக்க விடுவதையும் சண்டையில் புகுத்தியுள்ளனர். வில்லன்களுடன் மோதும் கார் சேஸிங் காட்சியும் இடம் பெறுகிறது. இதற்காக நூற்றுக்கணக்கான கார்களைப் பயன்படுத்தியுள்ளனர்.


ரஜினி அணியும் ஆடைகளும் பணக்காரத்தனம் மிளிரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ரஜினி ஆடிப்பாடும் ஒரு பாடல் காட்சிக்கு சிங்கப்பூரில் இருந்து பிரத்யேகமாக கங்காரு தோலில் செய்த வெவ்வேறு நிறத்தில் 5 'கோட்'களை வாங்கியுள்ளனர். இவை ஒவ்வொன்றினதும் விலை தலா ரூ.3 இலட்சமாம். இந்தப் படத்துக்கு இதுவரை இல்லாத அளவில் வெளிநாட்டினரை நிறையப் பயன்படுத்தியுள்ளனர்.

சமீபத்தில் வெளிநாட்டில், அங்குள்ள நடனக் கலைஞர்கள் பங்கேற்ற பாடல் காட்சி படமாக்கப்பட்டது. சென்னை பின்னி மில்லில் வெனீஸ் நகர செட் அமைத்து ஒரு காட்சியை படமாக்கினர். வெனீஸ் நகரக் கால்வாய் மற்றும் செட், போட்டு படம் பிடித்தனர். இதிலும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டினர் நடித்துள்ளனர். ரஜினியின் 'பஞ்ச்' வசனங்களும் சிவாஜியில் இடம் பெறுகிறது.

'என் வழி தனி வழி', 'நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி', 'ஆண்டவன் சொல்றான் அருணாசலம் செய்றான்' என்பன போன்ற பஞ்ச் வசனங்களை பல்வேறு படங்களில் பேசியுள்ளார். அது போல் சிவாஜியிலும் 'பஞ்ச்' வசனங்கள் இடம் பெறுகிறது.

ரஜினி - ஸ்ரேயா முதல் இரவு பாடல் காட்சியொன்று கிளுகிளுப்பாகப் படமாக்கப்பட்டுள்ளது. நயன்தாரா ஒரு பாடலுக்கு மட்டும் ஆடுகிறார். இப்பாடல் காட்சி பூனாவில் படமாக்கப்படுகிறது.

விசால் - மம்தா மோகன் தாஸ்
சிவப்பதிகாரம்






## நிழல்

உறவுகளையும்
உடைமைகளையும்
இழந்துவிட்ட நாம்
வசந்தங்களை
எங்கோ
தொலைத்துவிட்டு
வருத்தங்களை
விதைக்கிறோம்.

கண்ணீராலே அவை
வளர்ந்து இன்று
சோக
விருட்சங்களாகி
துயர நிழலை
எமக்கு
கொடையாக
சமர்ப்பிக்கின்றன.

நிழல் தேடி
நிம்மதியின்றி அலைந்த
எமக்கு - இதுவும்
வேறுபட்ட நிழல்தானே...
அனுபவிக்கிறோம்
அவஸ்தைகளினூடே....!

*–நஸீஹா சம்சபாத்,*
*ஏத்தாலை.*

## தெருவோரத்து தேவதாஸ்...!

பூமியில் - இன்னும்
பருவமடையாத
பனித்துளிகள்...
சில
புற்கள் கூட
புல்லரித்துப் போகிறது!

அழகான விடியலில்
ஆலமர விழுதுகளுக்குள்
அவளைப் பற்றி
அங்கலாய்க்கும்
நினைவுகள்...!

கரு மேகங்களோடு
ஒரு காதல்
இல்லாத பொழுதில்
வானோடு கொஞ்சம்
வாக்கு வாதம்...!

சில நாட்களாய்
தென்றலின்
மிரட்டலோடும்
நிலவின் அக்கினியோடும்
நான்
காயப்படுகிறேன்...!

என்
மாசடைந்த மனசில்
உன்
சுத்தமான காற்றை
கொஞ்சம்
சுவாசிக்க அனுப்பு...!

*–நஸீம் ரூமி,*
*புத்தளம்.*

## மைதானம்!

பணத்தோடு விளையாடி
பகை கொண்ட மனிதம் நீ...
நிலத் தூரை வாங்கி நீ...
நிம்மதியை இழக்கின்றாய்!

முன்னிருட்டு வந்தவுடன் - பயத்தால்
முணுமுணுத்து நீ நடந்து
கண்ணிருட்டு வந்தவுடன் - ஐயா,
காலமது முடிகின்றது.

இரவு பகல் நீ நுகர்ந்து
இதயமதை தொலைத்து விட்டு
பணப் பாசம் கொண்டவனாய்
பகுத்தறிவைத் தொலைத்து விட்டாய்.

இரவுகளைப் பகலாக்கும்
இறைவனையே நீ மறந்து
பொருளாசை கொண்டவனாய்
மெழுகாக உருகுகின்றாய்.

பசியோடு வயிறு நொந்து
பாழாகிப் போனயேழை
குடிசையிலே மழை நீர் சொட்டி
குழந்தைகளும் அழுகின்றனர்!

அயலானோ பசித்திருக்க
அடிவயிறு நொந்திருக்க
மண்ணுலகில் மாடி வீடு
மாந்தர்களே சரிதானோ?

*–ஏ.எல்.காலித்தீன்,*
*பள்ளிக்குடியிருப்பு.*

## மாற்றம் கொடுத்த மங்கை

நீ
நானறியாதவளாக
நடமாடிய போது...

என் முற்றத்துப் பூக்கள்
பூக்களாக மலர்ந்து
பூக்களாகவே, உதிர்ந்து போயின.

நீ நானாகிய
அந்த
நந்தவன நாட்களில்
பூக்கள் பூக்களாக மலர்ந்து
கவிதைகளாக உதிர்ந்தன.

நீ நீயாகி
நிராகரித்துச் சென்ற
நினைவுகளால்
என் தனிமையிலும்
பூக்கள் பூக்களாகத்தான்
பூமி பார்த்தன...
கண்ணீராக உதிர்ந்து முடிந்தன.

*–யூ.எம்.முனீர்,*
*நிககொள்ள.*

## இனிவரும் காலங்களில்...

வாகன நெரிசல்
இல்லாமல் போகும்.

எரிபொருள் விலை
அதிகரிப்பும் தட்டுப்பாடும்
அழியும்.

விபத்து மரணங்கள்
தவிர்க்கப்படும்.

பஸ் தரிப்பின்
காத்திருப்புக்களும்,
பஸ் தரிப்புகளும்
காணாமல் போகும்.

விமான டிக்கெற்
விலை குறையும்
கடவுச் சீட்டு
மதிப்பிழக்கும்.

பொருளாதாரம்
சீராகும்.

பயணங்கள் சுகமாகும்.

சாலைகள் சோலையாகும்.

மரங்கள் தட்டுப்பாடாகும்.

படகுகளும், விமானங்களும்,
வாகனங்களும்
காட்சிப் பொருளாகும்.

பயணங்கள் சுகமாகும்.
பறவைகள்
வழித்துணையாகும்.

வானம் அழுக்காகும்.
வாழ்க்கை எளிதாகும்.

வானவில் வசப்படும்.
காற்று சுத்தமாகும்.

விலைவாசி குறையும்
நடை குறையும்
பறவைகளுக்குப் போல்
மனிதனுக்கும் கடவுள் இனி
சிறகுகள் கொடுத்திடுவாரானால்....!

*–மெய்யன் நட்ராஜ்,*
*டோஹா – கட்டார்.*

## கவிதைக்கொரு கவிதை

உன்னைப் பற்றிய
கிறுக்கள்களெல்லாம்
கவிதைகளாகின.

உன் மூச்சுக் காற்றின்
உஷ்ணத்தில்
என் கிராமத்தின் வெப்பநிலை
உயர்ந்து விட்டது.

உன் கூந்தல் தொட்ட
காற்றில்
ஊரெல்லாம் மணக்கிறது.

வைரமுத்துவை விட
உன் தந்தை பெரிய கவிஞன்
'ஐந்தடி' கவிதையில்
உலகையே வியக்க வைத்திருக்கிறார்.

*–ஆப்தீன் றினோஸ்,*
*கிண்ணியா.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*கவிதை உலகின் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு சிலர் தன்னுடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் கவிதைகள் வரையும் கவிஞர்களை ஊக்குவிப்பதற்காக இணையத்தில் இருந்த சில கவிதைகளை சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம்.*

### மௌனம்!

கனகராசிக்கு ஒப்பிடும்,
கனகத்தை இந்த உலகு,
தொலைத்து,
பல யுகங்களாகிவிட்டன.

ஞானியரோடு நல்லுவுறவு
கொண்டிருக்கும் - இது
நல்ல மனிதனாவதற்கு
பெரும் வழியாகும்.

உள்ளத்துப் பூசல் எல்லாம்
உன்னை உருக்குலைத்தால்
உன்னை நீ அறிந்து
உலகத்தைப் புரிந்துவிட
வழிசமைத்துக் கொடுக்கும்.
வளக்கமெல்லாம் இதற்குண்டு.

உன்னை நான் பெற்றதிலே
உலகத்தில் என்மதிப்பு
தன்னிலே வளர்ந்ததுண்டு
தலையதுவும் நிமிர்ந்ததுண்டு.

உன்தனையே கொள்வதற்கு
கொடுப்பனைகள் இல்லாரிடத்து
சஞ்சலங்கள் எப்போதும்
சகவாசம் கொண்டிருக்கும்.
அவமானங்கள் அப்பப்போ
அழைப்பிதழ்கள் அனுப்பிவிடும்.

பெற்றிடுவோம் உன்னை.
பேணிடுவோம் எம்முன்.
கற்றிடுவோம் உலகை.
கரம் கூப்பும் மனிதஇனமே.

### பணம்

பண்டமாற்று பழமையாகியது.
பணப்புழக்கம் புதுமையாகியது.
புதுமைகளே கொடுமையாகியது.
மனிதர்களை மிருகமாக்கியது.
இரக்க குணத்தை
இழிவுபடுத்தியது.
கொடுக்கும் குணத்தைக்
கோட்டைவிட்டது.
வன்முறையை வழமையாக்கியது.
பொய்மைகளைப்
பெருக்கிவைத்தது.
நிம்மதியை நிர்மூலம் செய்தது.

### ஒற்றைக்கண்!

அலங்காரம்அபாரம்.
பலகாரம் பலவகை.
வரவேற்பு வண்டிவண்டியாய்.
இத்தனையும் செய்பவர்,
உண்பதை ஒற்றைக்கண்ணால்
உள்வாங்குவது மாத்திரம்
அவமாணம்.

விஞ்ஞான ஒற்றைக்கண்ணுக்காக,
வைபவங்கள் வரம்பு முறையின்றி,
வளைக்கப்படுவது
வருத்தத்திற்குரியதல்லவோ.

### ஏற்றம்!

என் வண்டியில்,
பழுவின் ஏற்றம்.
என்னில்,
போதையின் ஏற்றம்.
என் வீட்டில்,
வறுமையின் ஏற்றம்.
பெருகிவிட்ட பிள்ளைகளின்,
ஏற்றம்.
சென்னையில் விலைவாசி,
ஏற்றம்.
இந்தியாவில் பொருளாதார,
ஏற்றம்.
கையிருப்பில் சைபரின்,
ஏற்றம்.
காலத்தில் தைமகள்,
ஏற்றம்.
மொத்த வறுமையும்
என்னிடம் ஏற்றம்.
பொங்கல் விழா என்,
கானக்களில் ஏற்றம்.

### வேண்டும்!

தைமகள் வரவேண்டும்.
தங்க ஈழம் ஜொலிக்க வேண்டும்.

நாம் பட்டாசு வெடிக்க வேண்டும்.
எம் பசுமைகள் பொடிக்க வேண்டும்.

விடிவெள்ளி தெரியவேண்டும்.
வீண்சண்டை தீரவேண்டும்.

ஆதவன் உதிக்க வேண்டும்.
இனி அமைதியொளி வீசவேண்டும்.


பால் பொங்கவேண்டும்.
பயனற்ற போர் ஓயவேண்டும்.

நெஞ்சம் புரியவேண்டும்
நேசித்து மகிழவேண்டும்.


### வறுமையின் சுவை!

உழுதேன் உழுதேன்,
நிலங்களை உழுதேன்.
ஆனால் மனங்களை மாத்திரம்,
என்னால் உழமுடியவில்லை.
மனங்கள் உழப்படாததால்,
காலியாக இருந்தது என் பணப்பை.
காலியான பணப்பை
காட்டிக் கொடுத்தது
மிகுதியான வறுமையை.
மறைக்க எண்ணினேன் வறுமையை.
கடனாய் வேண்டினேன் பணத்தை.
இல்லாள் சொன்னாள்,
தைமகள் வருகிறாள் என.
கையில் இருந்ததைக் கடையில்
கொடுத்தேன்.
வீட்டில் இனிப்பாய் பொங்கல்
வைத்தோம்.
உண்ணும் போது கடனை
நினைத்தேன்.
கண்ணீர் எனக்கு கரிப்பைத் தந்து,
வறுமையின் சுவையும்,
இதுதான் என்றது.

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : மு. மயூரன்
வயது : 19
முகவரி : சல்வா வீதி,, அல் யாமஜ்,
தபால் பெ.இல. 222817
டோஹா, கட்டார்.
பொழுதுபோக்கு : வழமையானவை.




பெயர் : மு.த.மு. றாசிக்
வயது : -
முகவரி : இல. 227, பெரிய பாலத்தடி வீதி,
ஏறாவூர் 01
பொழுதுபோக்கு : பத்திரிகை,
வானொலி கேட்டல்.

# வாசனையாக இருக்க வழிகள் உண்டு!

உடலில் ஏற்படும் நாற்றத்தைப் போக்கி எப்போதும் வாசனையாக இருக்க வழிகள் உண்டு. இதோ சில எளிய குறிப்புகள்.

**தலையில் வியர்வை நாற்றம் போக்க :-**

தலையைச் சரிவரப் பராமரிக்காமல் போனால், தலையில் வியர்த்துக் கொட்டி, வியர்க்குருவும் அரிப்பும் ஏற்பட்டு, சிக்கும், பிசுக்கும் சேர்ந்து தலையே குப்பைக் கூடையாக மாறி நாறத்



தொடங்கும்.

சீயக்காய் பொடி - 2 தேக்கரண்டி
வெந்தயத் தூள் - 2 தேக்கரண்டி

இரண்டையும் வெந்நீரில் கலந்து பேஸ்ட்டாக்கி, ஒரு நாள் விட்டு ஒரு நாள் தலைக்கு தேய்த்துக் குளியுங்கள். ஓரிரு வாரத்தில் அழுக்கும், வியர்வை நாற்றமும் போய் தலை சுத்தமாகி விடும்.

**வியர்வை நாற்றம் போக்க :-**

பெண்களுக்கு மாதவிலக்கின் போதுதான் கை, கால், அக்குள், தொடைப் பகுதிகளில் வியர்வை நாற்றத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும். இதற்கு,

சம்பங்கி விதை - கால் கிலோ
பயத்தம் பருப்பு - 100 கிராம்
மகிழம்பூ, பூலான் கிழங்கு

எடுத்து எல்லாவற்றையும் சேர்த்து அரையுங்கள். வெளியில் செல்லும் போதும், அலைந்துவிட்டு வீடு திரும்பும் போதும் இந்தப் பவுடரால் தேய்த்துக் கழுவுங்கள். இதனால் உடம்பில் ஏற்படும் கெட்ட வாடை, வியர்க்குரு, சொரி அத்தனையும் அடியோடு நீங்கி, உடம்பு கமகமவென்று மணக்கும்.

**கமகமவென்று மணக்க :-**

வியர்வையால் ஏற்படும் பாதிப்புகளைப் போக்கி, உங்களை கமகமவென்று மாற்ற சூப்பரான வாசனை குளியல் பவுடர் ஒன்று இருக்கிறது. இதை நீங்களே எளிதாகத் தயார் செய்யலாம்.

செண்பகப்பூ, மகிழம்பூ ரோஜா மொட்டு - தலா 50 கிராம்.
பொன் ஆவாரம் பூ, தவனம் - தலா 100 கிராம் (உலர்ந்த பூக்களாக வாங்கிக் கொள்ளுங்கள்)
வெட்டிவேர், சந்தனம் - தலா 20 கிராம்
பூலான் கிழங்கு, வெள்ளரி விதை, கடலைப் பருப்பு - தலா 100 கிராம்
முல்தானிமட்டி - 10 கிராம்
பயத்தம் பருப்பு - கால் கிலோ

இவற்றை மிஷினில் கொடுத்து அரைத்துக் கொள்ளுங்கள். வாரம் இரு



முறை தலைக்கும், தினமும் உடம்பு முழுவதும் இதைப் பூசிக் குளித்து வந்தால் சூப்பர் வாசனையுடன் உடம்பே பொன்னிறமாக மின்னும்.

**கூடுதல் டிப்ஸ் :-**

வியர்வை நாற்றம் உள்ளவர்கள், வெங்காயம் அதிகம் சேர்க்காதீர்கள், செண்ட், டியோடரெண்ட், க்ரீம்களைப் பயன்படுத்தாமல் இருப்பது மிகவும் நல்லது.

# பீங்கான் பாத்திரங்கள் பளபளக்க வேண்டுமா?

✦கிளாஸ் மற்றும் பீங்கான் பாத்திரங்களை மிகவும் நாசூக்காகக் கழுவ வேண்டும். கிளாஸ் டம்ளர், பாட்டில், கதவு, முகம் பார்க்கும் கண்ணாடி, பீங்கான் பாத்திரங்களைச் சுத்தம் செய்வதற்கென்றே பிரத்தியேகக் கிளீனர் கடைகளில் கிடைக்கிறது.

✦கண்ணாடியைச் சுத்தம் செய்ய பேப்பர், பேப்பர் டவல் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, பருத்தியினால் ஆன மெல்லிய துணியைப் பயன்படுத்துவது நல்லது.

✦கண்ணாடி ஜன்னல்களைத் துடைக்கும் போது ஒரு பக்கக் கண்ணாடியைப் பக்கவாட்டிலும் மற்றொரு பக்கக் கண்ணாடியை நீளவாட்டிலும் துடைத்தால், துல்லியமாகத் துடைத்த பலன் கிடைக்கும்.

✦கண்ணாடிப் பொருட்களில் நேரடியாகக் கிளீனரைத் தெளிக்காமல், துணியில் சிறிது 'ஸ்பிரே' செய்து கண்ணாடிப் பொருட்களைத் துடைத்தால், 'பளிச்' சென்றிருக்கும்.

✦கண்ணாடி மற்றும் பீங்கான் பாத்திரங்களைக் கிளீனர் போட்டுத் துடைத்தபின், காற்றோட்டமான இடத்தில் ஐந்து நிமிடம் திறந்தபடி வைத்த பிறகு 'ஷெல்ப்' பில் வைத்து மூடலாம். அப்படியே மூடினால், சில நாட்களுக்குப் பின் ஒரு வித வாடை ஏற்படும்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

46

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
..............................
தே-அ- அட்டை இல : ..............................
கையொப்பம் : ..............................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போது மானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -46**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
14.11.2006

**பரிசுப் போட்டி இல - 44**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**ப.கஜேந்திரா,**
**இல.55, 2ஆம் குறுக்கு வீதி, மட்டக்களப்பு.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# லேடீஸ் ஸ்பெஷல்



# விரல்களுக்கு அழகு வேண்டுமா?

இரண்டு கண்கள், ஒரு மூக்கு, ஒரு வாய் - ஆனால் முகத்துக்கு முகம் எத்தனை வித்தியாசம். அதே போல் விரல்களின் அமைப்பால் கைகளும் மாறுபடுகின்றன. விரல்களுக்கேற்ப நகத்தை அமைத்துக் கொள்வதுதான் விரல்களுக்கு அழகு!




அளவுக்கதிகமாக நீண்ட தோற்றத்தை அளித்தால் அந்த அழகு குறைந்துவிடும். உங்கள் நகங்களைச் சதுரமான முனைகள் உள்ளவாறு வெட்டிக்கொண்டால் உங்கள் விரல்களுக்கு அழகு சேர்க்கும்.

**தடித்த குட்டையான விரல்கள் :-**

நகத்தை, நீண்ட வட்ட வடிவில் (Oval shape) வெட்டிக் கொள்ளுங்கள். இதனால் உங்கள் விரல்கள் நீளமாக மட்டுமின்றி மெல்லியதாகவும் தோற்றமளிக்கும்.

**தடித்த நீண்ட விரல்கள் :-**

இந்த வகையான அமைப்பு உள்ள விரல்களுக்கு வட்ட வடிவில் உள்ள நகங்கள் சிறந்தது. அது உங்கள் விரல்களுக்கு நேர்த்தியான தோற்றத்தை அளிக்கும்.



**நீண்ட மெலிந்த விரல்கள் :-**

இந்த வகையான விரல்களின் அமைப்போ அழகானது என்றாலும், மற்றும் இது போன்ற விரல் அமைப்பு, கொண்டவர்கள், நகத்தின் நிறத்திலேயே இருக்கும் 'நெயில் பாலிஷ்' உபயோகிப்பது சிறந்தது.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## மில்க்கி ஆப்பிள்

***தேவையான பொருட்கள் :-***

பால்பவுடர் - 1 கப்
தேங்காய்த் துருவல் - 1 கப்
சீனி - முக்கால் கப்
சிவப்பு உணவு கலர்பொடி - தேவைக்கேற்ப
நெய் - 1 மேசைக் கரண்டி
லவங்கம் - 10


***செய்முறை :-***

சீனியை 1 கப் தண்ணீரில் போட்டு, அடி கனமான வாணலியில் பாகு காய்ச்சவும். பின், தேங்காய்த் துருவலை அதில் போட்டுக் கலந்து, கலர் பவுடரையும் போட்டு, நெய்யையும் ஊற்றிக் கிளறவும். பின்னர் பால் பவுடரைச் சிறிது சிறிதாகச் சேர்த்து, கலந்து கொண்டே இருக்கவும்.

கெட்டியானதும் அடுப்பிலிருந்து இறக்கி, சற்று ஆறியவுடன் உருண்டைகளாக உருட்டி வைக்கவும், பின் ஒவ்வொரு உருண்டையிலும் ஒரு லவங்கத்தை வைத்து அழகுபடுத்தவும். லவங்கம் வைக்கும் போது சிறிது பள்ளமாகச் செய்து வைத்தால் பார்ப்பதற்கு ஆப்பிள் போன்றே காட்சி தரும். பிறந்த நாள் போன்ற வைபவங்களுக்கு விரைவில் செய்யக்கூடிய 'சிம்பிள் ஸ்வீட்'.




**சேமித்து** வைத்திருக்கும் பண்டங்கள், உணவுகள் அவ்வளவும் எகிறியிருக்கும். மாசுரெட் தண்ணீரில் குதித்து, படகை இழுத்தான். ஒரு பெரிய புதர்க் கொத்துக்குக் கீழாகச் சென்றோம். ஒரு மரக் கிளையில் படகைக் கட்டினோம். ஆளுக்கொரு மடக்கு ரம் குடித்தோம். பிறகு நான் தனியாகக் கரையேறினேன்,



நண்பர்கள் இருவரையும் படகிலேயே விட்டுவிட்டு.

கையில் திசை காட்டும் காம்பஸுடன் நான் நடந்து சென்றேன், வழியிலுள்ள மரக் கிளைகளை ஒடித்துக் கொண்டே. புறப்படுமுன்பே கோணித்துண்டுகள் கிழித்து வைத்திருந்தேன். அந்தக் கிழிசல்களை ஆங்காங்கே அடையாளத்துக்காகக் கட்டிய வண்ணம் நடந்தேன்.

இருட்டுக் குறைந்த ஒரு திட்டுத் தெரிந்தது. மூன்று குடிசைகள் கண்ணில் பட்டன. சில குரல்களின் ஓசையும் கேட்டன. என் வருகையை எப்படி அறிவிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. அவர்களாகவே என்னைக் கண்டுபிடிக்கக்கூடும்.

ஒரு சிகரெட் பற்றவைத்துக் கொண்டேன். தீக்குச்சி பளீரென்று தெரிந்ததோ இல்லையோ, மறு விநாடியே ஒரு சிறிய நாய் குரைத்துக்கொண்டே பாய்ந்து வந்தது. என் கால்களைக் கடிப்பதற்காகத் தாவித் தாவிக் குதித்தது. "கடவுளே! இது பெருவியாதியுள்ள நாயாக இருக்கக் கூடாது." என்று எண்ணிக் கொண்டேன். "முட்டாளாயிருக்கிறாயே, நாய்களுக்கு எங்கேனும் பெரு வியாதி பிடிக்குமா?" என்றும் சொல்லிக் கொண்டேன்.

"யாரங்கே? யாரது? மார்ஷல், நீயா?" - ஒரு குரல்.

"யாரேனும் தப்பி வந்திருக்கிற கைதியாக இருக்கும்," என்றது இன்னொரு குரல். என்னைக் கண்டதும் -

"என்ன செய்கிறாய் இங்கே? எதையாவது தட்டிக் கொண்டு போகப் பார்க்கிறாயா? உனக்குத் தருகிறாற்போல் என்ன மிஞ்சியிருக்கப் போகிறதென்று நினைக்கிறாய்?"

"இல்லை. எனக்கு உதவி தேவை," என்றேன்.

"சும்மாவா, காசுக்கா?"

"லாஷூட்! உன் ஓட்டை வாயை மூடு!" இன்னொரு குரல் அடக்கிற்று. நான்கு நிழல்கள் குடிசையிலிருந்து வெளிப்பட்டன.

"தம்பி, மெதுவாய் முன்னே வா. நீ துப்பாக்கியோடு தப்பிய ஆளாகத்தான் இருக்க வேண்டும். துப்பாக்கி இருந்தால் அதைக் கீழே போட்டு விடு. இங்கே பயப்படுவதற்கு ஒன்றுமில்லை."

"நான் துப்பாக்கி ஆள்தான். ஆனால் அதைக் கொண்டு வரவில்லை." முன்னேறிச் சென்று அவர்களுக்குப் பக்கத்தில் சென்றேன். இருட்டாயிருந்தது. அவர்கள் முகம் தெரியவில்லை. முட்டாள்தனமாகக் கைகுலுக்குவதற்காகக் கை நீட்டினேன். யாரும் குலுக்கவில்லை. அது இங்கே தப்பான காரியம் என்பதை பிற்பாடுதான் உணர்ந்தேன். எனக்கு நோய் தொற்றுவதை அவர்கள் விரும்பவில்லை.

"குடிசைக்குள் போவோம்," என்று லாஷூட் அழைத்துச் சென்றான். உள்ளே மேஜை மீது ஓர் எண்ணெய் விளக்கு எரிந்து

**எழுதியது: ஹென்றி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

கொண்டிருந்தது.

"உட்கார்."

முதுகில்லாத பிரம்பு நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தேன். லாஷூட் இன்னும் மூன்று எண்ணெய் விளக்குகளை ஏற்றி, ஒன்றை எனக்கெதிரில் இருந்த மேஜை மீது வைத்தான். திரியிலிருந்து வாடை அடித்தது - தேங்காய் எண்ணெயின் வாடை.

நான் உட்கார்ந்திருந்தேன். அந்த ஐந்து பேரும் நின்றிருந்தார்கள். அவர்கள் முகங்கள் புலப்படவில்லை. ஆனால் என் முகத்தில் விளக்கு வெளிச்சம் நன்கு வீசியது. அதைத்தான் அவர்கள் விரும்பினார்கள்.

வாயை மூடும்படி லாஷூட்டை அதட்டிய குரல் பேசியது: "லாங்கீல், மன்றத்துக்குப் போய் இவனை அங்கே அழைத்து வரலாமா என்று கேள். பதிலைத் தெரிந்து கொண்டு சீக்கிரம் வா. அழைத்து வரும்படி டூஸான் சொன்னால், உடனே வந்து சொல்லு.... உனக்குக் குடிப்பதற்கு எதுவும் இங்கே தர முடியாது நண்பனே! பச்சை முட்டை பிடிக்குமானால் சொல்லு." முட்டைகள் நிறைந்த பிரம்புக் கூடையொன்றை என் பக்கம் நகர்த்தினான் அவன்.

"வேண்டாம். நன்றி."

அவர்களில் ஒருவன் எனக்கு வலப்புறம் மிக அருகில் உட்கார்ந்தான். அப்போதுதான், முதன்முதலாக ஒரு பெருவியாதிக்காரனின் முகத்தை நான் பார்த்தேன்.

சகிக்க முடியவில்லை. முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொள்ளாதிருப்பது - என் அருவருப்பைக் காட்டிக் கொள்ளாதிருப்பது - பெரும் கஷ்டமாயிருந்தது.

அவனுடைய மூக்கு - சதை எலும்பு இரண்டுமே - அடியோடு அரிக்கப்பட்டிருந்தது. முகத்தின் நடுவே ஓர் ஓட்டை மட்டும் இருந்தது. இரண்டு ஓட்டையல்ல. ஒரே ஓர் ஓட்டைதான். இரண்டு பிராங்க் நாணயம் அளவுக்குப் பெரிய ஓட்டை. கீழ் உதடு - வலக்கைப் புறத்தில் - அரித்துப் போயிருந்தது. சுருங்கிவிட்ட ஈறுகளிலிருந்து மிக நீளமான மூன்று மஞ்சள் பற்கள் நீட்டிக் கொண்டிருந்தன. மேல் தாடையின் எலும்பில் அவை நுழைவதைக் காண முடிந்தது. ஒரே ஒரு காதுதான். கட்டுப் போட்ட கையை மேஜை மீது அவன் வைத்தான். அது அவன் வலது கை. இடதுகையில் இரண்டு விரல்கள் தான் பாக்கியிருந்தன. அந்த விரலில் நீண்ட தடித்த சுருட்டைப் பிடித்திருந்தான். அந்தச் சுருட்டை அவனே சுருட்டியிருக்க வேண்டும். ஏனெனில், அந்தப் புகையிலை சற்றுப் பச்சை நிறமாக, அரைப் பதத்தில் இருந்தது. இடது கண்ணுக்கு மட்டும் தான் இமை இருந்தது. வலது கண்ணில் எதுவுமில்லை. கண்முதல் அடர்த்தியான நரை மயிர் வரை ஓர் ஆழமான காயம் ஓடிற்று. கரகரப்பான குரலில் அவன் சொன்னான்:

"நண்பனே, உனக்கு நாங்கள் உதவி செய்கிறோம். என் கதி உனக்கு ஏற்படும் வரை கயானாவில் தங்கிவிடாதே. அது கூடாது."

"தாங்ஸ்."

"என்னைப் பார், ஜீன் என்று அழைக்கிறார்கள். நான் பாரிஸ்காரன். தீவாந்தர சிறைக்கு வந்தபோது நான் உன்னைக் காட்டிலும் அழகாயும், உடல் நலத்தோடும், பலசாலியாயும் இருந்தேன். பத்தே வருஷம் தான்! எப்படி ஆகிவிட்டேன் பார்."

"அதிகாரிகள் உனக்குச் சிகிச்சை எதுவும் கொடுக்கிறதில்லையா?"

"கொடுக்கிறார்கள். ஷவுல்முக்ரா எண்ணெய் ஊசிபோட ஆரம்பித்த பிறகு எனக்குக் கொஞ்சம் தேவலை. இதோ பார்." அவன் தலையைத் திருப்பி இடப்பக்கத்தைக் காட்டினான். "இங்கே உலர ஆரம்பித்திருக்கிறது."

அளவிறந்த இரக்கம் என்னுள் பொங்கிக்கொண்டு வந்தது. என் சிநேகிதத்தைக் காட்டுவதற்காக அவனுடைய இடது கன்னத்திற்கருகே என் கையைக் கொண்டு போனேன். அவன் திடுக்கிட்டுப் பின்னடைந்தான். "என்னைத் தொட வேண்டுமென்று நினைக்கிறாய். நன்றி. ஆனால் நோயாளியைத் தொடவே தொடாதே. அவனுடைய பாத்திரத்திலிருந்து சாப்பிடவோ, குடிக்கவோ செய்யாதே." என்றான் அவன்.

(பட்டாம்பூச்சி பறக்கும்)

# ஏமாற்றுப் பேர்வழிகளிடம் ஏமாறாதீர்கள்!

"வெளிநாடுகளுக்குப் போக வேண்டும், பணம் உழைக்க வேண்டும், வசதி வாய்ப்புகளோடு மற்றவர் மதிக்கின்ற வாழ்க்கை வாழ வேண்டும்." இதுதான் இன்று இலங்கையில் வாழும் அநேகரின் முதல் ஆசையாக இருக்கிறது. இலட்சக்கணக்காகப் பணம் இருப்பவர்கள் வெள்ளைக்காரர்களின் நாடுகளுக்குப் போக நினைப்பதும், ஆயிரக்கணக்கில் பணம் இருப்பவர்கள் அரபு தேசங்களுக்குப் போக நினைப்பதும் வழமையாகிவிட்டது. இப்போது அரபு தேசங்களுக்கும் - மலேசியா, சைப்பிரஸ், கொரியா போன்ற நாடுகளுக்குப் போவதற்கும் கூட 1,50,000 ரூபா தொடக்கம் 3,50,000 ரூபா வரை முகவர்களுக்குப் பணம் கட்ட வேண்டும். மலேசியாவுக்கு ஒருவரை அனுப்ப முகவர் ஒருவருக்கு 2,25,000 ரூபா கட்ட வேண்டும். அதேபோல் டுபாய், கட்டார், சவூதி போன்ற நாடுகளுக்கு 1,50,000 ரூபா கட்ட வேண்டும். இப்படிக் கட்டிவிட்டுப் பின்னர் மாதக் கணக்கில் அந்த முகவர்களுக்குப் பின்னால் அலைவதுதான் கொடுமையான அனுபவம். 'வீஸா வரவில்லை; வந்து விடும்" என்று கூறியே மூன்று, நான்கு மாதங்களைக் கடத்தும் முகவர்கள் நிச்சயமாக ஏமாற்றுப் பேர்வழிகள்தான். அப்படியான முகவர்களுக்குத் தொலைபேசியில் பேசுவதற்கே தனியாக ஒரு தொகை செலவு செய்ய வேண்டும். அதிலும் கொழும்பில் முகவரும், வெளி மாவட்டங்களில் பயணம் செய்ய வேண்டியவருமாக இருந்தால், முகவரைப் பிடிக்கப் படும்பாடு பெரும்பாடுதான். எவ்வளவு முயற்சித்தாலும் முகவர் தொடர்புக்கு வரமாட்டார். அப்படி வந்தாலும் "உங்கள் விஷயமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். நீங்கள் கொழும்புக்கு வரவேண்டியிருக்கும். சின்ன மெடிக்கல் ரிப்போர்ட் ஒண்டு எடுக்க வேணும்." "நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். அடுத்த வாரமளவில் பயணம் சரி வரும்" என்று ஏதோ நமது பிரச்சினைக்காக மட்டுமே தான் முகவராக இருப்பது போல் தோரணை காட்டிப் பேசுவார்கள். இதே பதில் தொடர்கதையாகிப் போய், எந்தப் பயணியாவது கொஞ்சம் கடிந்து பேசிவிட்டாலோ, கோபப்பட்டாலோ, அடுத்த நாளே "கொழும்புக்கு வாருங்கள்; பயணம் ரெடி" என்று அவர்களை கொழும்புக்கு அழைப்பார்கள். அப்படி அழைத்து வருபவர்களை - தங்களுக்கு மிகவும் பழக்கமான - மிகக் கீழ்த்தர வசதிகளைக் கொண்ட தங்கு விடுதியில் (லொட்ஜில்) தங்க வைப்பார்கள். அந்தத் தங்கு விடுதியில் மலசலகூடம், குளியலறை என்று எதுவுமே சுத்தமாக இருக்காது. அது பொதுப் பாவனையாகவே இருக்கும். தங்கும் அறைகள் கூட மெல்லிய பிளைவூட் பலகைகளால் அடைக்கப்பட்ட கோழிக் கூடுகள், புறாக்கூடுகள் போல் இருக்கும். அந்தத் தங்குமிடத்தில் ஏற்கனவே அழைக்கப்பட்டவர்களும் தங்கி இருப்பார்கள். அவர்களில் சிலர், பயணம் செய்து பிரச்சினையாகி, திரும்பி வந்து வீட்டுக்குப் போக முடியாமல், முகவரிடம் கெஞ்சிக் கூத்தாடி தங்கி இருப்பார்கள். இவ்வாறானவர்களில் பெண்களும் உண்டு. அந்தப் பெண்கள் அநேகமாக தனியாகவே இருப்பார்கள். அவர்களை அங்கு வரும் ஒவ்வொரு ஆணுமே மிகக் கீழ்த்தரமான எண்ணத்தோடு பார்க்கும் அவலமும் உண்டு. பொதுவாக அவ்வாறான இடங்களில், வீட்டை விட்டுத் தனியாக வந்து இருக்கும் பெண்களின் நடத்தை சந்தேகத்துக்குரியதாகவே இருக்கும். அவர்களை, தவறான பெண்களாகவே நடத்துகின்ற சூழல் அங்கு தாராளமாக நிலவும். அந்தச் சூழலானது அரசுக்கும், சட்டத்துக்கும் தெரியாமல் இயங்கிக் கொண்டிருக்கும் இருண்ட வாழ்க்கையாகவும், தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடமாகவும் எண்ணத் தோன்றும்.

"இவர்களைப் பார்க்க அவ்வப்போது முகவர் வருவார். வந்து சும்மா பழக்கதோசத்தில் சாப்பிட்டீர்களா, பிரச்சினை ஒன்றும் இல்லையே, உங்கள் பயண அலுவல் நடக்கிறது. சீக்கிரம் போய் விடலாம்" என்றெல்லாம் நம்பிக்கை தரும் விதமாகக் கதைப்பார். திடீரென்று ஒரு நாள் ஒரு பெண்ணை "இன்றைக்கு உங்களுக்கு இன்டர்வியூ" என்று அழைத்துக்கொண்டு போவார். அப்படி அழைத்துக் கொண்டு போகும் போதே ஏற்கனவே அப்படி அழைக்கப்பட்டவர்கள் தங்களுக்குள் சிரித்துக் கொள்வார்கள். அவர்களுக்குத் தெரியும் இது என்ன 'இன்டர்வியூ' என்பது. இப்படியே ஒரு போலியான உலகம் தொடர்ந்து கொண்டிருக்கும். எப்போதாவது ஒரு தடவை அவர்களில் ஒருவர், இருவர் பயணம் செய்வர். அவர்களைக் காட்டி புதியவர்களை அந்த முகவர் ஏமாற்றுவார். "பயணம் வேண்டாம். பணத்தையும், பாஸ்போர்ட்டையும் தாங்கள்" என்று எவராவது கேட்டால், "பணம் உடனடியாக இல்லை. ஆனால் தருவேன்...அல்லது நான் பணம் தர வேண்டும் என்று கடிதம் எழுதித் தருகிறேன்" என்று கூறிவிட்டு கடிதமும் எழுதித் தரும் முகவரும் உண்டு. அவரிடம் ஏற்கனவே 20 - 30 பாஸ்போர்ட்டுக்கள் ரப்பர் பேண்ட் போட்டு இருக்கும். அந்தப் புத்தகத்துக்கு உரியவர்கள்தான் அங்கே தங்கு விடுதிகளில் இருட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.


இதே மாதிரியான போக்கு, ஆனால் கொஞ்சம் பெரியளவிலான ஏமாற்று நடக்கும், லட்சக்கணக்கில் பணம் வேண்டிய முகவர்களின் ஏமாற்றில் அவர்கள். வெள்ளைக்கார நாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதாக ஏமாற்றுபவர்கள்.

மேலே குறிப்பிட்ட சம்பவமானது மருதானையில் இயங்கும் ஒரு போலி முகவரினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் உண்மைச் சம்பவம். தேவையும், அவசியமும் ஏற்படுமாக இருந்தால், அந்த முகவரைப் பற்றியும், அந்தத் தங்குமிடம் பற்றியும் மீண்டும் முரசு தன் பார்வையைச் செலுத்தும். இது போன்ற பல உண்மைச் சம்பவங்கள் இருக்கின்றன. அவற்றை, பாதிக்கப்பட்டவர்கள் எழுதி அனுப்பினால், அவர்களின் உரிமைக்காகவும் நியாயத்துக்காகவும் 'முரசு' துணிந்து களமமைக்கும்.

பாதிக்கப்பட்டவர்கள் அவமானங்களுக்குப் பயந்து, ஒளிந்து கொள்ளாதீர்கள். நீங்கள் மௌனித்து வாழ்வதானது உங்களைப் போல் மேலும் பலரின் வாழ்க்கை சீரழிந்து போகவே வழி செய்யும். அது போலி முகவர்களின் செயற்பாட்டை ஊக்கமடையச் செய்யும். வெளிநாட்டுக்குப் போக முயற்சி செய்து முடியாமல் போனது ஒரு தோல்வி அல்ல. அது ஒரு அனுபவம் - அவ்வளவுதான். எனவே இவ்வாறான திருடர்களின் முகத்திரையைக் கிழித்து அவர்களை வெளி உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவோம். வெளிநாட்டுக்குப் போனவர்களின் குடும்பங்களில் நடக்கும் கவலை தரும் சம்பவங்கள், வெளிநாட்டு மோகத்தில் வாழ்க்கையைச் சீரழித்துக் கொண்டவர்களின் உண்மை நிலையை முரசுக்கு எழுதி அனுப்புங்கள்.


**கீழ்த்தரமான தங்கு வீடுதியில் தங்கி இருந்து, முகவர் அடிக்கடி இண்டர் வியூவுக்கு அழைத்துச் சென்ற நான், தயங்காமல் உண்மைகள் வெளிவர வேண்டும் என்பதற்காக மட்டும் எழுதி அனுப்புகிறேன். என் நிலைக்குக் காரணமான சில ஆதாரங்களும் அழுகையுமே இன்று என் வாழ்க்கையாகிவிட்டது. உண்மையுடன், இவள் - பானு.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி




**ஆலாலசுந்தரம் சதீஸ்குமார்**
**(தோழர் சதீஸ்)**

*மண்ணின் மடியில் : 21.01.1983*
*மக்கள் மனதில் : 12.10.2006*



**இராசையா விக்னேஸ்வரன்**
**(தோழர் முகுந்தன்)**

*மண்ணின் மடியில் : 17.05.1973*
*மக்கள் மனதில் : 12.10.2006*



**அருள்நாயகம் குணநாயகம்**
**(தோழர் சுதா)**

*மண்ணின் மடியில் : 09.10.1981*
*மக்கள் மனதில் : 12.10.2006*

**உறுதி கொண்டு சுடர் விட்ட சூரியத் தோழர்களுக்கு இறுதி மரியாதை!**

**மக்களுக்காக எழுந்து மக்களின் மகிழ்ச்சிக்காக உழைத்து, மக்களின் எதிரிகளால் பலி கொள்ளப்பட்ட மக்களின் நண்பர்கள் இவர்கள்!.**

ஓ! தோழர்களே!... உங்கள் உயிர்களைப் பலியெடுத்த குறி தெரியாதவர்களின் குருட்டுத் துப்பாக்கிகளை விடவும் உங்கள் உணர்வுகள் உறுதி படைத்தவைகள்!

ஒதுங்கி ஓடு! மௌனமாய் இரு! உண்மையை மறுத்துப் பேசு! ஏகத்தலைமை அதிகார வெறிக்கு தலையசைத்து ஒத்துப்பாடு! மக்களின் பெயரால் மக்களை வதைக்கும் உயிர்க்கொல்லிப் புலிகளை தோள்களில் தூக்கி கூத்தாடு! அவைகள்தான், உங்கள் மீதான புலிப் பாசிசத்தின் எஜமான ஏவல்கள் என்பதால் நீங்கள் தர்மத்தின் தலைமையின் பக்கம் எழுந்து நடந்த நியாயங்கள் நிஜம்! சிறு பொறி கண்டே அஞ்சும் கோழைகளின் துப்பாக்கிகள் மீதான நம்பிக்கைகளும் குருதி பருகும் கொலை வெறியும் எங்கள் இலட்சியப் பயணத்தை நிறுத்த நினைப்பது வெற்றுக் கனவு! விழ விழ எழுந்து குருதி துடைத்து உரத்த சிந்தனையின் உறுதி வழியில் இறுதி வரை நடப்போம்! விடுதலைக்கு வித்தாகிப்போன சூரியத் தோழர்களுக்கு எங்கள் இறுதி மரியாதை!

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - (ஈ.பி.டி.பி.)

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

**34**

## தியாபானோ இராணி

**ச**தி, சூழ்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் நிர்வாகத் திறமைகளில் பலவீனமாக இருப்பார்கள். நிர்வாகத் திறமைகளில் சிறப்பாக செயற்படுவோர் சதி, சூழ்ச்சிக்கு இரையாகி விடுவார்கள். ஆனால் சதி, சூழ்ச்சி நடவடிக்கைகளுடன் சிறந்த ராஜதந்திரமும், அதிகார அறிவும் உடையோரைக் காண்பது அரிது.

அப்பபடிப்பட்ட ஒருத்திதான் தியாபானோ ராணி. கி.பி. முதலாம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஐரோப்பாவில் இருந்த தேசங்களில் ஒன்று பைஸாண்டைன் ஆகும். இத்தேசத்தின் அரசன் இரண்டாம் ரோமன்ஸின் மனைவியே தியாபானோ ராணி.

இரண்டாம் ரோமன்ஸ் - தியாபானோ அரச தம்பதியினருக்கு இளவரசனான ஆண் குழந்தை ஒன்றும் இருந்தது. வளமான பைஸாண்டைன் தேசத்தினைச் சிறப்பாக ஆட்சி செய்து வந்த இரண்டாம் ரோமன்ஸ் மன்னர், தன்னுடைய மனைவியின் விடயத்தில் அவதானம் செலுத்தத் தவறியது மட்டுமின்றி, தன் வாழ்க்கையினையே கோட்டை விட்டார்.

அப்போது அத்தேசத்து இராணுவப் படைகளின் தளபதியாக இருந்தவன் போகாஸ் என்பவனாவான். உண்மையில் தியாபானோவின் பழைய காதலனே போகாஸ் என்பதுடன் அவள் மகாராணியாக மாறிய பின்னர் கூட அவர்களிடையே கள்ளத் தொடர்பு நீடிக்கவே செய்தது. இத்தனைக்கும் போகாஸிற்கும் வேறு திருமணம் முடிந்து அவனும் குடும்பஸ்தனாகவே இருந்தான்.

போகாஸ் இராணுவத் தளபதியாக விளங்கியபடியால் எந்த வேளையும் அரண்மனைக்குச் சென்று வரக்கூடிய அதிகாரத்தைக் கொண்டிருந்தான். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் போகாஸிற்கும் - தியாபானோவிற்குமிடையில் கள்ள உறவு நீடித்து வந்தது.

அரண்மனையில் 'அதுவும் மகாராணியாரின் வதிவிடத்திற்கு வெளியார் செல்வது என்பது குதிரைக் கொம்பாகும். ஆனபடியினால் போகாஸ் - தியாபானோ இடையிலான கள்ள உறவு வெளி உலகிற்குத் தெரிய வரவில்லை. எனினும் இந்த ரகசியம் வெகு காலத்திற்கு நீடிக்கவுமில்லை. இவ்விடயம் சம்பந்தமாக சந்தேகம் கொண்ட இரண்டாம் ரோமன்ஸ் மன்னர் நேரடியாகவே அவளிடம் இத் தொடர்பு பற்றி வினவியதுடன் அப்படியான உறவு ஏதும் இருப்பின் உடனடியாகவே அதனைக் கைவிடும்படியும் கடிந்து கொண்டார்.

நிலைமை தலைக்கு மேலே போவதை உணர்ந்த தியாபானோ, மன்னருக்கு பழரசம் கொடுக்கும் போது அதனுள் கொடிய விஷத்தினையும் கலந்து கொடுத்து போகாஸுடன் இணைந்து இரண்டாம் ரோமன்ஸை கொலை செய்து விட்டாள். இச்சம்பவம் நடந்தது கி.பி. 963ஆம் ஆண்டாகும்.

இரண்டாம் ரோமன்ஸ் மன்னரின் மரணத்தின்பின் உடனடியாகக் கூடிய பிரதானிகள் சபை இளவரசனான ஏழு வயது நிரம்பிய பேஸிலை அரசனாக முடிசூட்டியது. ஆயினும் அவன் பராயமடையாத படியினால் பேஸிலுடன் இணைந்து இராணுவ தளபதியான போகாஸும் இணை ஆட்சி நடாத்துவது என பிரதானிகள் முடிவெடுத்தனர்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல, விஷம் வைத்து அரசனைக் கொலை செய்ய, காதலனே இணையாட்சிக்கு வந்தது குறித்து தியாபானோ பெரிதும் மகிழ்வடைந்தாள். தற்போது அவளுக்கு தளபதி போகாஸுடன் கள்ளத் தொடர்புகளுக்கு எதுவிதத் தடைகளும் இருக்கவில்லை. அதே போல இக்கள்ளத் தொடர்புகளும் வெளியுலகத்திற்குத் தெரிய வராதவாறு போகாஸ் பார்த்துக் கொண்டான்.ஆனால் பிரச்சினை வேறு ரூபத்தில் கிளம்பியது.

போகாஸ் ஏற்கனவே திருமணம் முடித்திருந்த லிம்டா என்பவள் தனது கணவருக்கும், மகாராணிக்கும்



இடையிலான கள்ளத் தொடர்பினை அறிந்து கொண்டாள். இணை ஆட்சி நடாத்தும் தனது கணவன் வீட்டிற்கு வருகை தராததும் முன்னர் போல தன்னுடன் உறவு வைத்துக் கொள்ளாததும் அவளுக்குச் சந்தேகம் ஏற்பட வைத்தன. தீர விசாரித்த போதுதான் உண்மையினைக் கண்டறிந்தாள்.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் லிம்டாவிற்கும் ஒரு காதலன் இருந்தான் அவன் நாட்டின் உப இராணுவத் தளபதியான ஸிமிஸ்க்கெஸ் என்பவனாவான்.

தன் வினைத் தன்னைச் சுடும் என்பது போல எந்த அரசனை விஷம் வைத்துக் கொலை செய்து விட்டு போகாஸ் இணை ஆட்சியினைப் பிடித்தானோ அதேபோல போகாஸையும் அவளது மனைவி லிம்டா விஷம் வைத்துக் கொலை செய்தாள்.

இதன் காரணமாக இளவரசன் பேஸிலுடன் இணை ஆட்சி நடாத்திய நாட்டு இராணுவத் தளபதி மரணமடைய, உப இராணுவத் தளபதி ஸிமிஸ்க்கெஸ் இணை ஆட்சி செய்ய அழைக்கப்பட்டான்.

நடைபெற்ற சம்பவங்கள் யாவற்றையும் கையைப் பிசைந்தவாறு பார்த்துக் கொண்டிருந்த தியாபானோ பொறுமையாக இருந்ததுடன் நேர காலம் வரும்வரை காத்திருந்தாள்.

அவள் எதிர்பார்த்திருந்த காலமும் நீண்ட நாட்களுக்குப் பின்னரல்ல, நீண்ட வருடங்களுக்குப் பின்னர் வந்தது. கி.பி. 976ஆம் ஆண்டு நடைபெற்றபோது இளவரசன் பேஸில் பராய வயதிற்கு வந்ததுடன் இணை ஆட்சி முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. அவனே மன்னராக முடிசூடப்பட்டான்.

இவ்வளவு காலமும் தனது சகல இயலாமையையும் அடக்கி வைத்திருந்த தியாபானோ தனது மகன் மன்னராக வந்ததும் பொங்கி எழுந்தாள். தனது மகனையே தனது கைப்பொம்மையாக்கி பல நடவடிக்கைகளை மேற்கொண்டாள்.

அவற்றுள் முதலாவது தனது காதலனான இணை ஆட்சி நடாத்திய போகாஸை கொலை செய்து இணை ஆட்சியினைக் கைப்பற்றிய ஸிமிஸ்க்கெஸ்ஸையும் அவனது காதலியான லிம்டாவையும் கைது செய்து சிறையில் அடைத்தாள். விசாரணை என்ற பெயரில் லிம்டாவும் ஸிமிஸ்க்கெஸ்ஸும் நிர்வாணமாக்கப்பட்டு, மோசமாக அவமானப்படுத்தப்பட்டு, கொடூர சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டு மரணமானார்கள்.

இவ்வாறு பழிவாங்குதலில் மோசமாக இருந்தாலும் தனது மகனின் ஆட்சியில் தலையிட்டு பைஸாண்டைன் தேசத்தில் சிறந்த ஆட்சியினை வழங்கினாள். கி.பி.1002ஆம் ஆண்டு தானே இராணுவ ஆலோசகராக மாறிய தியாபானோவின் வழி நடத்துதலில் பைஸாண்டைன் இராணுவம் பல்கேரியாவினைக் கைப்பற்றியதாக வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

தனது பேரப்பிள்ளைகளை மட்டுமல்ல பூட்டப்பிள்ளைகளையும் கண்டே தியாபானோ ராணி காலமானதாக வரலாறு கூறுகின்றது.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## ஜனநாயக வழிக்குப் புலிகள் திரும்ப வேண்டும் -அமிர் கோரிக்கை

**1988ஆம்** ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. வடக்கில் 36 பேர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டதால் கிழக்கில் மட்டுமே தேர்தலை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இத் தேர்தல் தமிழர்களுக்கும் முஸ்லிங்களுக்குமிடையிலான ஒரு போட்டியாகத்திகழ்ந்தது. முஸ்லிம்கள் தேர்தல்களில் வெற்றி பெறுவதைத் தடுப்பதற்காக தமிழர்கள் பெருமளவில் வாக்களித்தனர். சுமார் 576 வாக்குச் சாவடிகளில் பணி புரிவதற்கென இருபதாயிரத்திற்கும் சற்றுக் குறைவான அரசாங்க ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். புலிகள் இயக்கம் விடுத்த




மிரட்டல் காரணமாக வாக்குச் சாவடிகளில் பணிபுரிவதற்கென்று ஊழியர்கள் வரத் தயங்கினர். இதனால் தேர்தல் கடமைகளில் ஈடுபட இந்திய அமைதிப் படையினரும் இந்திய அதிகாரிகள் சிலரும் பயன்படுத்தப்பட்டனர். கிழக்கிலிருந்த 576 வாக்குச் சாவடிகளில் 326 மட்டுமே இயங்கின. சில வாக்குச் சாவடிகளில் ஒரு அதிகாரி மட்டுமே பணிபுரிந்தார். கிட்டத்தட்ட 5,34,306 வாக்காளர்களில் 3,99,066 பேரே வாக்களித்தனர். ஆள்மாறாட்டம், கள்ள வாக்குப் பதிவு செய்தல் போன்ற தேர்தல் மோசடிகள் பெருமளவு இடம் பெற்றதாகச் செய்திகள் வெளிவந்தன.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் ஈ.என்.டி.எல்.எப். பெரும்பாலான ஆசனங்களைக் கைப்பற்றியது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டது. கிழக்கு மாகாணத்தில் மொத்தம் 35 ஆசனங்களில் 17ஐ முஸ்லிம் காங்கிரஸ் தனதாக்கிக் கொண்டது. ஐ.தே.க.வுக்கு ஒரு ஆசனம் மட்டுமே கிடைத்தது. ஈ.பி.ஆர்.எல்.எப்.12 ஆசனங்களையும் ஈ.என்.டி. எல்.எப். 5 ஆசனங்களையும் கைப்பற்றிக் கொண்டன. முழு வடக்குக் கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எப்.க்கு 41 ஆசனங்கள் கிட்டியிருந்தன. ஈ.என்.டி.எல்.எப்.புக்கு 12உம் முஸ்லிம் காங்கிரஸுக்கு 17உம் கிடைத்திருந்தன. தேர்தல் முடிந்ததுமே வடக்கு, கிழக்கு மாகாணத்தின் தலைநகராக திருகோணமலை விளங்க வேண்டுமென்று ஈ.பி.ஆர்.எல்.எப். வலியுறுத்தியது. திருகோணமலையில் இயற்கைத் துறைமுகம் அமைந்திருந்ததால் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் தலைமையகம் அங்கு அமைவதை இலங்கை அரசு விரும்பவில்லை. திருகோணமலையில் சிங்களவர்களைக் குடியேற்றும் திட்டத்திற்கு வடக்கு, கிழக்கு மாகாண சபை எதிர்ப்புத் தெரிவிக்குமென்பதால், அப்பொழுது ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அதனை விரும்பவில்லை. இருந்தாலும் இறுதியில் இப் பிரச்சினையில் ஈ.பி.ஆர்.எல்.எப். வெற்றி கண்டது. திருகோணமலையைத் தலைநகராகக் கொண்டு வடக்கு, கிழக்கு மாகாண சபை இயங்கியது. வரதராஜப் பெருமாள் முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். நிதியமைச்சராக பெ.கிருபாகரனும் கூட்டுறவுத்துறை அமைச்சராக கணேசலிங்கமும் நியமிக்கப்பட்டனர். அபு யூசுப், தயான் ஜெயதிலக ஆகியோர்களும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். தயான் ஜெயதிலக பின்னர் அமைச்சுப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்.

அப்போது இலங்கை மத்திய அரசின் பிரதி நீதியமைச்சராகப் பணியாற்றி வந்த ஷெல்டன் ரணராஜா என்பவரை வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநராக நியமிப்பதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா திட்டமிட்டிருந்தார். ஆனால் ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறவிருந்ததால் அந்த எண்ணத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தனா மாற்றிக் கொண்டார். முன்னாள் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனிவிரத்ன ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் வடக்கு, கிழக்கு மாகாண சபையை வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

**(அரசியல் தொடர்)**

1988ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பத்தாம் திகதி வடக்கு - கிழக்கைத் தற்காலிகமாக இணைக்கும் பிரகடனத்தை இலங்கை அரசாங்கம் வெளியிட்டிருந்தது. வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலையடுத்து, 1988ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதை இலங்கையின் அரசியல் யாப்புத் தடை செய்கின்ற காரணத்தால் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போட்டியிடவில்லை. பிரதமர் ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியினால் நியமிக்கப்பட்டார். ஸ்ரீ லங்கா மகாஜனக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஒசி அபேகுணசேகரவைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரித்தது. புலிகள் இயக்கத்துடனும் ஏனைய தமிழீழக் குழுக்களுடனும் தமிழகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் சென்று பேச்சுவார்த்தை நடத்திய அமரர் விஜய குமாரதுங்காவின் கட்சியே ஸ்ரீலங்கா மகாஜனக் கட்சி. அவர் ஜே.வி.பி.யினரால் கொல்லப்பட்டதையடுத்து ஒசி அபேகுணசேகரா ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டார். "மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒசி அபேகுணசேகர மட்டுமே சமத்துவம், நீதி ஆகியவற்றின் அடிப்படையில் சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையில் சமாதானத்தை ஊக்குவிக்க முனைந்தவர். இந்த இரு இன மக்களுக்குமிடையில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அமரர் விஜய குமாரதுங்கா ஆற்றிய அரசியல் நடவடிக்கைகளைக் கையேற்றுள்ளவர் இவர். இந்த ஜனநாயக வழிமுறைகளை மீள ஊக்குவிக்கும் முகமாக கொள்கை அடிப்படையில் வாக்களிக்க வேண்டிய கடப்பாடு தமிழ் பேசும் மக்களுக்கு உண்டு. எனவே அபேகுணசேகராவுக்கு வாக்களித்து சமாதானத்துக்காகப் பாடுபடும் உண்மையான சக்திகளை பலப்படுத்துமாறு தமிழ் பேசும் மக்களை தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுக்கொள்கிறது" என்று அமிர்தலிங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தார். ஐ.தே.க. வேட்பாளரான ரணசிங்க பிரேமதாசா வெற்றி பெற்று ஜனாதிபதியானார். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாதென்று புலிகள் இயக்கம் விடுத்த மிரட்டலையும் மீறி, தமிழ் மக்கள் பெருமளவில் வாக்களித்தனர். "இது உற்சாகம் தரும் அறிகுறி" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் வரவேற்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பிரேமதாசா டிசம்பர் மாதம் 25ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் குறித்து அறிவித்தார். 1989 பெப்ரவரி 15ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி, புலிகளின் கொலை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடத் தீர்மானித்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையில் கீழ் ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., ரெலோ ஆகிய தமிழ் இயக்கங்களும் இணைந்து போட்டியிடத் தீர்மானித்தன. அமிர்தலிங்கம் மட்டக்களப்பில் போட்டியிடத் தீர்மானித்தார். இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கைப் பிரிக்க எடுக்கப்படும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தி, தமிழர் தாயகத்தின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்துவதற்காகவே மட்டக்களப்பில் போட்டியிடுவதாக அமிர்தலிங்கம் அறிவித்தார்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**



1988 டிசம்பரில் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக அண்ணாமலை வரதராஜப் பெருமாள் பதவியேற்றுக் கொண்ட பின், கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் வாசஸ்தலத்தில் நடந்த வைபவமொன்றின் போது பிடிக்கப்பட்ட படம் . படத்தில் இடமிருந்து வலமாக அப்போதை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையில் அமைச்சராகப் பதவி வகித்த சௌமிய மூர்த்தி தொண்டமான், வரதராஜப் பெருமாள் , ரணில் விக்கிரமசிங்க.

"வடக்கு - கிழக்குக்குப் பூரண சுயாட்சி வழங்கப்பட்டு அங்கு தமிழர்களின் ஆதிக்கத்தின் கீழ் பாதுகாப்புப் படையொன்று நிறுவப்படும் வரை இந்திய அமைதிப்படை வாபஸ் பெற்றப்படக் கூடாது" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டு, அங்கு அரசு இயந்திரம் செயற்படத் தொடங்கும் வரை இந்திய அமைதிப் படையின் பிரசன்னம் அவசியமானதென்பதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடாகும். ஆனால் இந்திய அமைதிப்படை காலவரையறையின்றி இருப்பதைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரிக்கவில்லை.

மட்டக்களப்பில் போட்டியிட்ட அமிர்தலிங்கம் எதிர்பாராத விதமாகத் தேர்தலில் தோற்றுப் போனார். புலிகள் இயக்கத்தின் ஆசீர்வாதத்தோடு போட்டியிட்ட ஈரோஸும், ஈ.பி.ஆர்.எல்.எப்.பும் அதிக ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டன.

பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு புலிகள் இயக்கம் விடுத்த அறிவிப்பை அமிர்தலிங்கம் கடுமையாக எதிர்த்தார்." பகிஷ்கரிக்குமாறு கோருவது மோசமான செயலாகும். புலிகள் இயக்கம் அச்சுறுத்தல் விடுத்தாலும், மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனநாயக அரசியலிலிருந்து விலக மாட்டாது என்று அறிவித்த அமிர்தலிங்கம், புலிகள் இயக்கம் வன்செயலைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்துக்குத் திரும்ப வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இணைந்து போட்டியிட்ட நான்கு கட்சிக் கூட்டணி, அமிர்தலிங்கத்தைத் தேசியப் பட்டியல் எம்.பி.யாக நியமித்தது. ஈ.என்.டி.எல்.எப். அவரது பெயரைப் பிரேரிக்க, ரெலோ அதனை ஆதரித்தது.

(தொடர்ந்து வடியும்....)




பிரபாகரனின் உடலுக்குள் ஏதோ ஒரு சக்தி புகுந்திருப்பதாகவும் அதைக் கண்டு பிடிக்க வேண்டுமெனவும் ஸ்ரீதேவி கூறுகிறாள். அதற்கு திருமேனியைச் சந்தித்து விபரம் அறிய குமாரைப் போகச் சொல்கிறாள்.

விடிந்து வெகு நேரமாகி எழுந்த குமார் பிரபாகரனின் அம்மாவிடம் செல்கிறார். அவர் தம் மகன் பிரபாகரனைப் பற்றி கேட்கவே அவனைத் தான் தேடுவதாகக் கூறுகிறார். பின் காலை உணவைமுடித்துக் கொண்டு திருமேனியைச் சந்தித்து உரையாடுகிறார். ஹோமம் நடத்த ஏற்பாடு நடக்கிறது.

"**கொ**ஞ்சம் கஷ்டமான வேலைதான். இருந்தாலும் நான் முயற்சி செஞ்சு பார்க்கிறேன்." திருமேனி சுயமே பேசுவது போல் பேசிக் கொண்டார்.

தேவதத்தன் நம்பூதிரியின் யோசனைப்படி, பிரபாகரனது ஆத்மாவை வரவழைப்பதென்ற முடிவுக்கு வந்தார் குமார்.

அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் மிகவும் ரகசியமாக இல்லத்திலேயே மேற்கொள்ளப்பட்டன. எல்லா வேலைகளும் பகல் நேரத்திலேயே நிறைவேற்றப்பட்டன. அதற்கு வேறொரு காரணமும் இருந்தது.

இரவு நேரத்தில் ஹோமம் நடத்தினால் பிரபாகரனது உடம்பில் ஆவேசித்திருக்கிற கோவிந்தனால், அதை உணர்ந்து கொள்ள முடியும். அப்படியானால் அது ஜயந்தனுக்குத் தெரியவும் செய்யும்.

பகல் நேரம் என்பது கோவிந்தனைப் பொறுத்தவரை செயலற்ற- உயிரற்ற கால நேரம்.

மற்றொரு சிக்கலும் இருந்தது. பிரபாகரனின் ஆத்மாவை வரவழைத்தால் தற்காலிகமாக அது நுழைந்து கொள்வதற்கு ஏற்ற ஒருவனைக் கண்டுபிடிக்க வேண்டும். மந்திரத்தால் பக்குவப்படுத்தப்பட்ட ஒரு மனித உடம்புக்குள் இப்படிப்பட்ட ஆத்மாவைப் பிரவேசிக்கச் செய்யலாம்.

அதற்கேற்ற ஒருவரைக் கண்டுபிடித்து அவரிடமிருந்து சம்மதமும் பெற வேண்டும்.

குமார் தனது வீட்டின் பழைய காரியஸ்தராக இருந்த நாராயணன் நாயரை வரவழைத்தார்.

எழுபது வயதைத் தாண்டிய நாராயணன் நாயர் நம்பிக்கைக்கு உரியவரும்கூட.

அவரிடம் எல்லா விபரங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டால் பிரபாகரன் காணாமல் போனதை அவர் உணர்ந்து கொள்வார். அது வேறு ஏதாவது புதிய

**எழுதுவது**
**சிவன்**

பிரச்சினைகளைக் கிளப்பலாம். ஒரு சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியே இவற்றைச் செய்வதாகச் சொன்னார்கள்.

அவரோ, தனது சகோதரி மகள் ஜெயலட்சுமியை இதற்காகப் பரிந்துரை செய்தார்.

இருபத்தோரு வயதான ஜெயலட்சுமி கல்லூரி மாணவி. பி.ஏ. மூன்றாமாண்டு படிப்பவள்.

சிறு வயதிலிருந்தே அவள் இப்படிப்பட்ட மந்திர தந்திரங்களில் ஆர்வம் உள்ளவளாக இருந்தாள்.


எங்கே கோயில் கண்டாலும் வணங்கிவிட்டு வரும் இயல்பு கொண்டவள். மாந்திரீக விஷயங்களிலும், சுவடிகளிலும் ஈடுபாடு கொண்டவள்.

மாமா அவளிடம் விஷயத்தைச் சொன்னதும் அவள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள்.

முக்கியமாக ஹோமம் நடத்துவதை நேரடியாகப் பார்க்கலாமே என்பதுதான் அவளது மகிழ்ச்சிக்குக் காரணம். எனவே எந்தவிதமான மறுப்புமின்றி இந்த யோசனைக்கு ஒப்புக் கொண்டாள்.

"என்ன சொன்னாங்க?" - குமார் கேட்டார்.

சந்தோஷமா ஒப்புக்கிட்டாள். மத்த மனுஷங்களுக்கு எந்த வகையிலாவது உதவறதுன்னா அவளுக்கு ரொம்பவும் சந்தோஷம். போதாக்குறைக்கு மந்திரதந்திரங்கள்லயும் ஈடுபாடு இருக்கு. எல்லாத்துக்கும் மேலா இந்த மந்திர வித்தைப்



பிரயோகங்களை நேரடியாப் பார்க்கலாமேங்கிறது அவளோட ஆசை."

"ரொம்பவும் நல்லதாப் போச்சு, ஈடுபாடு இருந்தாலே இந்த மாதிரி விஷயங்கள்ல நமக்கு ரொம்பவும் ஒத்தாசையா இருப்பாங்க." - தேவதத்தன் நம்பூதிரி சொன்னார்.

மறுநாள் வெள்ளிக்கிழமையன்று இல்லத்தில் ஹோமம் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

நாராயணன் நாயர் அதற்குத் தேவையான பொருள்களை ரகசியமாகச் சேகரித்தார்.

"ஒரு விஷயம் ஞாபகம் வச்சுக்கங்க!" குமார் எச்சரித்தார்.

"சொல்லுங்க திருமேனி!" - நாராயணன் நாயர் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்டார்.

"நமக்கு இந்த விஷயத்துல சில எதிராளிங்க இருக்காங்க. நாம என்ன செய்யறோம்னு தெரிஞ்சுக்க அவங்க ரொம்பவும் ஆர்வமா இருப்பாங்க. வாயைத் திறக்கக் கூடாது- யார்கிட்டயும். விஷயம் ரொம்பவும் ரகசியமா இருக்கணும். இங்க கொண்டு வர்ற பொருளுங்களைப் பத்திக் கேட்டா, சமையலுக்காகன்னு சொல்லிடுங்க." - குமார் எச்சரித்தார்.

மறுநாள் காலையில் ஜெயலட்சுமியைக் கொண்டுவருவதாகச் சொல்லி நாராயணன் நாயர் புறப்பட்டார்.

இங்கு தயாராகிக் கொண்டிருந்த திட்டங்களைப்பற்றி சந்து நாயருக்கு எதுவும் தெரியவே இல்லை.

அன்று இரவு ஜயந்தன், தேங்காய் கோடவுனுக்குப் பிரபாகரனை வரவழைத்தார்.

"இன்றைக்கு நீ குமார் வேலை செய்யும் காலேஜுக்குப் போக வேண்டும். இன்னிக்குப் பௌர்ணமியானதால சில சமயம் எலும்புக்கூடு இல்லாமலேயே கோயில் பக்கத்துல அலைஞ்சுட்டிருக்கலாம். அப்படி இருந்தா அந்த எலும்புக்கூட்டைக் கொண்டு வர்றது சுலபம்." ஜயந்தன் கூறினார்.

"நீங்க சொல்றபடி தொல்லையில்லாம இருந்தா கண்டிப்பா கொண்டு வர்றேன்." பிரபாகரன் சம்மதித்தான்.

ஏறத்தாழ நள்ளிரவை நெருங்கும் சமயம் பிரபாகரன் காலேஜ் காம்பௌண்டை நெருங்கினான்.

கையிலிருந்த துண்டு பீடியை கடைசியாக நன்றாக உள்ளுக்கு இழுத்துச் சுண்டியெறிந்த பிறகு, காவல் கூண்டுக்குள் நுழைய முற்பட்டார் காவல்காரர்.

பிரபாகரன் மேலும் சற்று நேரம் அங்கேயே நின்றான்.

காவல்காரர் கண் மயங்கத் தொடங்கிய நேரம், பிரபாகரன் கேட்டைக் கடந்து உள்ளே நுழைந்தான்.

பிரதான கட்டடத்தின் வராந்தாவுக்கு வந்து தென்புறமாக நடந்தான்.

அங்குதான் மாடிப்படிக்குச் செல்லும் படிக்கட்டு இருந்தது. ஆள் நடமாட்டம் இல்லாத நேரமானதால், அங்கு விளக்குகளும் எரியாது. எனவே யாரும் தன்னைக் கவனிக்க மாட்டார்கள் என்றும் நினைத்தான்.

மாடியேறி வலது புறமாகத் திரும்பினால் சயன்ஸ் டிபார்ட்மெண்டை அடைந்துவிடலாம்.

ஆனால், மாடிப்படியின் அருகே சென்றதும் யாரோ ரகசியமாகப் பேசிக் கொள்ளும் சத்தம் கேட்டது.

"யாரோ வர்றாங்க" - ஒரு பெண்ணின் குரல்.

முன்பொரு தடவை அங்கு நடந்த சம்பவம் பிரபாகரனுக்கு ஞாபகம் வந்தது.

அவன் தயங்காமல் முன்னேறினான்.

அப்போதும் படிக்கட்டின் அருகிலிருந்து மூன்று பேர் அவனை நோக்கி வந்தனர்.


(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# வானம் வசப்படும்!

**சில** ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூர் சென்று இருந்தேன். அங்கே சந்தோஷா தீவுகள் என்று ஒரு சுற்றுலாத் தலம். அது ஒரு சாதாரண தீம் பார்க் மாதிரி தான். மாமல்லபுரம் மாதிரி சரித்திரப் பெருமை எதுவும் அதற்கு இல்லை.

அங்கே இருக்கும்



அத்தனையுமே செயற்கையாக வடிவமைக்கப்பட்டவை. டிராகன் என்கிற ஓர் உயிரினத்தை அங்கே விதம் விதமாக, வண்ண வண்ணமாக வடிவமைத்து வைத்திருந்தார்கள். டிராகன் என்பது பார்ப்பதற்கே அருவருப்பாக உள்ள ஒரு ஜந்து. நீள நீளமான நகங்கள், கோரமான பற்கள், மேடும் பள்ளமுமான உடம்பு... ஆனால், அதுகூட அந்த அற்புதமான சூழலில் அழகானதாகத் தெரிந்தது. பார்த்துப் பார்த்து ரசிக்கும்படி இருந்தது.

இதை ஏன் இங்கே சொல்கிறேன் என்று விளக்குவதற்குமுன் இன்னொரு உதாரணத்தையும் சொல்லிவிடுகிறேன்.

நட்சத்திர ஹோட்டலுக்குப் போகிறோம். அங்கே ஒரு டீயின் விலை நூறு ரூபாய். ஆனால், அதே தரமுள்ள டீ வீதியோரத்தில் இருக்கும் ஒரு சாதாரண டீக்கடையில் இரண்டு ரூபாய். ஏன் இந்த விலை வித்தியாசம்? ஸ்டார் ஹோட்டலில் இருக்கும் அழகு, ஆடம்பரம், அலங்காரம், சுத்தம்.... இதற்காகவே ஐம்பது மடங்கு அதிக விலை.

சுத்தம், அழகு, அலங்காரம்.... இவை மூன்றும் மிக மிக முக்கியம். சுத்தம் பற்றி யாரும் நமக்குப் பாடம் நடத்த வேண்டியதில்லை.

"சுத்தம் சோறு போடும், "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" - இப்படி எத்தனையோ பழமொழிகள் ஆண்டாண்டு காலமாக இருக்கின்றன. நமது முன்னோர்கள் சுத்தமாக இருப்பதையே கடவுள் வழிபாடாகக் கடைப்பிடித்தவர்கள். ஆனால் இன்றோ, டாய்லெட் போனால் தண்ணீரைப் பயன்படுத்திச் சுத்தம் செய்துகொள்ளத் தெரியாத நாட்டவர்களும், பாம்பு, பல்லி போன்றவற்றையெல்லாம் பச்சையாகவே சாப்பிடும் மக்களும் நம்மைப் பார்த்துச் சுத்தம் இல்லாதவர்கள் என எள்ளி நகையாடுகிறார்கள். எதனால் இந்த மாற்றம்? உலகின் கண்களுக்கு நாம் எப்படி திடீரென சுத்தம் இல்லாதவர்களாகப் போனோம்?

அன்பு, பாசம், குடும்பப் பாரம்பரியம், கலாசாரம், சரித்திரப் பெருமை, நீதி என அனைத்து விஷயங்களிலும் நம் நாடு மேலை நாடுகளைவிட மேலானது. ஆனால், அதை நாம் உணர்ந்திருக்கிறோமா? முதலில் நம்மை நாமே மதிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறோமா?

வீட்டையும், வீதியையும் சுத்தமாக வைத்துக் கொள்வது மட்டுமல்ல... பேசுவது, உடை அணியும் முறை, ஒரு பொது நிகழ்ச்சிக்குப் போனால் அங்கே நடந்துகொள்ளும் விதம் என எந்த ஒரு விஷயத்திலும் நாம் அலங்காரத்துக்கோ அழகுக்கோ முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

சமீபத்தில் ஒரு மிகப் பெரிய செல்வந்தர் வீட்டுத் திருமணத்துக்குச் சென்றிருந்தேன். அதில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் செல்வந்தர்கள் தான். என்றாலும், சாப்பாட்டு நேரத்தில் டைனிங் ஹோலுக்குப் போக அவர்கள் முட்டி மோதிய விதம் இருக்கிறதே, அப்பப்பா... பத்து நாள் பட்டினி கிடந்தவன் கூட அப்படி நடந்துகொள்ள மாட்டான்.


வீடு, வீதி, பேச்சு, நடை, உடை, பாவனை... என எல்லா விஷயங்களிலும் நாம் அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறினால் அதன் விளைவு என்ன ஆகும் தெரியுமா?

சமீபத்தில், மும்பையில் ஒரு விழாவுக்குச் சென்றிருந்தேன். அங்கே பிரபல இந்தி நடிகை மாதுரி தீட்சித் வந்திருந்தார். அவரைப் பார்த்ததும் பெண்கள் அத்தனை பேரும் அவரை நோக்கி முட்டி மோதி ஓடி, அவரை மொய்த்துக் கொண்டார்கள். அவர் ரொம்பவும் அழகாக இருப்பதாகச் சொல்லிப் பரவசப்பட்டார்கள். மாதுரி தீட்சித் அந்த விழா அரங்கை விட்டு விலகும்வரை அந்தப் பெண்களின் கண்களுக்கு வேறு எதுவுமே தெரியவில்லை.

இதை எல்லாம் ஒரு ஓரமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நான் மனசுக்குள், "அட பெண்களே.... உங்களில் பல பேர் மாதுரி தீட்சித்தை விடவும் அழகாக இருக்கிறீர்களே! இது உங்களுக்குத் தெரியவில்லையே! மாதுரி தீட்சித் போல நீங்களும் உங்கள் மேனிக்கும் அழகுக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பராமரித்திருந்தால், உங்களுக்கு முன் அவர் எந்த மூலை?" என்று சொல்லிக் கொண்டேன்.

அமெரிக்கர்களின் பாரம்பரியத்தையும், கலாசாரத்தையும்விட நமது பாரம்பரியமும் கலாசாரமும் உயர்ந்தது. சிங்கப்பூரின் சந்தோஷா தீவுகளைவிட மாமல்லபுரம் சிறப்பானது. ஐந்து நட்சத்திர ஹோட்டலின் தேநீரைவிட தெருவோர டீக் கடையின் டீ சுவையானது. மாதுரி தீட்சித்தைவிடவும் எத்தனையோ அழகான பெண்கள் நம்மிடையே உண்டு. நமக்குத் தேவையெல்லாம் அவற்றுக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவமும், அதை மேலும் செழுமைப்படுத்திக் கொள்ளும் மனோபாவமும் தான்.

நம்மை நாமே வார்த்தைகளில், செயல்பாடுகளில், பழகும்



விதங்களில் அழகு படுத்திக் கொண்டோமானால், கவிஞர்கள் சொல்வது மாதிரி வானம் நம் வசப்படும். உலகில் இன்னமும் நாம் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நிற்க முடியும்.

(தொடர்ந்து வரும்.....)

## மின்சாரக் கதைகள்

- வழங்குவது றாஹில்

### உயிரில் பூத்தாய் நீ!

கடிகார இரு முட்களும் முத்தமிடும் நள்ளிரவு நேரம்.

நித்திரை என்னை ஆசீர்வதிக்கத் தயங்கியது.

செல்போன்' சிணுங்கியது.

'ஹலோ!' என்றேன்.

உன்
கண்கள் தருவாயா?
என்னை
நான் பார்ப்பதற்கு!

நீ ஒரு கவிதை சிந்தி குரல் நிறுத்தினாய்.

உன் காதலை என் இதயம் கண்டதிலிருந்து நான் தேனாக வடிந்து கொண்டிருந்தேன்.

ஒரு விடுமுறை நாளில் என் 'ஆபிஸ்' வந்தாய் நீ.

என் வயதை நீ தான் எனக்கு ஞாபகமூட்டினாய்.

என் மனதில் தீயும் மூட்டினாய்.

என்னுடைய இந்தப் பருவம் உனக்காகத் தரித்து நிற்கிறது - உன்னைச் சுமந்து கொள்வதற்காக!

என் நரம்புகளெல்லாம் வயலின் தந்திகளாகிவிட்டன - நீ வாசிப்பதற்காக!

உன் பார்வை பட்டதும் நான் ரோஜாவாக மாறுகிறேன்.

உன் குரல் கேட்டதும் ஆயிரம் மின்குமிழ்கள் என்னில் எரிகின்றன. ஏன்...? ஏன்...?? நீ விடை தரவா! விடையாக வா!!

எழுத்துக்களால் நீ ஒரு ரோஜா செய்து தந்து சென்றாய்.

உன் சுவாசம் கிடைக்காதா என்று புல்லாங்குழல்களே ஏங்கும் அழகி நீ!

நீ பார்வைகளால் நெருங்கினாய். வார்த்தைகளால் என்னை நெருக்கினாய். எழுத்துக்களால் என்னை நிறைத்தாய்.

'நீ எனக்காகப் படைத்த ரோஜா என் உயிர் வரை மணம் வீசுகிறது' என்று நான் என்னை உன்னிடம் அனுப்பினேன்.

நீ என் இதயத்தில் கவிதைகள் வளர்த்தாய். என் காதல் மிக அழகாக ஆனது.

விடியல் நேரத்தில் என் நித்திரை கலைப்பாய் - உன் கவிதையால்.

'என் விடியல்
உன்னிடம் இருக்கிறதுரூ
நீ விழித்தால்தான்
நான்
எழுந்து கொள்வேன்'
என்பாய்.

இப்படித்தான் இன்றும் நள்ளிரவில் நீ என்னைக் கவிதையால் அழகுபடுத்தினாய்.

அடுத்த பொழுதில் நீ என்னோடு பூங்காவில் வசித்தாய்.

'பேசு!' என்றேன்.

உன்னோடு வசிக்கின்ற விநாடிகள் மிகவும் சுவையானவை. என்னை சுவைக்க விடு! என்றாய்.

'...நான் மௌனம் ரசித்தேன் சில விநாடிகள்.'

'நான் ஒரு கவிதை சொல்லட்டுமா?' என்றேன்.

ஆச்சரியமாகப் பார்த்தாய் நீ.

'இம்...ம்..சொல்லு!' என்றாய்.

'நான்
உயிர் தந்தேன்ரூ
நீ வசிப்பதற்காக!
நீ
பாத்திரமாக இருந்தாய்
நான்
பாலாக வந்து
நிறைந்தேன்' என்றேன் நான்.

நீ எனக்கு ஒரு முத்தம் தந்தாய் - முதல் முறையாக!

நான் சொன்னேன் :

'கவிஞனாக இருக்கவே ஆசைப்படுகிறேன்' என்று. •

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 191க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

கு. வில்சன், இல. 54/2, மல்வத்த வீதி, தெஹிவளை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. செ. அரவிந்தன், பிரதான வீதி, மன்னார்.
2. வ. ரஞ்சன், எல்லை வீதி, மட்டக்களப்பு.
3. சு. பிரவீனா, உவர் மலை, திருகோணமலை.
4. அ. ஸாபிர் டீன், சொய்சாபுர வீதி, மொறட்டுவ.
5. தர்மலிங்கம், பேராதனை வீதி, கண்டி.
6. வஷிர், பார்க் வீதி, ஹட்டன்.
7. க. நிபூஷா, பெரியகடை மன்னார்.
8. அ. கீர்த்தனா, குருமண் காடு, வவுனியா.
9. கருப்பையா, கஹட்டகஸ்தெனியா, அனுராதபுரம்
10. க. கஜன், நல்லர் வீதி, யாழ்ப்பாணம்.

## குறுக்கெழுத்துப் போட்டி (193)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | ■ | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | 21 | ■ | ■ | ■ |
| ■ | 26 | ■ | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

1.திருக்குறளில் உள்ள அதிகாரங்களில் ஒன்று.
7.தாவரப் பகுதிகளில் இருந்து பெறப்படும் திரவப் பொருள் (திரும்பியுள்ளது).
10.யாகத்தில் சொரியப்படும் நெய்.
17.உலகம் என்பதன் ஒத்த கருத்து.
19.விஜய் நடித்த திரைப்படமொன்று (குழம்பியுள்ளது).
28.குதிரையின் உணவுகளில் விசேடமானது (திரும்பியுள்ளது.
31.காடு என்றும் பொருள்படும் (திரும்பியுள்ளது).
35.மாமிசம் அல்லது ஊன்.

**மேலிருந்து கீழ்**

01. கணிதத்தில். பயன்படுத்தப்படும் அமைப்பு முறை ஒன்று.
02. வீதி (தலைகீழ்)
04. நீண்ட ஆயுளுடைய உயிரினங்களில் இதுவும் ஒன்று (தலைகீழ்).
06. விடுகதை என்றும் கூறலாம்.
11. வெல்லம் என்றும் கூறலாம் (தலைகீழ்).
15. மருத்துவப் பரிசோதனைகளில் அதிகம் பயன்படுத்தப்படும் விலங்கு.
20. சிறந்த பின்னணிப் பாடகி (குழம்பியுள்ளது).
29. பறவைகள் அல்லது விளையாட்டுப் பொருளொன்று (தலைகீழ்).
30. பஞ்சமா பாதகங்களில் ஒன்று

## குறுக்கெழுத்துப் போட்டி 191 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தெ 1 | ன் 2 | ஜெ 3 | ரி 4 | யா 5 | ■ |
| ய் 7 | லொ 8 | ■ | ஷ 10 | வி 11 | ம் 12 |
| ல 13 | ■ | ம் 15 | ம 16 | ழு 17 | ல 18 |
| ம் 19 | ■ | ண 21 | ம் 22 | ன் 23 | சி 24 |
| ■ | ல் 26 | யு 27 | ■ | ■ | ■ |
| ■ | மா 32 | வ 33 | ட் 34 | டை 35 | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 14.11.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-193
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# ருக்மனியின் தியாகம்

ருக்மனியின் வீடு பெரியவீடல்ல. சிறு சதுர வீடுதான். பிள்ளைகள் படிக்க, படுக்க என்று மேலே பலகைகளால் அடித்த ஒரு தட்டுப்போட்டு மேலே ஏறிப்போக ஒரு படி ஏணியும் பலகைகளால் அமைத்திருந்தாள். அதுதான் அவர்களது மாடிவீடு. காலையில் பிள்ளைகள் இருந்ததால் தனது ஆதிக்கம் எடுபடாது என்று முத்தையனுக்குத் தெரியும். மனைவி ருக்மனியைப் பேச, அடிக்கத் தெம்பு வராது. மூத்தமகள் திலகாவுக்கு யோசித்துப்பார்த்துத் திருந்து. ஊகும். நீ திருந்தமாட்டாய். நான் செத்த பிறகுதான் திருந்துவாய் என்று தன் மனதிலுள்ளதைக் கொட்டித் தீர்த்துவிட்டுப் போய் மறைந்தாள். முத்தையனுக்கு அது உறைக்கவில்லை. எப்பவும் கேட்டுப் பழகிப் போன புராணம் தான். அந்தப் பேச்சால் அவன்



அவன் பயம். அவளுக்கு இப்போது வயது பதினைந்தாகிவிட்டது. அவன் தன் பிள்ளைகள் நான்கிலும் அளவு கடந்த பாசமுள்ளவன். முத்தையன் வந்ததும் அவனுக்குப் பாண், தேநீர் கொண்டு வந்து வைத்தாள். அவன் மனைவி ருக்மனி. அப்போது சாராயநெடி அவன் வாயிலிருந்து வீசியது. காலங்காத்தாலேயே குடிச்சிட்டியா? இப்படி வாயை நாறடித்துவிட்டுத் திங்க வந்துட்டியே. வெட்கமாயில்லையா உனக்கு? வளர்ந்த பொண்ணுகள் நாலு இருக்கு. அதுகளின் எதிர்காலத்தையேனும் வருத்தப்படவோ கோபப்படவோ இல்லை. துள்ளிக் குதிக்கவுமில்லை. குடிக்கப் பணம் இராவிடில் தான் கவலை அவனுக்கு.

சற்று நேரம் கழித்து அவனுடைய கூட்டாளி தவசி வந்ததும் அவனுடன் வெளியே புறப்பட்டுப் போனான். அவன் போனபின் ருக்மனியின் அண்ணன் கனகன் அவளைப் பார்க்க வந்தான். அவனைக்கண்ட ருக்மனிக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவனுக்குப் பிடித்த மதிய உணவுகளைத் தயார் செய்து அவனைக் குளிக்கச் சொல்லி, மத்தியான சாப்பாட்டைப் போட்டு நீண்டநேரம் அவனுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். பிறகு அங்கிருந்த கட்டிலில் அவன் வந்த களைப்பில் படுத்து அயர்ந்து தூங்கிவிட்டான். அவனுக்குத் தேயிலைக் கம்பனியொன்றில் நல்ல வேலை. நல்ல சம்பளமும் தான். தனது சகாவுடன் ஊர் சுற்றி விட்டு வந்த முத்தையன், வீடு வந்து சேர்ந்தான். வீட்டில் ஒரு மாற்றம் இருப்பதைக் கண்ட அவன், தன் மச்சான் தான் வந்திருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டான். கனகன் தீபாவளிக்கு ரெண்டு நாள் முன்னதாகவே விடுமுறையில் வந்து தங்கினான். தங்கை ருக்மனியையும் கூட்டிப்போய் கடையில் அவளுக்கும் பிள்ளைகளுக்கும் நவீன நாகரீக உடைகளும் முத்தையனுக்குச் சாரமும் வாங்கிக் கொடுத்தான். தீபாவளிச் செலவுக்கு அவளிடம் பணமும் கொடுத்தான்.

மறுநாள் தீபாவளி. காலையில் ருக்மனியும் பிள்ளைகளும் புத்தாடை அணிந்து கொண்டாடினர். முத்தையனும் புது சாரம் கட்டி கனகனுடன் பேசிக் கொண்டிருந்தான். தீபாவளிக்குக் கனகன் அவனுக்கும் பணம் கொடுத்தான். மதியம் சாப்பாடு முடிந்து ஓய்வெடுத்திருக்கும்போது முத்தையனின் கூட்டாளி தவசி அவனைக் கூட்டிக்கொண்டு வெளியே போனான். தீபாவளிக்கு மறுநாள் கனகனும் வேலைக்குப் புறப்பட்டான்.

தீபாவளி கலகலப்பு முடிந்து இரண்டு நாள் கழித்துப் பள்ளிக் கூடத்துக்குப் போகப் பிள்ளைகள் தயாரானார்கள். ருக்மனி வழமைபோல் அவர்களை அனுப்பி வைத்தாள். அன்று காலை தனது வழமைத் தொழிலான ஊர் சுற்றும் வேலையை முடித்துவிட்டுப் பகல் பத்து மணிபோல் முத்தையன் வீடு வந்து சேர்ந்தான். வந்ததும் மனைவியைத் தேடினான். அவள் வீட்டில் இல்லை. அவள் வெளியேயுள்ள குழாயடிக்குப் போய் மற்றப் பெண்களுடன் கதைத்தபடி பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருந்தாள்.

பலமுறை கூப்பிட்டும் அவள் வராததால் கோபத்துடன் குழாயடிக்குப் போனான் முத்தையன். கையில் வேலையாயிருக்கிறது தெரியவில்லையா? இப்ப உனக்கு என்ன வேணும் என்று அவனை நோக்கி ருக்மனி வந்தாள். இங்கே அதைச் சொல்ல முடியாது வா வீட்டுக்கு என்று அவளைக் கூட்டிப்போனான். இந்தா எனக்கு நூறு ரூபா கொடு என்றான். அதைக் கேட்டதும் ருக்மனி நாகமாகச் சீறினாள். தீபாவளிக்கு உனக்கும் அண்ணன் பணம் கொடுத்தாரே அது இருக்கே பிறகு எதற்குப் பணம் என்றதும், அது செலவாகிவிட்டது என்று மழுப்பினான். என்ன செலவு அப்படி. நீ அன்றைக்கு தீபாவளிக்குத் தவசியுடன் போய் சீட்டாடிப் பணத்தைத் தொலைத்துவிட்டது எனக்குத் தெரியும். இப்ப பணம் இல்லை தரமுடியாது என்று சொல்லவும் உன் அண்ணன் பணம் உனக்குத் தராமல் போகமாட்டான், இப்ப எனக்குப் பணம் வேண்டும் என்று கூற சண்டை முற்றியது. குழாயடியில் நின்ற பெண்களுக்கு இச்சத்தம் கேட்டது. ஆனாலும் கணவன் மனைவி சண்டை ருக்மனி வந்தபின் கேட்போம் என்று எண்ணினார்கள். சற்று நேரம் கழித்து அய்யோ என்று ருக்மனியின் அலறல் சத்தம் கேட்டது. அதைக் கேட்டதும் அவளின் சினேகிதிகள் அங்கு ஓடினார்கள். அங்கே ருக்மனி வயிற்றிலிருந்து இரத்தம் பீறிட கீழே விழுந்து துடித்துக் கொண்டிருந்தாள். அதைக் கண்டு பயந்த அவர்கள், ஊரில் உள்ளவர்களிடம் கூறியதும் கூட்டம் கூடியது. அவசரமாக அவளை விபத்துச் சேவைக்குக் கொண்டு போனார்கள். பொலிஸார் வாக்கு மூலம் கேட்டார்கள். கூட வந்த சிலர் முத்தையன்தான் கத்தியால் அவளைக் குத்தியதாகச் சொன்னார்கள். பொலிஸார் அவர்களைக் கொஞ்சம் பேசாதிருக்கச் சொல்லிவிட்டு ருக்மனியிடம் வாக்குமூலம் கேட்டார்கள். உன் கணவன் தானே உன்னைக் கத்தியால் குத்தியது என்று பொலிஸார் கேட்கவும், இல்லையில்லை அவர் குத்தவில்லை என்றதும் திடுக்கிட்டுப்போன பொலிஸார் அதைப் பதிவு செய்து அங்கிருந்து போனார்கள். அருகே நின்ற பெண்கள் என்னடி இப்படிச் சொல்லிவிட்டாய் பொலிஸுக்கு என்று கோபத்துடனும் ஆச்சரியமாகவும் அவளிடம் கேட்டார்கள்.

அதற்கு ருக்மனி அவர்களிடம், என் கணவன் மற்றவர்களைப் போல என்னையோ பிள்ளைகளையோ விட்டுப் போகவில்லை. வேறு பெண்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. என்னைவிட பிள்ளைகளிடம்தான் பாசம், பயம் அவருக்கு அதிகம். அவரை நான் காட்டிக் கொடுத்தால் பிள்ளைகளின் அதுவும் பெண்பிள்ளைகளின் கதி என்னாவது? யார் பார்ப்பார்கள். இனி அவர் திருந்துவார் என்று கூறி முடிக்கவும் ருக்மனியின் தலை சாய்ந்தது. இதுவரை மனைவியைச் சற்றும் மதிக்காத முத்தையன் அவளின் பேச்சைக் கேட்டபின் வாயிலும் வயிற்றிலும் அடித்து அலறிக்கூச்சலிட்டு அழுதான்.

(யாவும் கற்பனை)

**இவ்வாரச் சிறு கதைகள்**


# வாழும் காதல்

ப.திபியா,
சங்குவேலி.

கார்மேகக் கூந்தலை வாரிய வண்ணம் கடிகார முள்ளின் ஒவ்வொரு அசைவையும், தொலைபேசியையும் மாறி மாறி பார்த்தவண்ணமே சாம்பவி காத்திருந்தாள். அவளது நினைப்பிலெல்லாம் அவள் ஆசை நாயகன் மேனனின் ஓசையே ஒலித்துக் கொண்டிருந்தது.

தொலைபேசி மணி அடித்தது. அவள் காதருகே வைத்து அழைத்தது அவன் என புரிந்து கொண்டாள். அவனது வார்த்தைகள் வழமைபோல் அவளுக்கு இன்பமூட்டின என்ற போதிலும் அவன் பிரிவு அவள் உள்மனதிலேயே வலித்துக் கொண்டிருந்தது. அவனுடன் பேசி முடிந்ததும் அவள் பழைய நினைவுகளைப் புரட்டிப் பார்த்தாள். பள்ளிப் பருவத்தில் எல்லோரைப் போலவுமே காதல் வந்தது. இருவரும் சிரமப்படாமலேயே காதலை ஏற்றுக்கொண்டனர். அவர்கள் சேர்ந்த வேகத்திலேயே அவர்களது காதலும் பெற்றோர்களால் பிரிக்கப்பட்டது. சாம்பவி வீட்டார் பலமுறை கண்டித்தனர். ஏன் பாடசாலைக்கு அனுப்பாமலேயே அடித்துக் காதலை சித்திரவதை செய்ய முயன்றனர். அவளோ காதலைக் குழந்தை போல பாதுகாத்து மனதினிலேயே தாலாட்டி வந்தாள். மேனனோ இனியும் அவள் ஊரிலே இருந்தால் தன் காதலிக்கு கஷ்டம் வருமென அறிந்து காதலை இதயத்தில் சுமந்து கொண்டு கொழும்பு நோக்கிச் சென்றான். அங்கே அவன் மேற்படிப்பை தொடர்ந்தான். இருவரும் கல்வியைக் கருத்திற்கொண்டு எந்தவித தொடர்புமில்லாமல் வாழ்ந்தனர். கல்வியில் ஒரு நல்ல நிலையை இருவரும் அடைந்த பின் நண்பர்கள் மூலமாக தொடர்புகள் ஏற்பட்டது.

இதன் பயனாகத் தான் சாம்பவி, மேனனுடன் தொலைபேசியில் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் பெற்றோர்களோ இவர்களின் காதலைத் தாங்கள் முறியடித்து விட்டதாக எண்ணி சந்தோஷமாக இருக்கின்றனர். ஆனால் சாம்பவி -மேனனோ தம் காதலை யாருக்கும் தெரியாமலேயே மூன்று வருடங்களாக சுமந்து விட்டார்கள். சாம்பவி வீட்டில் பெண் பார்க்கும் படலம் ஆரம்பமாகிறது. எத்தனையோ ஜாதகம் பார்க்கிறார்கள் எதுவுமே சரியாக அமையவில்லை. அதே போல் மேனனது பெற்றோரும் தமது வீட்டிற்கு மருமகளை வரவேற்க காத்திருந்து புரோக்கரிடம் சொல்லி அனுப்பினார்கள். இறுதியிலே ஒரே புரோக்கரே இருவருக்கும் துணையைத் தேடினார். சாம்பவி



மேனனின் ஜாதகம் குறைவில்லாமல் எல்லாமே நல்லதாக பொருத்தமாக அமைந்திருந்தது. மேனனின் வீட்டில் அழகான பொண்ணு ஒருத்தி உங்கள் பையனுக்குப் பொருந்தியிருக்கென புரோக்கர் கூறியவுடனேயே மேனனின் தாயார் பெண் பார்க்க வருமாறு கொழும்பிலிருந்த மேனனை யாழ்ப்பாணம் அழைத்தாள். மேனனோ இஷ்டமில்லை என்றாலும் தன் காதலியை யாழ்ப்பாணம் வந்தால் பார்க்கலாம் என்பதற்காக சம்மதம் கூறினான். சாம்பவி வீட்டிலோ புரோக்கர் விஷயத்தைச் சொல்ல, மாப்பிள்ளை என்ன செய்கிறார் என சாம்பவியின் தந்தை கேட்க, கணினி பொறியியலாளர் என்றதும் பெண் பார்க்கச் சம்மதித்தனர். ஆனால் சாம்பவியோ இஷ்டமில்லாமல் பெண் பார்க்க வரும்போது தனது நிலையை மாப்பிள்ளையிடம் சொல்லி கல்யாணத்தை நிறுத்துவோம் என்ற முடிவுடன் இருந்தாள். மேனன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தான். இருவரும் சந்திக்கும் வாய்ப்பை அவர்களது நண்பர்கள் ஏற்படுத்திக் கொடுத்தனர். சாம்பவியோ தன்னைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வருவதாகவும் மேனனோ தான் பெண் பார்க்கப் போவதாகவும் சொல்லிக் கொள்ளவில்லை. ஏனெனின் இருவரது மனமும் சஞ்சலப்படும். தனித்தனியே பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வோம் என மனதினுள் தீர்மானித்திருந்தனர். கோவிலிலேயே பெண் பார்ப்பதாக முடிவு செய்திருந்தனர். மாப்பிள்ளை வீட்டார் வரும் வரை கோவிலில் பெண் வீட்டார் காத்திருந்தனர். அங்கு மாப்பிள்ளையாக வந்த மேனனைக் கண்டு சாம்பவி மட்டுமல்ல, சாம்பவி வீட்டாரே திகைத்து விட்டனர். உறவினர் முன் பழைய காதலைக் கூற முடியாமல் இரு வீட்டாரும் கதைத்து முடிவெடுத்து திருமண நாள் குறித்தனர். பள்ளிப் பருவத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத காதல் படித்து நல்ல நிலையில் உள்ளபோது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மொத்தத்தில் பெற்றவர்கள் காதலர்களை வெறுக்கவில்லை காதலைத்தான் வெறுக்கிறார்கள். பிள்ளைகளே காதலித்துக் கூட்டிவரும் போது பெற்றோர் மறுப்பு கூறிவிட்டு, எவனோ ஒரு புரோக்கர் காட்டுகையில் ஏன்தான் சம்மதம் கூறுகிறார்களோ தெரியவில்லை. சுவடு இல்லாமல் சென்றுவிடுமோ என்று எண்ணிய இந்தக் காதல், இன்று பெற்றோர்களாலேயே நிச்சயம் செய்யப்படுகிறது. மேனன் சாம்பவியோ இடையில் அவர்களிற்குத் தொடர்பு இல்லாததுபோல் புதிதாய் மீண்டும் பார்த்து கொள்கிறார்கள். மேனனோ மனதில் இருப்பவர்களே மனைவி ஆகப்போவதையும் சாம்பவியோ காதலித்தவனையே கைப்பிடிப்பதிலும் கிடைத்த பாக்கியத்தை எண்ணி சீரணி அம்மனை வேண்டி புது வாழ்வை எதிர்நோக்கி காத்துள்ளனர்.

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

"ஆற்றைக் கடக்குமட்டும் அண்ணன் தம்பி
ஆற்றைக் கடந்தபின் நீயாரோ நான் யாரோ"

என்ற பழமொழி அநேகருக்குத் தெரிந்ததுதான். ஆயினும், இது எத்துணை பொருத்தமானது என்பதைத் தத்துவரீதியாக விளக்க வேண்டுமாயின், வள்ளுவனைத் தேடிப் போகவேண்டியதில்லை. அவர் எமக்காக, எமது வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்பதற்காக, விட்டுச் சென்ற குறட்பாக்கள் இருக்கிறதே! அவற்றிலொன்று சொல்வதைக் கேட்போமா?

"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்"

*குறள் : 796*

கேடு வருவதிலும் ஒரு வகையான நன்மையும் உண்டு. அந்த நன்மை என்னவெனில், உண்மை நட்பினை அளவிடுவதற்கான கோலாக அமைந்து விடுவதால்,

ஒருவனுக்கு வாழ்வு வந்த காலத்தில் பழுத்த மரத்தில் வௌவால்கள் கூடுவது போல் கூடிக்குலவிக் கொண்டாடி நிற்பவர்கள், தாழ்வுற்ற வேளையில் தனிப்படுத்தித் தாழ்த்துவர். அந்த நிலையில், துன்பத்திலும் பங்கு கொண்டு நின்று, நட்புக்கு இலக்கணம் வகுப்பவரின் பெருந்தன்மையை அளப்பதற்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது போலாகுமல்லவா?

# மறக்குமா நெஞ்சு?

அவரும் என்னை விரும்பினால், எனக்கு மட்டுமல்ல அண்ணாவுக்கும் ஒரு நல்ல நண்பனும் நல்ல தளபதியும் கிடைத்தது போல் ஆகிவிடுமே என்ற எண்ணம் அவளை மேலும் உற்சாகப்படுத்தியது.

கீர்த்திவர்மனுக்காகவும், அவன் நண்பர்களுக்காகவும் ஒதுக்கப்பட்ட மாளிகையில் அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. இருந்தபோதும், அவனது எண்ணமெல்லாம் அங்கயற்கண்ணி



அவனைப் பார்த்த பார்வைக்கு அர்த்தம் காணுவதிலேயே அவன் கவனமெல்லாம் இருந்ததினால், அன்றைய இரவே அவனுக்குச் சவாலாக இருந்தது.

தருவது
கற்பகன்

பொழுது புலர்ந்ததும் விக்கிரமன் முதல்வேலையாகக் கீர்த்திவர்மனின் மாளிகையை நோக்கி நடந்து கொண்டிருந்ததைக் கவனித்துக் கொண்டிருந்த அங்கயற்கண்ணி, தன் தோழி கயல்விழியை அழைத்து, "கயல்விழி! எனக்கொரு உதவி செய்வாயா?" என்று கேட்டதும், "என்ன செய்யவேண்டும்?" என்று வினவினாள் கயல்விழி. "விருந்தினர் விடுதியில் தங்கி இருப்பவர்கள் எப்போது புறப்படுவார்கள் என்பதை அறிந்து வருவாயா?" என்றதும், கயல்விழியின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலும், மகிழ்ச்சிக்குறியும் அங்கயற்கண்ணியின் மனதில் ஓர் ஐயத்தை தோற்றுவித்தது. "என்ன இவள்! நான் எதற்குக் கேட்டேன் என்று கூட அறியாமல், ஏதோவெல்லாம் நினைக்கிறாள் போலிருக்கிறதே!" என்று நினைத்தவள், "என்ன செய்வாயா?" என்று கேட்டபோது, "சரியம்மா!" என்று கூறிவிட்டுத் திரும்பியபோது, "கயல்விழி!" என்றழைத்த அங்கயற்கண்ணியைத் திரும்பிப் பார்த்தாள், கயல்விழி "இது அண்ணாவுக்குத் தெரியவேண்டாம்" என்று அவள் கூறியதும், கயல்விழி தன்னுடைய ஊகம் சரிதான் என்பதை எண்ணி மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

விக்கிரமனைக் கண்டதும், "வா விக்கிரமா! உன்னைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று அன்பொழுக வரவேற்றான் கீர்த்திவர்மன்.

"என்ன கீர்த்திவர்மா! அதற்குள் புறப்பட்டுவிட்டாய் போலிருக்கிறதே!" என்றான் விக்கிரமன். "ஆமாம். ஒரு இரவு கழிந்ததே ஒரு வருடம் கழிந்தது போலிருக்கிறது!" என்றான் கீர்த்திவர்மன். "ஏன் உங்களுக்கு ஏதும் குறைவைத்துவிட்டார்களா?" என்று விக்கிரமன் கேட்டபோது, அவன் முகத்தில் தோன்றிய கலவரத்தைக் கண்ட கீர்த்திவர்மன், "அப்படியொன்றும் இல்லை. நான் அவசரமாகக் கவனிக்க வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கிறது என்றதைச் சொல்லவந்தேன்." என்று சிரித்தபடியே கூறியதும், "அப்பாடா! நானும் ஏதோ என்னவோவென்று கலங்கிப்போய்விட்டேன்" என்றான் விக்கிரமன் "விக்கிரமா! நான் புறப்படவேண்டும்" என்றதும், "என்ன அவசரம்? பயணக் களைப்புத் தீருமுன்பே புறப்படுகிறேன் என்கிறாயே! இன்று தங்கிவிட்டுப்போகலாமே!" என்ற விக்கிரமனை இடைமறித்த கீர்த்திவர்மன், "உன்னுடைய அன்புக்கு நன்றி. மீண்டுமொருமுறை இங்கு வரக்கிடைத்தால், ஒரு நாள் என்ன ஒரு மாதகாலம் வேண்டுமானாலும், தங்கிவிட்டுப் போகிறேன்" என்று கீர்த்திவர்மன் சொன்னதும், "உன் விருப்பம்" என்று விடை கொடுத்தான் விக்கிரமன்.

இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கயல்விழி, கீர்த்திவர்மன் புறப்பட்டுப் போகிறான் என்ற செய்தியை அங்கயற்கண்ணிக்குத் தெரிவித்தபோது, அவள் முகம் அந்தி வெய்யில் சருகான செண்பகமலராவதை கவனிக்கத் தவறவில்லை. ஆயினும், அந்த நிலையில் அவளால் எதுவும் கூற முடியவில்லை.

செய்தி கேட்ட மாத்திரத்திலேயே உப்பரிகையை நோக்கி நடக்கத் தொடங்கினாள் அங்கயற்கண்ணி. கீர்த்திவர்மன் கோட்டையை விட்டு வெளியேறுவதாயின், உப்பரிகையை அண்டிய பாதையாற்தான் வெளியேற வேண்டும் என்பதால், அவன் வரவுக்காகக் காத்திருக்க நினைத்தாள் போலும்.

கீர்த்திவர்மனும் அவன் தோழர்களும் வருவதைக் கண்ட அங்கயற்கண்ணியின் நெஞ்சுக்குள் ஏதோ இனந்தெரியாததோர் படபடப்பு. இனியும் அவனைச் சந்திக்கும் வாய்ப்பு அற்றுவிடுமோ என்ற எண்ணம் மேலோங்கி நிற்பதே அதற்குக் காரணம் என்று கூடச் சொல்லலாம்.

அவன், அவள் நின்ற இடத்தைக் கடந்து செல்லும் பொழுது அவள் முகத்தில் எவ்வித மாறுதலையும் அவளால் காண முடியவில்லை. முதல் நாள் அவள் அவன் முகத்தில் கண்ட உற்சாகத்தோடு அவன் தன் புரவியில் அமர்ந்து செல்வதை அவள் பார்த்த போது மேலும், அவள் மனதில் ஏக்கம் குடிகொண்டிருந்ததை யாரும் அவதானித்ததாக இல்லை. கோட்டையை விட்டுத் தாண்டியதும், கீர்த்திவர்மனின் புரவி படுவேகமாகச் சென்று மறைந்த போது, அங்கயற்கண்ணியின் முகத்திலும் இருள் சூழத் தொடங்கியது.

*"துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்றுபவர்."*

அதிகாரம் : 117
குறள் : 1165

## சிந்தியா பதில்கள்

**சிந்தியா இறுதிப் போர் என்கிறார்களே யாருக்கு? புலிகளுக்கா? மக்களுக்கா? அரசாங்கத்துக்கா?**

*- வி. கணேஸ்வரன், முள்ளிப்பொத்தானை.*

உங்கள் பட்டியலில் யாருக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்குத்தான். கேள்வியைத் திரும்பவும் வாசியுங்கள்.

**மினி உலகப் போட்டிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*- P. வசந்தன், தெதுரு ஓயா.*

எல்லா அணிகளுமே வெற்றி தோல்விகளைச் சந்தித்தன. அது கிரிக்கெட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் குறிக்கின்றன. அவுஸ்திரேலியா தன் நீண்ட நாள் கனவை நிறைவேற்றிக் கொண்டது. அணிகளிடம் காணப்படும் உத்வேகம், 2007ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டிகளை விறுவிறுப்பாக்கும் என்று காட்டுகிறது. தற்போதைக்கு கிரிக்கெட்டில் உலகச் சாம்பியனும், மினி உலகச் சாம்பியனும் அவுஸ்திரேலியா என்பதுதான் ஹைலைட்.

**இலங்கையிலிருந்து அகதியாகப் போன மாணவர்களுக்கு இந்தியாவிலேயே க.பொ. த. சாதாரண தரப்பரீட்சையை நடத்த இலங்கை அரசு யோசித்திருப்பது சரியா?**


*- சா. வைதீஸ்வரன், பட்டித்திடல்.*

இடப்பெயர்வே வாழ்க்கையாகிப் போன நம்மவர்க்காக அரசு எடுத்த இந்த முடிவு முதல் தடவையாகவுள்ளது. மாணவர்களுக்கு புத்தகம், ஏனைய வசதிகள், என்பன வசதியாக இருக்காது. இதற்கு ஏதாவது ஒழுங்கு செய்தால், பிள்ளைகளுக்கு உதவியாக இருக்கும். இந்த மாணவர்களுக்குக் கூடவே இடம் பெயர்ந்திருக்கும் ஆசிரியர்கள் தாராளமாக உதவலாம். அரசு அதை ஊக்குவித்தால் நல்லது.

**சதாம் ஹுசைனுக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கிய தற்போதைய ஈராக் அரசும், நீதியும் சரியா?**

*- எம். பி. அன்சார், ஓட்டமாவடி.*

'உத்தமர்கள் மட்டும் விபசாரி மீது கல் எடுத்து வீசுங்கள்' என்று யேசுநாதர் கூறிய போது, எவருமே கல்வீசியடிக்கவில்லை என்று படித்த ஞாபகம் வருகிறது. சதாம் செய்தது கொலை. அதற்காக அவரை அப்புறப்படுத்திய பிறகு ஈராக் புனித பூமியாகிவிட்டதா? சதாம் காலத்தை விட இப்போது தானே கொலையும் இரத்தமுமாக ஈராக் சிதைந்து போயிருக்கிறது. இதற்காக யாரை யார் விசாரிப்பது? யாரை தூக்கிலிடுவது? முஸ்லிம்களை இருகூறாக இந்தத் தீர்ப்பு பிரித்துப் போட்டுள்ளதே, இது ஏற்கக் கூடியதுதானா? சதாமை தூக்கிலிடுவது முழு ஈராக் மக்களுக்கும் ஏற்புடையதுதானா? யாரைத் திருப்திப்படுத்தும் தீர்ப்பு இது? சதாமை நேசிக்கும் ஸுன்னி இன முஸ்லிம்கள் இஸ்லாம் தேசத்தின் விரோதிகளா? அத்தனை பேரையும் தூக்கிலிடப் போகிறார்களா? பாப்பரசர் கூறியது போல் ஒரு கொலைக்கு இன்னொரு கொலை சரியாகிவிடுமா? என்ற கேள்விதான் என்னுடைய கேள்வியும். குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். அதற்கான தீர்ப்புகள் ஏற்கக்கூடியதாகவும், நியாயமானதாகவும் இருக்க வேண்டும். ஏகாதிபத்தியவாதிகளைத் திருப்திப்படுத்துவதாகவோ, மீண்டும் இரத்த ஆறு ஓடச் செய்வதாகவோ, சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டோ இருக்கக்கூடாது. சதாம் விஷயத்தில் இந்த துரதிஷ்டம் அத்தனையும் உண்டு. சதாமுக்குத் தூக்குத் தண்டனை சரியென்று கருதினால், அவருக்குக் கொஞ்சமும் குறைவில்லாமல் படுகொலைகளையும், வன்முறைகளையும், ஆக்கிரமிப்புக்களையும் செய்து கொண்டிருக்கும் பலரை சதாமுக்கு முன்பாகத் தூக்கிலிடவேண்டும். இதற்கு அமெரிக்காவின் பதில் என்ன?



அபிஷேக் பச்சான் – ஐஸ்வர்யா ராய்
திரு படப்பிடிப்பில்

**ஒரு மனிதனுக்கு கர்வம், ஆணவம் எல்லாம் இருப்பது அவரின் மரியாதையைக் குறைக்குமல்லவா?**

*- மோ. திரிலோகநாயகி, பண்டாரவளை.*

'அப்படித்தான்' என்று சொல்லிவிட முடியவில்லை. எழுத்தாளர் ஜெயகாந்தனிடம் அதைப் பற்றிக் கேட்டபோது, அவர் சொன்ன பதில் நியாயமாகத்தான் இருக்கிறது?

**கேள்வி:** ஜெயகாந்தனுக்கு கர்வம், ஆணவம், அகங்காரம் அதிகம் என்கிறார்களே?

ஜெயகாந்தன் : மனுஷன் என்றால் எல்லாம் இருக்கும். யாருக்கு இல்லை இங்கே கர்வம், ஆணவம்? ஏன் உங்களுக்கு இல்லையா? இருப்பதால்தானே எனக்கு அகங்காரம் என்று என்னிடமே சொல்கிறீர்கள். அடுத்தவர்களுக்காக என்னால் வாழ முடியாது. நான் எனக்காக வாழ்கிறேன், நீங்கள் உங்களுக்காக வாழுங்கள் என்று முகத்தில் அடித்தாற் போல் சொன்னால், வெளிப்படும் படியாக இல்லாவிட்டாலும், ஒவ்வொருவரிடமும் எல்லாத்திலும் கொஞ்சம் இருக்கத்தான் செய்கிறது.

**'சிக்கன் குனியா'வை நினைத்தாலே பயமாக இருக்கிறதே. நீர் என்ன தற்காப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறீர்?**

*- பா. முருகையன், மன்னார்.*

'பஞ்சத்திற்குப் பயந்து பரதேசம் போனானாம்' என்பார்கள். நுளம்புக்குப் பயந்து நாம் எங்குதான் போவது? நுளம்பு வலைக்குள் நான் தான் அகப்பட்ட மாதிரி தூங்குகிறேன். 'மவனே வலைக்குள்ளயா தூங்குற? விடியட்டும் வெளியில வருவ அப்ப கவனிச்சுக்கிறேன்' என்று நுளம்புகள் கோபமாக உறுமுவது கேட்கிறது. 'மொஸ்கிட்டோ குனியா' என்று வைக்கவேண்டிய பெயரை, ஏன் 'சிக்கன் குனியா' என்று வைத்தார்கள் என்றுதான் தெரியவில்லை. நல்ல வேளை கோழிகளுக்கு விஷயம் தெரியாது.

**சாத்திரம், சம்பிரதாயங்களில் சிந்தியாவுக்கு நம்பிக்கை உண்டா?**

*- வி. சர்மிளன், தெமட்டகொடை.*

எனக்கு நம்பிக்கை இருக்கிறதா? இல்லையா? என்பது ஒருபுறமிருக்கட்டும். நம்பிக்கை இருப்பவர்களுக்கு இதுவரை இருந்த ஒன்பது கிரகங்களில் இப்போது ஒன்று இல்லையே, அதற்கு என்ன செய்யப் போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் ஆர்வமாக இருக்கிறது. கோயில்களில் நவக்கிரகங்கள் இன்னும் இருக்கின்றன. இந்தக் குழப்பத்தை யாராவது தீர்த்து வைத்தால் நல்லது.

**அண்மையில் ஏ-9 பாதை திறக்கப்பட்டதாக யாழ்ப்பாணத்தில் ஒரு வதந்தி பரவியதையடுத்து பொருட்களின் விலை சடுதியாகக் குறைந்ததாமே?**

*- வை. ஜெனிற்றா, தெஹிவளை.*

பதுக்கப்பட்ட பொருட்களை வெளியில் எடுப்பதற்காக யாரோ பரப்பிய வதந்தி அது. அரசாங்க அதிகாரியின் கருத்துப்படி, போதிய பொருட்கள் யாழ்ப்பாணத்தில் கையிருப்பில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். சில சமயம் பொருட்களுக்குத் தட்டுப்பாடு என்கிறார்கள். இரண்டு பக்க வாசிப்பின் எதிரொலியாகத் தெரிகிறது.

**தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் அடுத்து என்ன வகையாகப் போராடினால் அரசினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்க்கலாம்?**

*- என். சிவராஜா, செட்டிக்குளம்.*

எந்தப் பதவிகளைக் கொண்டு எதுவுமே செய்ய முடியவில்லையோ, அப்படி ஒரு மரியாதை தராத பதவியை ஒரே சந்தர்ப்பத்தில் தூக்கி எறிந்துவிடுவதுதான் அரசுக்கு அதிர்ச்சி வைத்தியமாக இருக்கும். தமிழ் மக்களின் துர்ப்பாக்கியம், பதவிகளைத் துறக்க கூட்டமைப்பில் எவரும் விரும்பப் போவதில்லை. 'அவர்களைப் பொறுத்தவரை' எம்.பி.பதவி ஒரு போர்த் தேங்காய். அதை உருட்டிக் கொண்டு திரிகிறார்கள். இதை யார் கண்டு கொள்வார்கள்!


**சிந்தியா! என் கனவு நாயகி ஐஸ்வர்யாராய் திருமணம் முடிக்கப் போகிறாராமே?**

*- எம். எச். றியாஷ், பேருவளை.*

அபிஷேக் பச்சானுக்கும், ஐஸுக்கும் விரைவில் திருமணம் நடக்கப் போவதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. 'ஐஸ்' உங்களுக்கு மட்டுமா கனவு நாயகி? பலரின் கனவைக் கெடுத்த நாயகியும் அவர்தான். அபிஷேக்கின் நினைவு நாயகிப் போனவரை இனியும் கனவுக்குள் அனுமதிக்காதீர்கள். இதுவரை அவர் ஆக்கிரமித்த அத்தனை கனவுகளும் ஒரு கெட்ட கனவாக மறக்கப்படவேண்டியவை. உங்களுக்கும், ஐஸைக் கனவு நாயகியாகக் கொண்டிருந்தவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்.

# ஓராண்டு நினைவுகளில்...

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 09 | | 13 |
| 10 | | 11 |
| 1970 | | 2005 |



## வெள்ளைப் பொடியன் இராசநாயகம்

### தோழர் இராசநாயகம்

இனிமையான பேச்சு, அன்பு நிறைந்த பழக்கம்
எதிரிகள் அஞ்சிய நிறைந்த உறுதி
இவைதானே தோழனே உன் அடையாளங்கள்!
உன் உடலை அழித்த கோழைப் புலிகளால்
உன் அடையாளங்களை அழிக்க முடியாமல்
தோற்றுப் போனார்கள்.
உன்னைப் பிரிந்த ஓராண்டு
நினைவுகளில் ஈர விழிகளோடு
நாங்கள்.

*உன் நினைவுகளுடன்,*
- தோழர்கள், நண்பர்கள்,
உறவினர்கள்.

## கடல்...

*06 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

வாழ்த்திக் கொண்டிருக்கிறது. அலைகள் கரையில் வந்து அறைந்து விட்டுப் போவது கடலின் உயிர்ப்பையும், கடல் கொண்டிருக்கும் மிக இறுக்கமான கட்டுப்பாட்டையும் ஞாபகப்படுத்துவதற்காகத்தான்.

**"கடலே உன் கரையில் இத்தனை**
**நாளும் கிழிஞ்சல்கள் தானே**
**பொறுக்கினோம்**
**இப்போது பிணங்களைப்**
**பொறுக்குகிறோமே"**

என்ற கவிப் பேரரசு வைரமுத்துவின் கவிதை வரிகளும்,

**"அலையே நீ எங்கள் கடவுளென்று**
**தரையின் தலையிலடித்து சத்தியம்**
**செய்கிறாய் என்று தானே**
**நினைத்தோம்.**
**அது எங்களைப் பழிவாங்க நீ பார்த்த**
**ஒத்திகையா"**

என்று நம்மவர் திருமலை தாமரை மகன் எழுதிய கவிதையும் சுனாமியின் கோரத்தாண்டவத்தையும் அது தந்த வலிகளையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன. இந்த வரிகள் வேதனையானதுதான். என்ன செய்வது தொழில் தந்தது கடல், பாதுகாப்புத் தந்தது கடல். அதையெல்லாம் மறந்து சாபமிட முடியுமா. நம்மை மீறிய சக்தியாக கடல் இருக்கிறதே. கடலுக்கு கணக்கிடமுடியாத கைகள் இருக்கின்றனவே. நாம் சண்டை போடவா முடியும். கடல் நீரெல்லாம் சீமெந்துக் கலவை போல் இறுகி, சம தரையானால் பக்கத்து நாடுகளுக்கும் - பார்க்க வேண்டிய நாடுகளுக்கும் கால் நடையாகவே போய் விடலாம் என்ற எதிர்பார்ப்புக் கூட மனிதனுக்கு உண்டு. கடல் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. கடலுக்குள் சுனாமி வந்து அள்ளிக் கொண்டு போன மக்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். புகையிரதம், கார், கப்பல் என்று எல்லாமுமே தன் தன் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும். படகுப் பயணங்களின் போது கடலில் பலியாகிப் போனவர்களின் உடல்கள் கரையொதுங்கினவே தவிர, ஆத்மா இன்னும் கடலோடுதான் கலந்து கிடக்கிறது. பறித்துக் கொண்டது, பலிகொண்டது, இழுத்துக் கொண்டது என்றெல்லாம் கடலைத் திட்டினாலும், கடலை நம்பித்தான் வாழவேண்டியிருக்கிறது. கடலைப் பற்றி எழுதும் போது அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கும் இன்னொரு செய்தி, புருவம் உயர்த்த வைக்கிறது. கடலின் வெப்பம் அதிகரிப்பதும், கழிவுகள் மிக அதிகளவில் கொட்டப்படுவதுமானது, கடல் வாழ் உயிரினங்களை அழித்து விடுமென்றும், 2048 ஆம் ஆண்டு மீன்கள் முற்றாக அழிந்து விடும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். நாம் சிந்திக்க வேண்டும்! நாம் செய்யும் ஒவ்வொரு முட்டாள் தனத்துக்கும் வினையாக பெறுமதி மிகுந்த நமது சொத்துக்களை இழந்து கொண்டிருக்கிறோம். இன்னும் 42 வருடங்களிற்குப் பிறகு, மீன் உணவுக்காக ஏங்கும் நிலை ஏற்படலாம். நமது பிள்ளைகள் மீனைத் தெரியாமல் வாழப்போகிறார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். சாக்கடைகள் ஓடியா கடல் மாசடைகிறது? என்று மட்டும் நினைத்துவிடக்கூடாது. அணு உலைகளைக் கொண்டிருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து போன்ற நாடுகள் தமது யுரேனியக் கழிவை கடலுக்கு அடியில் புதைக்கின்றன. ஆனாலும், யுரேனியக் கழிவுகள் சிந்தி மீனின் உணவாகும் போது மீன்களின் நிறமூர்த்தங்கள் (DNA) விகாரமடைந்து மீன் இனம் இன்னொரு வளர்ச்சியை அடையும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எப்படிப் பார்த்தாலும் மனிதனுக்கு மனிதன் தான் எதிரியாகிறான்!

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 7, கூட்டெண் - 7

7, 16, 25 போன்ற திகதியில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7 வருமேயானால், இவர்கள் முழுமையாக கேது ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

பார்ப்பதற்கு ஓரளவிற்கு உயரமாகத் தோற்றமளிக்கும் இவர்கள் முகம் பொலிவிழந்தது போன்றும், சிந்தனையில் மூழ்கிக் கிடப்பது போன்றும் காட்சியளிக்கும். தனக்கு ஏற்படும் பிரச்சினைகள் யாவையும் பிறரிடம் வெளியிடாது, தனது மனதில் புதைத்துக் கொண்டு, கவலைப்பட்டுக் கொண்டிருப்பர். தூய்மையான எண்ணம் கொண்ட இவர்கள், எளிமையான ஆடை அணிந்திருந்தாலும், சுத்தமாக இருப்பர்.

கேள்வி ஞானம் கொண்ட இவர்களைத் தெய்வீக மனிதர் என்றால் மிகையாகாது. தனக்கு வாழ்க்கை சரியாக அமையாது வேதனையில் வாடிக் கொண்டிருந்தாலும், பிறருக்குத் துன்பம் விளைவிக்கும் காரியங்களை ஒருபோதும் செய்யமாட்டார்.

பொதுநலவாதி என்பதைவிடப் பிறருக்கு எவ்விதத்திலும் மனதால் கூடத் தீங்கு நினைக்காதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்குப் பெயர் நன்கு அமைந்துவிடுமேயானால், நல்ல குடும்பம், நல்ல குழந்தைகள், நல்ல ஆரோக்கியம், நிறைந்த செல்வம் ஆகியவை அமைந்து வாழ்வர். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால், குடும்ப வாழ்க்கை குழப்பமான வாழ்க்கையாக மாறி வாடுவர் அல்லது திருமணம் ஆகாது காலம் தாழ்த்திக் கொண்டே செல்வதால் வேதனையடைவர்.

இன்னும் சிலர் நோயாலோ, முன்னேற்றம் பெறத் திறமையிருந்தும் வழி தெரியாததாலோ மனவேதனை அடைவர். இதனால் பெயரை நன்றாக அமைத்துக் கொள்வது அவசியம். இயற்கையிலேயே இவர்களுக்குத் தனிமையில் சிந்தனை செய்து கொண்டிருப்பதில் அலாதி இன்பம். கற்பனை செய்து எழுதுவதிலும், தியானம் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் உண்டு.

இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் திருமணமே ஆகாது சாமியாரைப் போன்று கழித்து விடுகின்றார்கள். இன்னும் சிலர் காமுகராகிச் சில சிக்கல்களில் மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்கின்றனர். பிடிவாத குணமும் இவர்களுக்கு இயற்கையிலேயே உண்டு. ஆனால் பெயர் நன்றாக அமையப் பெற்றவர்களுக்கு வாழ்க்கை சிறப்பாக அமைந்து விடுகின்றது.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாத இவர்கள், எவ்வளவு துன்பம் வந்தாலும் தனக்குள்ளே வைத்துப் புழுங்குவர். சிறந்த கல்வி பெற்று, அதிகார உத்தியோகத்தில் இருந்தாலும் எல்லா வசதிகளையும் பெற்று வாழ்ந்தாலும், சமுதாயத்தை விட்டு ஒரு தனி மனிதன்போல் ஏதோ ஓர் வேதனையுடன் வாழ்ந்து கொண்டிருப்பர்.

துன்பத்தில் துவளத்தான் நாம் தோன்றியிருக்கின்றோம் என்று தனக்குள்ளே எண்ணிக் கொள்ளுவர். ஆண்களாக இருந்தால் பெண்களினால் ஏமாற்றம் அடைந்தோ பெண்களாக இருந்தால் ஆண்களால் ஏமாற்றம் அடைந்தோ, அல்லது விவாகரத்து ஏற்பட்டோ குடும்பம் என்றால் நரகம் என்று எண்ணிக்கொண்டு என் முன் சிலர் அழுததை நான் கண்டிருக்கிறேன். 40 வயதிற்கு மேல் திருமணம் ஆகாது வேதனைப்பட்டுப் பக்தியிலும் விரக்தி ஏற்பட்டு வேதனையுடன் வாழ்கின்றனர். ஆனால் பெயர் பொருத்தமாக அமையப் பெற்றவர்கள், படிப்படியாகத் தன் வாழ்க்கையை உயர்த்திக் கொண்டும், தனது மனைவி மக்களுடன் சிறப்புற்றும் வாழ்கின்றனர்.

இவர்களுக்குப் பிறர் செய்வது அனைத்தும் தவறாகத் தென்படும். இவர்களுடைய பழக்கவழக்கங்கள் ஒத்துப் போவதில்லை. தெய்வம், பேய், மந்திரம் இவற்றில் இவர்கள் மனம் நாடிச் செல்லும். மருத்துவம், சட்டம், சமயம், கலை, கலாசாரம் இவற்றில் ஆராய்ச்சி இருக்கும். சிந்தனை செய்துகொண்டே தான் செல்ல வேண்டிய இடத்தைத் தாண்டிச் செல்லுவர். கால்கள் எங்கோ நடந்து செல்லும். மனம் எங்கோ நடந்து திரியும்.

இப்படித் தவிக்கும் இவர்களுக்கு பெயர் நன்றாக அமைந்து விட்டால் நல்ல வாழ்க்கைத் துணைவர், நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் பெற்று, வீடு, வாகனம், செல்வநிலை உயர்ந்து வாழ்க்கை நடத்துவர். இதனால் பெயரைப் பொருத்தமான நல்ல எண்களில் அமைத்துச் சிறப்படையக் கேட்டுக் கொள்கிறேன்.

***தொழில் :***

எழுதுவதாலும், வழக்குத் தீர்த்து வைப்பதாலும் முன்னேற்றம் காண்பர். மருந்து சம்பந்தமான பொருட்கள், கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், பச்சை நிறப் பொருட்கள், எலக்ட்ரிக், எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் போன்றவற்றால் இலாபமடைவர்.

***நோய் :***

இவர்களுக்கு மனக்குழப்பத்தால் வரும் மனநோயும், தூங்கும் பொழுது கனவுத் தொல்லைகளும், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, மூட்டுவலி, கண் நோய், இருதய வலி, இரத்த அழுத்தம், வாயுக் கோளாறு போன்றவைகள் வர வாய்ப்பிருப்பதால் 42 எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொண்டால் நோயிலிருந்து விடுபடலாம்.

***பெயர் அமைக்கும் முறை :***

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு சுக்கிரன் ஆதிக்கமான 15, 24, 33, 42, 51, 60, 69 போன்ற எண்களிலும், புதன் ஆதிக்கமான 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம். சந்திர ஆதிக்கத்தில் 38, 47 போன்ற எண்களும் நற்பலனைச் செய்யும்.

***பின்பற்ற வேண்டியவை :***

யோகமான எண் - 2, 6, 5.
யோகமான திகதிகள் - 2, 11, 20, 29 ; 6, 15, 24 ; 5, 14, 23.
யோகமான மோதிரக்கல் - வைடூரியம், முத்து, மூன்ஸ்டோன், டைகர்ஸ் ஐ.
யோகமான நிறம் - பச்சை, வெளிர் நீலம், வெளிர் மஞ்சள்.
ஆகாத திகதி - 9, 18, 27.
ஆகாத நிறம் - சிவப்பு.

அடுத்த வாரம் பிறப்பெண் 7, கூட்டெண் 8 பற்றிப் பார்ப்போம்.

## ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

### அணித் தலைவராக ஜெயவர்த்தன நீடிப்பார்!

இலங்கை அணியின் தலைவராக ஜெயவர்த்தன உலகக் கோப்பை முடியும் வரை நீடிப்பார் என்று இலங்கை தேர்வுக் குழுத் தலைவர் அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்து வந்த மாவன் அத்தப்பத்துவுக்கு கடந்த பெப்ரவரி மாதத்தில் காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஜெயவர்த்தன பதில் அணித் தலைவராக நியமிக்கப்பட்டார். நியூஸிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில், அணிக்குத் தலைமை தாங்கிய ஜெயவர்த்தன திறமையாகச் செயற்பட்டதால், அவர் அணித் தலைவராகத் தொடர்ந்தும் நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டது.

சமீபத்தில் இந்தியாவில் நடந்த மினி உலகக் கோப்பைப் போட்டியில், இலங்கை அணி அரை இறுதிக்குத் தகுதி பெறவில்லை. இதனால் ஜெயவர்த்தன அணித் தலைவர் பொறுப்பிலிருந்து மாற்றப்படுவாரா? என்ற கேள்விக்குறி எழுந்தது.


மஹேல ஜெயவர்த்தனா

இந்நிலையில், அணித் தலைவர் பொறுப்பை ஏற்றது முதல் சிறப்பாகச் செயற்பட்டு வரும் ஜெயவர்த்தன, அடுத்த ஆண்டு (2007) மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் உலகக் கோப்பைப் போட்டி முடியும் வரை அணித் தலைவராக நீடிப்பார் என்று இலங்கை அணித் தேர்வுக் குழுத் தலைவர் அஷந்த டி மெல் கொழும்பில் கடந்த 06-11-06 அன்று அறிவித்துள்ளார்.


ஜெயவர்த்தன அணித் தலைவர் பொறுப்பை ஏற்ற பிறகு துடுப்பாட்டத்தில் சிறப்பான திறமையை வெளிப்படுத்தி வருகிறார். அவர் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டியில் 374 ஓட்டங்களைக் குவித்து, டெஸ்ட்டில் ஒரே இன்னிங்ஸில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் வரிசையில் நான்காவது இடம் பிடித்தார். அத்துடன், இவ்வருடத்திற்கான சிறந்த அணித் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

நான் பிறந்தது உங்களுக்கு சேவை செய்ய மட்டுமே...

பண்டாரவளை மலையான மகா வசிய மாந்திரீகம்..

ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள



இன்றே தொடர்பு கொள்ளவும் 057-2224591-92

ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அதிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுபட இருதடவை. யோசிக்காமால் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்
தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

சந்திப்பு
பண்டாரவளையில்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை
வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

சகலவிதமான வசிய மாந்திரீகம்
- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர,
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

ஷர்மா சாமி அவர்கள்
P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

# லாவோ - தசு (கி.மு.400)

அவர் தம் வாழ்நாளில் ஒரு பகுதியில், சூ அரசர்களின் தலைநகராக இருந்த லோயாங் நகரில் ஒரு வரலாற்றாசிரியராக அல்லது அரசு ஆவணக் காப்பகக் காப்பாளராக பணியாற்றினார். லாவோ-தசு என்பது அவருடைய இயற்பெயர் அன்று. அது மூத்த குரு எனப் பொருள்படும் ஒரு விருதுப் பெயரேயாகும். அவர் மணமானவர். அவருக்கு தசுங் என்ற மகன் இருந்தான். தசுங் பின்னர் வேய் அரசில் ஒரு தளபதியானான்.

தாவ் நெறி அடிப்படையில் ஒரு சமயச் சார்பற்ற தத்துவமாகத் தோன்றிய போதிலும், அதிலிருந்து இறுதியில் ஒரு சமய இயக்கம் உருவாகியது. ஆயினும், ஒரு தத்துவம் என்ற முறையில் தாவ் நெறியானது 'தாவ்-தே-சிங்' நூலில் கூறப்பட்டுள்ள கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும், தாவ் சமயம் விரைவிலேயே லாவோ-தசுவின் போதனைகளுடன் சிறிதும் தொடர்பில்லாத ஏராளமான மூடநம்பிக்கைகளையும், பழைய பழக்க வழக்கங்களையும் சேர்த்துக் கொள்கிறது.

'தாவ்-தே-சிங்'நூலின் ஆசிரியர் உண்மையிலேயே லாவோ-தசு தான் எனக் கொண்டால், அவருடைய செல்வாக்கு மிகப் பெரிது என்றே கூற வேண்டும். இந்நூல் மிகச் சிறியது. (இதில் ஆயிரத்துக்கும் குறைவான சீன எழுத்துக்களே உள்ளன. எனவே, இதனை ஒரு செய்தி இதழின் ஒரு தனித் தாளில் அடக்கி விடலாம்.)

ஆனால், இதில் சிந்தனைக்கு நிறையவே தீனி இருக்கிறது. தாவ் நெறித் தத்துவஞானிகள் அனைவரும் தங்கள் கோட்பாடுகளுக்கு இந்த நூலையே தொடக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

# உலகை வியக்க வைத்தவர்கள்

மேலை நாடுகளில், கன்ஃபூசியசின் அல்லது வேறெவரேனும் கன்ஃபூசியத் தத்துவஞானியின் எழுத்துக்களைவிட, 'தாவ்-தே-சிங்' நூல்தான் மிக அதிகமாக செல்வாக்குப் பெற்றுள்ளது. உண்மையைக் கூறின், இந்நூலின் 40 வெவ்வேறு ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. விவிலிய நூல் நீங்கலாக, வேறு எந்த நூலுக்கும் இத்தனை மொழிபெயர்ப்புகள் வெளிவந்ததில்லை.

சீனாவில் கூட கன்ஃபூசிய நெறிதான் பொதுவாக ஆதிக்கம் பெற்றிருந்தது. லாவோ-தசுவின் கொள்கைக்கும், கன்ஃபூசியசின் கொள்கைக்குமிடையே தெளிவான முரண்பாடு இருக்குமிடத்து பெரும்பாலான சீனர்கள் கன்ஃபூசியஸ் கொள்கையையே பொதுவாகப் பின்பற்றினார்கள். எனினும், கன்ஃபூசியஸ் ஆதரவாளர்கள் கூட லாவோ-தசுவை பெரிதும் மதித்துப் போற்றினார்கள். மேலும், பல நேர்வுகளில், தாவ் நெறிக் கொள்கைகள், கன்ஃபூசியஸ் தத்துவத்தில் இரண்டற இணைத்துக் கொள்ளப்பட்டன. அதன் மூலம், தங்களை தாவ் நெறியாளர்கள் எனக்கூறிக் கொள்ளாத பல கோடி மக்கள் மீது தாவ் நெறிக் கொள்கைகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. அதே



போன்று, சீனப் பௌத்த சமயத் தத்துவ வளர்ச்சியிலும் குறிப்பாக, ஜென் புத்த மார்க்கத்தின் வளர்ச்சியிலும், தாவ் நெறி குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. இன்று தாவ் நெறியாளர் எனத் தங்களைக் கூறிக் கொள்கிறவர்கள் மிகக் குறைவாகவே இருந்தபோதிலும், கன்ஃபூசியஸ் நீங்கலாக, லாவோ-தசுப் போன்று மனிதச் சிந்தனையில் பரவலாகவும் நிலையாகவும் செல்வாக்குப் பெற்ற வேறொரு சீனத் தத்துவஞானி எவரும் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

**அடுத்த வாரம்**
**மகாவீரர்**
**வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

"சொல்லுறவன் சொல்லு சுரக்காயிக்கு உப்பில்லை" எண்ட கணக்கா எங்கட நாட்டு நிலைமை ஒரு பக்கம் சொத்தி இழுத்துக் கொண்டு போகுது. இதுக்கிடையில உந்த நவீன காலத்திலையும் கடிதம் எழுதிக் கொண்டும் அனுப்பிக் கொண்டும் இருக்கிற எங்கட கூத்த மைப்புக்காரர் ஏன் அப்புடிச் செய்யினம் எண்டு சம்மந்தமானவரைக் கேட்டனுங்கோ. அண்ணார் என்ன சொன்னவர் தெரியுமோ? கீழ வாசியுங்கோவன்.

"ஹலோ! சம்மந்தமானவரா?"

"யாருக்கு சம்மந்தமானவர் வேணும், நீர் இவ்விதம் பேசுகிறீரே, நீர் யார்? எண்டதை முதலில சொல்லுமன்."

"அது வந்து... நான் கா.பூ... ஞாபகம் இருக்கோ."

"இருக்கு... உம்மை எப்புடி மறக்க முடியும்? சொல்லும், ஏன் என்ன விஷயம்?"

"அதொண்டுமில்லையுங்கோ. எனக்கு ஒரு கடிதம் எழுத வேணும். அதுதான் உங்களிட்டக் கேட்பம் எண்டு எடுத்த நான்."

"என்ன கடிதம். யாருக்கு எழுத வேணும்? அதை ஏன் என்னிட்டக் கேட்கவேணும்?"

"நீங்கள் தானே அண்மையில நல்லா கடிதம் எழுதுனியள். அதுதான் உங்களிட்டக் கேட்பமெண்டு..."

"சரி...சரி என்ன கடிதம் எழுத வேணும்? லவ் லெட்டர் எண்டால் என்னால உடன ஒண்டும் சொல்ல ஏலாது."

"என்ன பைத்தியமா!...'அந்த லெட்டர் எண்டால் கமலஹாசன் பாட்டு மாதிரி 'கண்மணி அன்போடு காதல் நான்... நான் எழுதும் மடல், கடிதம்...'சே...லெட்டர் எண்டு எழுதியிருப்பேனே!

"பின்ன யாருக்குத்தான் எழுத வேண்டும்?"

"சொல்லுறன், முதலில சு.பா.வுக்கு எப்புடி எழுதினியள் எண்டதையும், கொபி அனானுக்கு எப்புடி எழுதினியள் எண்டதையும் ஒருக்காச் சொல்லுவியளோ?"

"சு.பா.வுக்கு எழுதேக்க சும்மா 'அன்புள்ள தம்பி சு.பா.'எண்டு எழுதினாக் காணும் எண்டு சொன்னனான். அவர் குதிரையார் தான் ம்ஹூம்... அது சரிவராது எண்டு 'மாண்புமிகு' எண்டு எழுதச் சொன்னவர்....இனி என்ன செய்யிறது. நானும் ஓம் பட்டிட்டன். பிறகு மாண்புமிகு சு.பா.வுக்கு எண்டுதான் எழுதினாங்கள்!

"அவர் கொபி அனானுக்கு சும்மா மிஸ்டர் எண்டுதான் போட்ட நாங்கள்!!"

"சரி சு.பா.வுக்கு ஏன் கடிதம் எழுதினீங்கள்? நேரடியா சந்திச்சுக் கதைச்சு இருக்கலாமே!!"

"அப்புடித்தான் சொன்னனான். இவர் ரவியான ராயர்தான் கடிதம் எழுதுவம் எண்டவர். நேராப் போனால் அவர் திட்டிறதும், கோபப்படுறதும் உடனடியாகவே கொழும்பு ஊடகங்களுக்குத் தெரிய வந்திடுமாம். வன்னி எண்டால் அங்க என்ன நடந்தாலும் அது வெளியில வராது எண்டதால தான் கடிதமே நல்ல ஐடியா எண்டு எழுதினனாங்கள். சரி, நீர் யாருக்குக் கடிதம் எழுதப்போறீர் எண்டதை இன்னும் சொல்ல இல்லையே."

"சொல்லுறனுங்கோ. அதுக்கு முதலில இனி யார், யாருக்கு கடிதம் எழுதத் திட்டம் போட்டிருக்கியள் எண்டு ஒருக்காச் சொல்லுவீங்களோ?"

"உதில என்ன இருக்கு. நாங்கள் உலகம் பூராகவும் இனிமேல் கடிதம் எழுதப்போறம். ஏன் தெரியுமோ? நாங்கள் கடிதம் எழுதிற விஷயம் நல்லா எடுபட்டிருக்குது. அதாலை எங்கட அடுத்த லிஸ்டில முதல் பத்து இடங்களில இருக்கிறவையை மட்டும் சொல்லுறேன் கேளுங்கோ. ஜோர்ஜ் டபுள்யூ. புஷ், பில் கிளிண்டன், சோனியா காந்தி, கருணாநிதி, டொனி பிளேயர், முஷாரப், எலிசபெத் மகாராணி, பாப்பரசர், அவர் யகூசி, இவர் எரிக் எண்டு ரொம்ப நீளமானதுங்கோ."

"உவைக்கெல்லாம் கடிதம் எழுதப் போறியள். உங்கள் தற்போதைய ஏக தலைவருக்கு ஏன் ஒரு வரிதன்னும் எழுதிறதைப் பற்றி யோசிக்கயில்லை."

"எழுதவேணும் தான். அதுக்கு முதலில இவைக்கு எழுதவேண்டிக் கிடக்கு. அவ்விதம் எழுதினாத்தான் அவருக்கு எழுதேக்க நல்ல பிள்ளை மாதிரி எழுதலாம் தெரியுமோ!"

"பொய் சொல்லுறியள் - அவருக்குக் கடிதம் எழுதினால் எப்புடி, எந்த விலாசத்துக்கு அனுப்புறதெண்டு யோசிக்கிறியள். அப்புடி இல்லை எண்டால் அவருடைய விலாசத்தை வெளியில எழுதப் பயப்படுகிறியள். அப்புடித்தானே?"

"உதில என்ன பயம் எண்டிறீர், அவர் வயசில என்னுடைய அனுபவத்துக்கும் மிகக் குறைஞ்சவர் எண்டாலும், மே தகு எண்டோ. ஜூன் தகு எண்டோ போட்டு பிரபாகரன் எண்டு எழுதி, பங்கர் நம்பர் மூண்டு, காட்டு வீதி, சந்தடி பங்கர்ச் சந்தி, வன்னிக்காடு, பெருங்காடு போஸ்ட் எண்டால் அடுத்த நாளே போய், கிளீனா அவரின்ட கையில கிடைச்சுடும். உதுக்கு ஏன் நாங்கள் பயப்பட வேணும்?

"விலாசம் சரி. அதை எழுதிப்போட்டு கடிதத்தை எங்க போடுவியள்?

"உதென்னடாப்பா வம்பாப் போயிட்டுது. அவருக்குக் கடிதம் எண்டால் சு.பா.வின்ர..."

"வாயிலையோ..."

"சே...சே...அவரின்ர பொக்கற்றுக்குள்ளயே போட்டு விட்டால் அது போயிடும்."

"அப்புடியெண்டால் அவரின்ர போஸ்ட் மேன் தான் வெளி உலகுக்கு அரசியல் துறைப் பொறுப்பாளரோ...?"

"தம்பி, உது வில்லங்கத்தில என்னை மாட்டிவிடுற கேள்வி. உமக்கு என்ன வேணும் எண்டு முதலில சொல்லுமன்."

"நான் யாருக்கு கடிதம் எழுதவேணுமெண்டதை உங்களுக்கு ஒரு கடிதத்திலை எழுதி அனுப்புறன். இப்ப விடைபெறுறன். பாய்!"

"சே...எப்பப் பார்த்தாலும் உந்த கா.பூ... நம்மட வாயைக் கிண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறானே தவிர, அவன் பிடி கொடுக்கிறான் இல்லையே...இருக்கட்டும். அடுத்த தடவை மடக்கிப் பிடிக்கவேணும்" என்று சம்மந்தமானவர் சோகமாகச் சொல்லிப் போட்டு தான் கதைச்சதை யாரும் கேட்டவையோ எண்டு முழியை நாலா பக்கமும் சுத்திச் சுத்திப் பார்த்தாருங்கோ...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(09.11.2006 தொடங்கி 15.11.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

துலாம் - சூரியன், புதன், செவ்வாய், வெள்ளி. விருட்சிகம் - வியாழன்.
கும்பம் - இராகு. சிங்கம் - சனி (வக்கரகம்) கேது
சந்திரன் மிதுனம், கர்க்கடகம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் பலிதம், பணவரவு, காரியானுகூலம், மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், தூர இடப்பயணம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருக்சீரிடத்து முன்னரை.) தொழில் பகை, காரிய நஷ்டம், வீண் குறை கேட்டல், மனக்குறை நீங்கும், உயர்ந்தோர் நட்பு, இனசன மேன்மை, குடும்பப் பொறுப்பு, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் அலைச்சல், காரியத்தடை, வீண் மனஸ்தாபம், வெளியிடப் பயணம், அந்நியர் சகவாசம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் குழப்பம், மாணவர்க் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், வெளியிடப் பயணம், பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகப் பயம், மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் பலிதம், மனக்குறை நீங்கும், உயர்ந்த எண்ணம், பிரயாண மிகுதி, வீண்குறை கேட்டல், மனக்கலக்கம், குடும்பப் பகை, உத்தியோக உயர்ச்சி, மாணவர்க் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் அலைச்சல், மனகுறையதிகம், தேகசுகக் கஷ்டம், பெரியோர் பகை, வீண் தர்க்கம், இனசன கலகம், குடும்பச் சிக்கல், உத்தியோக நன்மை, மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**துலாம்** : (சித்திரை யின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பலவிதப் பேறு, வெளியிடப் பயணம், உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி, குடும்ப மேன்மை, உத்தியோக உயர்ச்சி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மந்தம், மனப்பயம், பெரியோர் நட்பு, தேகசுகக் கஷ்டம், தூர இடப்பயணம், அந்நியர் சகவாசம், குடும்பப் பாரம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 02.**


**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் நன்மை, பெரியோர் உதவி, பிரயாண மிகுதி, மனக்குறை நீங்கும், தேகசுகக் குறைவு, அந்நியர் சகவாசம், குடும்பக் கலகம், உத்தியோக மாற்றம், மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 07.**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, பணவரவு, மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை, குடும்ப மேன்மை, உத்தியோக நன்மை, பதவிகளில் மாற்றம், மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் கலகம், பணவரவுத் தடை, வீண் மனஸ்தாபம், பெரியோர் சகாயம், குடும்ப நன்மை, உத்தியோகச் சிக்கல், பயமிகுதி, மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனமகிழ்ச்சி, உயர்ந்தோர் நட்பு, வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி, குடும்ப மேன்மை, உத்தியோகப் பற்று, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)



## பரவசம்

மலையின் உச்சியை நீளமான மலைப்பாம்பு சுற்றிக் கிடப்பது போல் இருக்கிறதா? உற்றுப் பாருங்கள். பாம்பு போல் வளைந்து வளைந்து போகும் வீதியில் வாகனங்கள் செல்வதுதான் இந்தக் காட்சி. ஜப்பானில் இலையுதிர் காலம் நிலவுகிறது. அங்கே டோக்கியோ மலையில் உள்ள காட்டுப் பகுதியில் இலையுதிர்க்கால அழகைக் காண வருடா வருடம் மக்கள் வந்து குவிந்து விடுவார்கள். வண்ணமயமான அந்த இயற்கைக் காட்சியைக் காண்பது ஒரு பரவசமான அனுபவம் என்கின்றனர் ஜப்பானியர்கள், ஜப்பானியர்களுக்கு இயற்கை மட்டுமா அழகு? அவர்கள் ஏற்படுத்தும் வாகன நெரிசலும் ஒரு அழகுதானே!



## நடை

நவீன, நாகரீக ஆடை அலங்காரங்களின் வடிவமைப்பு, இன்று உலக மகளிரிடையே ஆடைப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது எனலாம். ஆடை அணிவகுப்புகள் என்றாலே பாதி ஆடை மீதி நிர்வாணம் என்றாகிவிட்டது. இங்கே அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நாய்களுக்கான ஆடைப் போட்டி நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட இந்த நாய்க் குட்டியின் உடை பலரையும் கவர்ந்தது.



## குத்து

தெய்வ நம்பிக்கை இருப்பது தவறில்லை. அதற்காக இப்படி வருத்திக் கொள்ளும்படி எந்த தெய்வமும் சொல்லவில்லையே. நமது நாட்டில் பறவைக் காவடி, தூக்குக் காவடி, தீ மிதிப்பு என்றெல்லாம் அவரவர் நோந்து கொண்டதற்கேற்ப தங்கள் நேர்த்திக் கடன்களைச் செய்வர். இங்கே 16 முள்ளுக் கம்பிகளை தன் வாயைச் சுற்றிக் குத்திக் கொண்டு மற்றவர்களைப் பயமுறுத்தும் விதமாக இருக்கும் பக்தர் தாய்லாந்து புக்கட் பகுதியில் நடைபெற்ற சைவத் திருவிழா ஒன்றில் இவ்வாறு காட்சி தருகிறார். இந்த பக்தருக்கு எந்தச் சாமி இப்படிக் கட்டளை இட்டதோ அல்லது வாயிலேயே இப்படிக் குத்துகிறேன் என்று இவர் நேர்ந்து கொள்ளும் அளவுக்கு என்ன கஷ்ட்டமோ.



## பாய்ச்சல்

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில், இரண்டு வகையான தடியூன்றிப் பாயும் நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுண்டு. உள்ளக அரங்கப் போட்டி, வெளித் திடலில் இடம்பெறும் போட்டியென இரு வகை உண்டு. யெலேனா இஜின்பயேவா என்ற ரஷ்ய வீராங்கனை, 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி பீன்லாந்தின் தலைநகரான ஹெல்சிங்கியில் நடைபெற்ற வெளி மைதானப் போட்டியில் 16 அடி 5.4 அங்குலம் பாய்ந்து சாதனை படைத்தார். உக்ரேயனின், டொனெற்ஸக் நகரில் 2006 பெப்ரவரி 12 ஆம் திகதி நடைபெற்ற உள்ளகப் போட்டியில் 16 அடி 1.3 அங்குலம் பாய்ந்து சாதனை படைத்தார்.



## வேட்டை

முதலைகள் தாக்கியதால், உலகிலேயே மிகப் பெருந் தொகையினர் கொல்லப்பட்ட சம்பவம், பர்மாவின் (மியன்மார்) ரம்றீ தீவையண்டிய சதுப்பு நிலப் பகுதியில் 1945 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்றது. இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில், பத்தாயிரம் பேரைக் கொண்ட ஜப்பானிய இராணுவ அணியானது, இச் சதுப்பு நிலத்தைக் கடந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பத்து மைல் நீளமான இச்சதுப்பு நிலத்தைக் கடந்து இருபது பேர் மட்டுமே உயிர் தப்பினர். 15 அடி வரை நீளமான முதலைகள் இச்சதுப்பு நிலப் பகுதியில், பெருமளவு காணப்படுகின்றன.



## ருசி

ஒரு நிமிடத்துக்குள், 36 கரப்பான் பூச்சிகளை மென்று தின்று உலக சாதனையொன்றை நிலை நாட்டியிருக்கிறார் பிரிட்டிஷ் பிரஜையொருவர். ஜென் எட்வர்ட்ஸ் என்ற இந்த மனிதர், கரப்பான் பூச்சிகளைத் தின்னும் காட்சி, பிரிட்டிஷ் தொலைக்காட்சியில் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது.

2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம், ஐந்தாம் திகதி இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது. 'கின்னஸ்' விதிகளின் படி, முதலில் கரப்பான் பூச்சிகளின் தலைப் பகுதியைக் கொடுவாய்ப் பல்லினால் கடித்த பின்னரே அதனை உண்ண வேண்டும். கரப்பான் கடிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த விதி.